பக்கங்கள் : 12+iv=16

உதயன்

Registered as a Newspaper

விலை ரூபா 8.00

www.uthayan.com

சுடர் 19 வள்ளுவர் ஆண்டு 2035 ஆவணி 29 செவ்வாய்க்கிழமை (14-09-2004) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:294

# அரசு - புலிகள் இடையே தகவல் பரிமாற்றம் இன்னும் இருக்கின்றது என்கிறார் ஹரீம் பீரிஸ்

## பேச்சு விரைவில் தொடங்கும் என்று இங்கு அவர் நம்பிக்கை தெரிவிப்பு



யாழ்ப்பாணம்,செப்ரெம்பர்14

**தடைப்பட்டுப் போயிருக்கும் சமாதான முயற்சிகளை ஆரம்பிப்பது தொடர்பாக அரசின் சமாதானச் செயலகமும் விடுதலைப் புலிகளின் சமாதானச் செயலகமும் தமக்கிடையே தொடர்ந்து தகவல்களைப் பரிமாறி வருகின்றன. இதனடிப்படையில், சமாதானப் பேச்சுக்கள் விரைவிலேயே ஆரம்பிக்கப் பட்டுவிடும்.**

**- இவ்வாறு யாழ்ப்பாணத்தில் நம்பிக்கை வெளியிட்டிருக்கின்றார் ஜனாதிபதியின் ஆலோசகரும் புனர்வாழ்வு நல்லிணக்க அமைச்சின் பணிப்பாளர் நாயகமுமாகிய ஹரீம் பீரிஸ்.**

நேற்று யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்த ஹரீம் பீரிஸ் மாலையில் யாழ். அரச செயலகத்தில் ஊடகவியலாளர்களைச் சந்தித்துக் கருத்துத் தெரிவித்தார். அப்போது அவர் கூறியதாவது:-

கடந்த ஆண்டு ஏப்ரல் மாதம் முதல் சமாதானப் பேச்சுக்கள் தடைப்பட்டுள்ளன. இதனை உடனடியாக ஆரம்பிப்பது இலகுவான விடயம் அல்ல. சமாதானப் பேச்சு விடயத்தில் அரசு மிகவும் நிதானமாகவும் துல்லியமாகவும் செயற்பட்டு வருகின்றது.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## ஜே.வி.பி. இணக்கத்துடனேயே பேச்சு என்கின்றார் ஜனாதிபதி!

**சமாதான முயற்சிகளை அவர்களின் ஆதரவின்றி முன்னெடுக்கமாட்டாராம்**

கொழும்பு,செப்.14

அரசுக் கூட்டமைப்பின் பிரதான பங்காளிக் கட்சியான ஜே.வி.பியின் இணக்கத்துடனேயே எந்த அமைதிப்பேச்சுக்களும் முன்னெடுக்கப் படும். ஜே.வி.பியினரின் ஆதரவின்றி சமாதான முயற்சிகள் எவையும் முன்னெடுக்கப்படமாட்டா.

- இவ்வாறு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க ஜே.வி.பியினருக்கு உறுதிகூறியிருக்கிறார் என்று கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பில் அங்கம்வகிக்கும் கட்சித் தலைவர்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## முகமாலை, ஓமந்தை ஊடாக விரைவில் இரவு 7 மணி வரை போக்குவரத்து!

யாழ்ப்பாணம்,செப்.14

ஏ-9 வீதியில் முகமாலை மற்றும் ஓமந்தைச் சோதனை நிலையங்களை எதிர்வரும் முதலாம் திகதி முதல் இரவு 7 மணிவரை போக்குவரத்துக்குத் திறக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று புனர்வாழ்வு, நல்லிணக்க அமைச்சு பணிப்பாளர் நாயகம் ஹரீம் பீரிஸ் தெரிவித்தார்.

யாழ்.செயலகத்தில் நேற்று மாலை நடத்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## ஊர்காவலரின் சூட்டுக்கு லெப்டினன்ட் மரணம்!

கந்தளாயில் ஊர்காவல் படைச்சிப்பாயின் ரி-56 ரகத் துப்பாக்கியைப் பறிக்க முயன்றவர் எனக்கருதப்படும் இராணுவ அதிகாரி சுட்டுக் கொல்லப்பட்டார். ஊர்காவலர் ஒருவர் படுகாயமுற்றார்.

நேற்று அதிகாலை 1.30 மணியளவில் நடந்த இச்சூட்டுச்சம்பவம் பற்றித் தெரியவருவதாவது:-

கந்தளாய் - திருகோணமலை பிரதான வீதியில் 92 ஆவது மைல் கல்லில் உள்ள சோதனை நிலையத்திற்கு சம்பந்தப்பட்ட இராணுவ அதிகாரி உட்பட மூவர் வானில் வந்துள்ளனர்.

அவர்கள் சோதனை நிலையத்தில் கடமையில் இருந்த ஊர்காவலர் ஒருவரின் ரி-56 ரகத் துப்பாக்கியைப் பிடுங்க முயன்றிருக்

(12 ஆம் பக்கம் பார்க்க)

**தாயகவேள்வியில் தன்னுயிர் ஈந்த**

## திலீபனின் 17 ஆம் ஆண்டு நினைவு நாள் உணர்வெழுச்சியுடன் நாளை ஆரம்பம்!

யாழ்பாணம்,செப்.14

இந்திய அரசுக்கு எதிராக ஐந்து அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து- உண்ணா நோன்பிருந்து உயிர்த்தியாகம் செய்த தியாகி லெப்டினன்ட் கேணல் திலீபனின் 17 ஆவது ஆண்டு நினைவு நாள் நிகழ்வுகள் நாளை ஆரம்பமாகின்றன.

நாளை முதல் தியாகி திலீபன் உயிர்நீத்த தினமான எதிர்வரும் 26 ஆம் திகதி வரை அவரது நினைவு நிகழ்வுகள் தமிழர் தாயகப் பகுதி எங்கிலும் சிறப்பாக அனுஷ்டிப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன.

யாழ்.குடாநாட்டிலும் இந்த நிகழ்வுகளை உணர்வெழுச்சியுடன் அனுஷ்டிப்பதற்கு பொது அமைப்புகளும் பொதுமக்களும் விரிவான ஏற்பாடுகள் செய்திருக்கின்றனர்.

குடாநாட்டின் வீதிகள், முக்கிய சந்திகள் மற்றும் பொது இடங்கள் சிவப்பு, மஞ்சள் கொடிகளால் அலங்கரிக்கப்பட்டு வருகின்றன. பிரதான இடங்களில் நினைவுப் பந்தல் அமைத்து தியாகி திலீபனின் திருவுருவப்படம் வைத்து அஞ்சலி செலுத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றது.

நினைவுப் பந்தல்களில் நாளை காலை 9.55 மணிக்கு பொதுச்சுடர் ஏற்றப்படும். தொடர்ந்து ஈகச்சுடர் ஏற்றப்பட்டு திலீபனின் திருவுருவப்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## குழிக்குள் புதையுண்டவரின் சடலம் நேற்று அதிகாலை மீட்கப்பட்டது!

அச்சுவேலி,செப்.14

குழாய்க்கிணறு அமைப்பதற்காகத் தோண்டப்பட்ட ஆழக் குழிக்குள் புதையுண்ட தொழிலாளியின் சடலம் கடும் முயற்சிக்குப் பின்னர், நேற்று அதிகாலை 2 மணியளவில் குழிக்குள் இருந்து வெளியே எடுக்கப்பட்டது.

ஆழமாகத் தோண்டப்பட்ட குழியின் அடியில் நின்றவாறு குழாய்க் கிணறுக்கான 'பைப்' பொருத்தும் பணியில் ஈடுபட்டிருந்த தொழிலாளி ஒருவர் அந்தக் குழி திடீரெனத் தூர்ந்து மண்ணால் மூடுப்பட்டபோது உள்ளே புதையுண்டமை தெரிந்ததே.

இவரது சடலத்தை வெளியே எடுக்கும் பணி நேற்றுமுன்தினம் இரவிரவாக நடைபெற்றது. குழிக்குள் பெருமளவு தண்ணீர் வெளியேறி இருந்ததால் குழி முழுவதும் சேறும் சகதியுமாக மாறியிருந்தது. இதனால், மீட்பு வேலை

(12 ஆம் பக்கம் பார்க்க)

**தேர்த் திருவிழாவில் திருடர்கள் கைவரிசை**

## நல்லூரில் நேற்று எண்மரின் தங்க நகைகள் அபகரிப்பு!

யாழ்ப்பாணம்,செப்.14

நல்லூர்க் கந்தசுவாமி கோயில் தேர்த் திருவிழாவான நேற்று ஆலயத்துக்கு வருகைதந்த அடியார்களில் எட்டுப்பேர் தங்கள் தங்க நகைகளைப் பறிகொடுத்திருக்கின்றனர். இவர்களில் ஒருவர் தனது தாலிக்கொடியை இழந்துள்ளார்.

ஆலயச் சூழலில் காணப்பட்ட நெரிசலைப் பயன்படுத்தித் திருடர்கள் தங்கள் கைவரிசையைக் காட்டியிருக்கின்றனர். தங்க நகைகளைப் பறிகொடுத்த அனைவருமே பெண்கள் ஆவர்.

இராசாவின் தோட்டத்தைச் சேர்ந்த தியாகராசா தங்கம்மா (வயது 67) என்பவரின் 2

(12 ஆம் பக்கம் பார்க்க)



## நல்லூர்க் கந்தனின் தேர் உற்சவம் பக்திபூர்வமாக நடந்தேறியது

யாழ்ப்பாணம்,செப்.14

நல்லூர்க் கந்தசுவாமி கோயில் வருடாந்த இரதோற்சவம் நேற்று பல்லாயிரக்கணக்கான அடியார்களின் அரோகரா கோஷத்தின் மத்தியில் மிகவும் பக்திபூர்வமாக நடந்தேறியது.

குடாநாட்டின் பல பகுதிகளில் இருந்தும் வன்னி மற்றும் தென்னிலங்கையிலிருந்தும் பக்தர்கள் இம்முறை படையெடுத்து வந்து தேரில் கந்தனைத் தரிசித்தனர்.

பல்வேறு காவடிகள், கரகம், மேளதாளம் தேவாரப் பாராயணம் என்று ஆலயச் சூழல் எங்கும் பக்திமயமாகக் காட்சியளித்தது.

நேற்று அதிகாலை 4.30 மணி முதல் விசேட பூசைகள் நடைபெற்று, 7.45 மணியளவில் சண்முகப் பெருமான் தேரில் ஆரோகணித்தார். பக்தர்களின் அரோகரா கோஷத்துடன் வலம் வந்த அழகிய ரதம் 8.45 மணியளவில் தன் இருப்பிடத்தை அடைந்தது.

பச்சை சாத்தப்பட்டு 9 மணிக்கு சண்முகப் பெருமான் அழகுறக் காட்சிதந்தார்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# சுகாதார சேவையும் மெல்ல மெல்ல தனியார் மயமாவதாகக் குற்றச்சாட்டு

## 52 தொழிற்சங்கங்களின் கூட்டமைப்பு சீற்றம்

கொழும்பு,செப்.14

சுகாதார சேவைகள் படிப்படியாகத் தனியார் மயமாகின்றன. காலப்போக்கில் முழு அரச வைத்தியசாலைகளுமே தனியார் கம்பனிகளாக மாறிவிடும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

வைத்தியசாலை சுத்திகரிப்புப் பிரிவு தனியார் துறையிடம் ஒப்படைக்கப்பட்டு விட்டது.

கொழும்பு தேசிய வைத்தியசாலையின் உணவு விநியோகத்தை தனியார் ஹோட்டல் ஒன்றிடம் ஒப்படைப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இவ்வாறு தனியார் மயப்படுத்தும் நடவடிக்கைகளை தடுத்து நிறுத்தாவிட்டால் பொதுசேவை நிறுத்தப் போராட்டம் வெடிக்கும் என சுகாதார சேவைகள் தொழிற்சங்கங்கள் எச்சரிக்கைவிடுத்துள்ளன.

படிப்படியாக சுகாதார சேவைகள் அனைத்தையும் தனியார் மயமாக்குவதற்கான திட்டத்தின் அடித்தளமே இப்போது அரங்கேறுகின்றது. இதனை ஒருபோதும் அனுமதிக்க முடியாது.

சுகாதார சேவை ஊழியர்களுக்கும் பொது மக்களுக்கும் இடையிலான நல்லுறவைத் துண்டிப்பதற்கே உயர் அதிகாரிகள் இந்தச் சதித்திட்டத்தை வகுத்துள்ளனர்.

ஜனாதிபதியும், பிரதமரும் உடனடியாக இவ்விடயத்தில் தலையிட்டு, சுகாதாரத்துறை எதிர்நோக்கும் பேராபத்தை தடுத்து நிறுத்த வேண்டும். இல்லையேல் நாடளாவிய ரீதியில் அனைத்து வைத்தியசாலைகளினதும் பொது வேலைநிறுத்தம் ஒன்று ஆரம்பிக்கப்படுவது தவிர்க்கமுடியாததாகும் என சுகாதார சேவைகள் ஊழியர் சங்கங்களின் இணை அமைப்பாளரான ரவி குமுதேஷ் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக ஜனாதிபதிக்கும், பிரதமருக்கும் அவசர கடிதங்களை தாங்கள் அனுப்பிவைத்திருக்கிறார்கள் எனக் கூறும் ரவி குமுதேஷ், சாதகமான பதில் கிடைக்காவிட்டால் போராட்டம் உறுதி என்றும் கூறுகின்றார்.

சுகாதாரசேவை ஊழியர்களுக்கும், ஆய்வுகூட ஊழியர்களுக்கும் வழங்கப்படும் பயிற்சிகளுள் 50 வீதம் தனியார்துறையினராலேயே மேற்கொள்ளப்படுகின்றன.

சப்ரகமுவ மாகாணத்தில் கனிஷ்டப் பிரிவு ஊழியர்களின் முகாமைத்துவ நிர்வாகம் தனியார் துறையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

நோயாளர்களுக்குத் தேவையான உணவு, டாக்டர்களின் சிபார்சுகளுக்கு அமைய பலதரப்பட்ட வகையில் நோய்த்தன்மைக்கேற்ப - வைத்தியசாலை சமையல் பிரிவினராலேயே தயாரித்து வழங்கப்படுகின்றன.

இப்பொழுது அதற்கும் ஆப்புவைத்துவிட்டனர். கொழும்பு தேசிய வைத்தியசாலையின் உணவு விநியோகம், தனியார் தோட்ட நிர்வாகம் ஒன்றிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. படிப்படியாக ஏனைய வைத்தியசாலைகளுக்கும் இத்திட்டம் விஸ்தரிக்கப்படலாம்.

நோய்க்கேற்ப உணவு என்ற நிலைமாறி ஹோட்டல்காரர்கள் வழங்கும் உணவையே சாப்பிடவேண்டிய கட்டாயம் நோயாளருக்கு ஏற்பட்டுள்ளது.

இவ்வாறு தனியாருக்கு ஒப்பந்த அடிப்படையில் விடயங்களைக் கையளிக்கும் நடவடிக்கை அனைத்தும் சுகாதார அமைச்சின் உயர் அதிகாரிகள் 'கமிஷன்' பெறுவதற்கான செயற்பாடு என்றும் ரவி குமுதேஷ் கண்டிக்கின்றார்.

சம்பள முரண்பாடு தொடர்பாகப் பிரதமரும் ஜனாதிபதியும் விடுத்த உத்தரவுகளையே ஊதாசீனம் செய்த அதிகாரிகள் நாம் வேலை நிறுத்தப்போராட்டம் நடத்துவதற்கு மூல காரணிகளாக இருந்தனர்.

போராட்டத்தினால் இந்த அதிகாரிகளின் முகமூடிகள் கிழிக்கப்பட்டன.

இப்பொழுது சுகாதார சேவை ஊழியர்களுக்கும், பொதுமக்களுக்கும் இடையிலான தொடர்புகளைத் துண்டிக்கும் வகையிலேயே சுகாதார சேவைகள் முகாமைத்துவ அபிவிருத்தி என்ற பெயரில் பல பொறுப்புக்களை தனியார் மயப்படுத்த முனைகின்றனர்.

இதனை ஜனாதிபதியும், பிரதமரும் தலையிட்டுத் தடுத்துநிறுத்தவேண்டும் என 52 தொழிற்சங்கங்கள் கூட்டாகக் கோரிக்கை விடுத்திருக்கின்றன எனவும் ரவி குமுதேஷ் கூறினார். (க-3)

## ஊடகவியலாளர் சந்திப்பு

யாழ்ப்பாணம்,செப்.14

இலங்கை தேசிய சமாதானப் பேரவையின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணத்துக்கு வரும் தெற்குச் செய்தியாளர் குழுவினர் யாழ். ஊடகவியாலாளர்களை நாளை மாலை 4 மணிக்கு நாவலர் கலாசார மண்டபத்தில் சந்திக்கவுள்ளனர்.

வட இலங்கைப் பத்திரிகையாளர் சங்கம் இந்தச் சந்திப்பை ஏற்பாடு செய்துள்ளது.

இன்று பிற்பகல் யாழ்ப்பாணம் வந்துசேரும் இக்குழுவினர் நாளை யாழ்.ஊடகவியலாளர்கள், உள்ளூர் பிரமுகர்கள், அரச சார்பற்ற நிறுவனப் பிரதிநிதிகள் ஆகியோரைச் சந்தித்து இங்குள்ள நிலைமைகளைக் கேட்டறிவர். (3)




# 'உதார' மூத்தோர் வங்கிக் கணக்கு அறிமுகவிழா நேற்று நல்லூரில்!

யாழ்ப்பாணம்,செப்.14

கொமர்ஷல் வங்கியின் 'உதார' மூத்தோர் கணக்கு அறிமுகவிழா நேற்று நல்லூர்க் கந்தன் தேர்த்திருவிழாவின்போது சிறப்பாக நடைபெற்றது.

நல்லூர் சிவன்கோயிலுக்கு அண்மையில், கொமர்ஷல் வங்கியின் யாழ்ப்பாணக் கிளை அமைத்திருந்த காட்சிச்சாலையில் நேற்று முற்பகல் ஒன்பது மணியளவில் நடைபெற்ற இவ்விழாவில்-

கொழும்புத் தலைமையகத்தைச் சேர்ந்த உயர் அதிகாரிகளான ரொஷான் பெரேரா (விசால கொழும்புப் பிரிவின் பிராந்திய முகாமையாளர்), நிமால் லக்ஷ்மன் (உதவிப் பொது முகாமையாளர் - தனியார் வங்கியியல் பிரிவு), டெலிப் பெர்னாண்டோ (உதவிப் பொதுமுகாமையாளர் பரிசோதனைப் பிரிவு), றிச்சார்ட் றொட்றிகோ (பிரதம முகாமையாளர் - சந்தைப்படுத்தல் பிரிவு) ஆகியோர் நேற்றைய விழாவில் விசேட அதிதிகளாகக் கலந்துகொண்டனர்.

கொமர்ஷல் வங்கி யாழ்.கிளையின் முகாமையாளர் எஸ்ரவீந்திரா தலைமையில் "உதார" - மூத்தோர் கணக்கு அறிமுகவிழா நடைபெற்றது.

மூத்தோர் கணக்கை யாழ். கிளையில் முதலில் தொடங்கியவர்கள் நேற்றைய விழாவுக்கு அழைக்கப்பட்டு அவர்களுக்குக் கொழும்பிலிருந்து வந்த உயர் அதிகாரிகள் "உதார' கணக்குப் புத்தகங்களையும் பரிசில்களையும் வழங்கினார்.

"அருணலு" சிறுவர்கள் சேமிப்புக் கணக்கை அதிக எண்ணிக்கையில் வைப்புச் செய்த குடும்பத்தவர்களும் தெரிவுசெய்யப்பட்டு அவர்களுக்கும் வெகுமதிகள் வழங்கப்பட்டன.

விழாவில் இறைவணக்கம் நடைபெற்ற போது எடுக்கப்பட்ட (மேலே உள்ளே) படத்தில் கொழும்பிலிருந்து வந்த உயர் அதிகாரிகள் நால்வரும் யாழ்.கிளை முகாமையாளரும் காணப்படுகின்றனர்.

"உதார" மூத்தோர் கணக்கில் வைப்புச் செய்தவர்களில் ஒருவருக்கு வெகுமதி வழங்கப்படுவதை இரண்டாவது படத்தில் காணலாம். (அ)

# மலையகத் தமிழரைத் தனிமைப்படுத்தி வரலாற்றுத் துரோகம் செய்யாதீர்!

## விசனத்துடன் கூறுகிறார் பெ.சந்திரசேகரன்

கொழும்பு,செப்.14

மலையக மக்கள்மீது நான் அதிக அக்கறை கொண்டவன் என்ற ஒரே காரணத்தால்தான் விடுதலைப் புலிகளுடன் தொடர்பை வலுப்படுத்தியுள்ளேன். இனப்பிரச்சினை விடயத்தில் மலையகத்தைத் தனிமைப்படுத்தி ஒரு வரலாற்றுத் துரோகத்தை செய்ய நான் தயாரில்லை.

- இப்படிக் கூறுகிறார் மலையக மக்கள் முன்னணியின் தலைவர் பெ.சந்திரசேகரன்.

மலையக மக்கள் முன்னணி, விடுதலைப் புலிகளுடன் அடிக்கடி சந்திப்புக்களை ஏற்படுத்துவது தொடர்பாக சில ஊடகங்களும் மலையக அரசியல்வாதிகளும் மோசமாக விமர்சனம் செய்துவருவது குறித்து உதயனுக்கு கருத்துத் தெரிவித்த அவர், மேலும் கூறியதாவது:-

இலங்கைத் தமிழர்கள் ஒட்டுமொத்தமான ஒரு தீர்வை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கும் சமயத்தில் மலையகத்தைத் தனிமைப்படுத்த முடியாது. விடுதலைப் புலிகளுடன் பேச்சுக்கள் இடம்பெறும்போது அப்பேச்சுக்களில் தம்மையும் இணைத்துக்கொள்ளும்படி முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் வலியுறுத்தி வருகிறார். இன்று அவர்களையும் இணைத்துக் கொள்ளவேண்டும் என்ற கருத்து வலுத்து வருகிறது. இப்படியான ஒரு சூழ்நிலையில் மலையகத் தமிழருக்கு ஏற்படப் போகும் நிலை என்ன?

தூர நோக்குடன் இதுபற்றி நாம் நீண்ட கலந்துரையாடல்களை நடத்தியுள்ளோம்.

சிறுபிள்ளைத் தனமாகச் சிந்திப்பது மலையகத்துக்கு ஆரோக்கியத்தைத் தராது. மலையக மக்கள் தமது உரிமைகளைப் பெற்றுக் கொள்ள ஆயுதம் தூக்க முடியாது.

ஒட்டுமொத்தமாக தமிழர்களுக்கு ஒரு தீர்வு ஏற்படும்போது அதில் மலையகத் தமிழருக்கும் ஒரு தீர்வுகிட்ட வேண்டும் என்ற நோக்குடனேயே நாம் செயற்படுகின்றோம். இதுவிடயமாக நாம் விடுதலைப் புலிகளுடன் மனம் விட்டுக் கதைத்துள்ளோம்.

வடக்கு- கிழக்குப் பிரச்சினையுடன் மலையகத்தை ஒப்பிடக்கூடாது எனக் கூறுவார்களாயின் விடுதலைப் புலிகள் முன்வைத்துள்ள இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை யோசனையை அடிப்படையாகக் கொண்டு பேச்சுக்களை முன்னெடுக்கவே தாம் அரசுக்கு ஆதரவு வழங்கப் போவதாகக் கூறி அரசுடன் இ.தொ.கா. இணைந்துள்ளது ஏன்

எனவே, சிறுபான்மைத் தமிழர்களாகிய நாம் வடக்கு - கிழக்குப் பிரச்சினையை ஒதுக்கி விட்டு கிணற்றுத் தவளையாக வாழ முடியாது!. தமிழர்கள் என்றால் எல்லோரும் ஏறத்தாழ ஒரே மாதிரியான பிரச்சினையைத்தான் இலங்கையில அனுபவிக்கிறார்கள் என்பதுதான் உண்மை - என்றார் அவர். (க-3)

## வல்லிபுர ஆழ்வார் கொடியேற்றம்

வடமராட்சி, செப்.14

வடமராட்சி ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் கோவில் வருடாந்தப் பெருந்திருவிழா நேற்று முற்பகல் 11 மணியளவில் பெருந்திரளான பக்தர்கள் புடைசூழ கொடியேற்றத்துடன் ஆரம்பமானது.

முற்பகல் 10.30 மணிக்கு ஆரம்பமான கொடித்தம்பப் பூஜையைத் தொடர்ந்து கொடியேற்றம் இடம்பெற்றது.

இப்பெருந்திருவிழா தொடர்ந்து 17 தினங்கள் நடைபெறும். (ஐ-173)

### பலத்த பொலீஸ், இராணுவப் பாதுகாப்புடன்

# ஈ.பி.டி.பி. உறுப்பினரின் சடலம் பருத்தித்துறையில் நேற்றுத் தகனம்

வடமராட்சி,செப்.14

ஊர்காவற்றுறையில் சுட்டுக்கொல்லப்பட்ட ஈ.பி.டி.பியின் யாழ்.மாவட்ட நிதிப் பொறுப்பாளரும் முன்னாள் பருத்தித்துறைப் பிரதேச சபை உறுப்பினருமான மாயவன் சந்திரமோகனின் (அருள்தாஸ்) பூதவுடல் நேற்று வாகனத்தில் பலத்த இராணுவப் பொலீஸ் பாதுகாப்புடன் அவரது சொந்த இடமான பருத்தித்துறைக்கு எடுத்துச்செல்லப்பட்டது.

இவரது பூதவுடல், யாழ்.ஸ்ரான்லி வீதியில் உள்ள ஈ.பி.டி.பி. அலுவலகத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு பின்னர், வாகனத்தில் படையினரின் பாதுகாப்புடன் ஊர்வலமாக பருத்தித்துறைக்கு கொண்டுவரப்பட்டது.

வரும்வழியில் ஈ.பி.டி.பியின் அச்சுவேலி, நெல்லியடி, பருத்தித்துறை அலுவலகங்களுக்கும் பூதவுடல் கொண்டுசெல்லப்பட்டது. கட்சியின் அலுவலகங்கள் அனைத்திலும் கறுப்புக் கொடிகள், தென்னோலை தோரணங்கள், வாழைகள் என்பன கட்டப்பட்டிருந்தன. அலுவலகங்களுக்கும் பலத்த பாதுகாப்பு வழங்கப்பட்டிருந்தது.

இறுதியாக இவரது பூதவுடல் பருத்தித்துறை வி.எம். றோட்டில் உள்ள இவரது உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டு பருத்தித்துறையில் தகனஞ்செய்யப்பட்டது. (ஐ-173)

# வடக்கு -கிழக்கிலேயே நியமனம் என்று அறிவிப்பு

கொழும்பு,செப்.14

கல்வியியற் கல்லூரிகளில் டிப்ளோமோ கற்கைநெறிகளில் சித்தியடைந்துள்ள அனைவருக்கும் வடக்கு - கிழக்கில் அவர்கள் நிரந்தரமாக வசிப்பவர்களாயின் அப்பகுதியிலேயே அவர்களுக்கு நியமனங்கள் வழங்கப்படும் என்று கல்வி அமைச்சின் செயலாளர் டாக்டர் தாரா டிமெல் அறிவித்துள்ளார்.

கல்வியியற் கல்லூரிகளில் தமிழ்மொழி மூலம் தமது பாடமொழிகளை முடித்துள்ள மாணவர்கள் தொடர்பாக யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா கல்வியமைச்சருக்கு அனுப்பியிருந்த கடிதமொன்றுக்கு அனுப்பியுள்ள பதிலிலேயே அமைச்சின் இந்த முடிவை டாக்டர் தாரா டிமெல் அறிவித்துள்ளார். இம்முடிவுக்கமைய நியமனங்களை வழங்குவதற்கான சகல ஏற்பாடுகளும் செய்யப்பட்டு வருவதாகவும் அவர் அறிவித்துள்ளார். (ப)

## கொழும்பு பங்குப் பரிவர்த்தனை(நேற்றையது)

பங்குச்சந்தை புள்ளிவிவரங்களும் கம்பனி அறிவித்தல்களும் திங்கட்கிழமை, செப்-13-2004

| சந்தைப்புள்ளிவிவரம் | இன்று | முந்திய நாள் | புள்ளி மாற்றம் | %மாற்றம் |
|---|---|---|---|---|
| அனைத்துப்பங்கு விலைச்சுட்டி (ASPI) | 1419.10 | 1413.37 | 5.73 | 0.41 |
| மிலங்கா விலைச்சுட்டி (MPI) | 2110.83 | 2104.24 | 6.59 | 0.31 |
| மொத்த வருவாய்ச்சுட்டி (TRI) ASTRI - அனைத்துப் பங்குகள் | 1468.20 | 1462.17 | 6.03 | 0.41 |
| MTRI - மிலங்கா பங்குகள் | 2192.73 | 2185.88 | 6.85 | 0.31 |
| சந்தைப்புரள்வு (மில்லியன் ரூபாயில்) | 304.7 | 187.6 | | |
| கைமாற்றப்பட்ட பங்குகளின் எண்ணிக்கை (மில்லியனில்) | 11.3 | 10.1 | | |
| மொத்தக் கொடுக்கல் வாங்கல் | 3147 | 3091 | | |
| சந்தை மூலதனம் (பில்லியன் ரூபாயில்) | 348.7 | 347.3 | | |

**இன்றைய பங்கிலாப அறிவித்தல்கள்**

| கம்பனி பெயர் | பங்கிலாபம் (%) | XDதிகதி | பணம் செலுத்துகை |
|---|---|---|---|
| அலையன்ஸ் பினான்ஸ் கம்பனி லிமிட்டெட் | 25 % முதலும் கடைசியும் | 13-10-2004 | 29-10-2004 |

உதயன்

# கூட்டுக்குள் வேட்டு!

ஒரு மாட்டு வண்டியை, மாடுகள் நாலாபுறமும் இருந்து இழுத்தால் வண்டில் என்னாகும் என்பது பற்றி இப்பத்தியில் பிரஸ்தாபித்திருந்தோம். அந்த நிலையில்தான் இன்றைய அரசு உள்ளது என்பதைச் சுட்டிக் காட்டியிருந்தோம்.

அந்தக் கருத்து முற்றும் முழுதும் சரியானதே என்பது தொடர்ந்தும் உறுதிப்படுத்தப்பட்டுவருகின்றது.

ஆட்சியைப் பிடித்திருக்கும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு கொள்கை ரீதியான ஒரு கூட்டமைப்பு அல்ல. ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்காக - அதிகார ஆசைக்காக - இடம்பெற்ற ஒரு சந்தர்ப்பவாதக் கூட்டு என்பதே உண்மை என்பது நிருபணமாகிவருகிறது.

நாட்டின் தேசியப் பிரச்சினையான இனப்பூசலுக்கு - பிணக்குக்கு - இணக்கத் தீர்வு காணும் விடயத்தில் ஆகட்டும் -

நாட்டின் பொருளாதார விவகாரங்களைக் கையாளும் சித்தாந்தங்களில் ஆகட்டும் -

ஆட்சிமுறை அமைப்புப் பற்றிய கொள்கைகளில் ஆகட்டும் -

மொத்தத்தில் அரசியல் கருத்துக்களில் ஆகட்டும் -

எந்த மட்டத்திலும் உடன்பட்டுப்போகாத அணிகளின் கூட்டு, ஆட்சியைக் கைப்பற்றியிருக்கின்றது. அதன சீரழிவுகளை நாடு எதிர்கொண்டு பரிதவிக்கின்றது.

ஐ.தே.முன்னணி அரசை வீட்டுக்கு அனுப்புவதிலும், தங்களுக்குள் கூட்டுச் சேர்ந்து ஆட்சியைக் கைப்பற்றுவதிலும் மட்டுமே இணங்கியோர் இன்று ஆட்சிப் பீடத்தில்.

கூட்டமைப்பின் பிரதான பங்காளிக் கட்சியான ஜே.வி.பி., இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான அமைதி முயற்சிகளுக்கு ஒருபுறம் முட்டுப்போடுகின்றது.

மறுபுறம் தனியார் மயப்படுத்தலுக்கு எதிராகப் போர்க்கொடி தூக்கி வீறுகொண்டு நிற்கிறது.

அமைதி முயற்சிகள் முன்நகராததால் சர்வதேச உதவிகள் நாட்டுக்குக் கிடைப்பது கஷ்டமாகிவிட்டது. தனியார் மயமாக்கல் மூலமாவது நிதியைத் திரட்டலாம் என ஜனாதிபதியும் அவரது பொ.ஐ. முன்னணியும் முயற்சித்தாலும் அதற்கும் ஜே.வி.பி. முட்டுக்கட்டை போடுகின்றது.

ஜே.வி.பியின் இழுபறிக்கு இனிமேலும் விட்டுப்பிடிக்க முடியாது என்பதை உணர்ந்துகொண்ட ஜனாதிபதி தன்பாட்டில் விடயங்களை முன்நகர்த்த முடிவுசெய்துவிட்டார் போல் தோன்றுகின்றது.

பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தைத் தனியார் மயப்படுத்தும் அரசின் முடிவுக்கு எதிராகக் கூட்டுத்தாபன ஊழியர்களை வீதிக்கு இறக்கி எதிர்ப்பைக் காட்டியது ஜே.வி.பி.

அடங்கிப் போவதுபோல அமுக்கி வாசித்து, இப்பிரச்சினையை அப்போதைக்கு அரசு சமாளித்தது. தங்கள் எதிர்ப்பால் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தைத் தனியார் மயப்படுத்தும் முயற்சியை அரசு கைவிட்டுவிட்டது என மார்தட்டிப் புளகாங்கிதம் அடைந்தனர் ஜே.வி.பியினர்.

ஆனால், விடயத்தைக் காதோடு காதாக நகர்த்தி, தனியார் மயப்படுத்தலை இப்போது ஒப்பேற்றி விட்டதாம் அரசுத் தரப்பு.

பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தில் மூன்றாவது பங்காளருக்கு இடமில்லை என்று இங்கு கூறிவிட்டு இந்தியாவில் ஆடம்பர ஹோட்டல் ஒன்றில் பங்கு ஒப்பந்தம் தொடர்பாக அமைச்சர்கள் இரகசியமாகப் பேசுகின்றார்கள்.

ஜே.வி.பியினருக்குத் தெரியாமலேயே ஒப்பந்தத்தில் கைச்சாத்திடப்படவுள்ளது. துணிவிருந்தால் அரசு இதைப் பகிரங்கமாக மறுக்கட்டும் - என்று நாடாளுமன்றத்தில் ஐ.தே.கட்சி நாடாளுமன்ற உறுப்பினரும், முன்னாள் பிரதி நிதியமைச்சருமான பந்துல குணவர்த்தனா சில தினங்களுக்கு முன்னர் நாடாளுமன்றில் பகிரங்கமாகச் சவால் விடுத்திருந்தார்.

அரசு, அதற்குச் சரியான பதில் தராமல் 'கப்சிப்' என்று அடங்கி இருந்துவிட்டது. இப்போது திறைசேரிச் செயலாளர் மெல்ல விடயத்தைக் கசிய விட்டிருக்கிறார்.

"பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தில் தனியார் பங்காளர்களைச் சேர்த்துக்கொள்வதற்கு கேள்விப் பத்திரம் கோரும் விவகாரம் இறுதிக் கட்டத்துக்கு வந்துவிட்டது. இனிமேல் அரசுத் தரப்பு தன்பாட்டில் இதிலிருந்து பின்வாங்கமுடியாது"- என்று குட்டைப் போட்டு உடைத்திருக்கிறார் திறைசேரிச் செயலாளர்.

இதேபோல, சர்ச்சைக்குரிய சுகாதார சேவைகளிலும் சில பிரிவுகளைத் தனியார் மயப்படுத்த அரசு திட்டமிடுவதாகச் செய்திகள் வெளியாகியிருக்கின்றன.

இப்படிக் கூட்டுச் சேர்த்த கட்சிக்குத் தெரியாமலேயே வேட்டுவைக்கும் வேலைகளை ஜனாதிபதி தரப்பும் அவருக்கு நெருக்கமான அரச உயர்பீடங்களும் முனைப்பாக முன்னெடுக்கின்றன என்று கூறப்படுகிறது.

கூட்டுச் சேர்ந்த பங்காளிக் கட்சிக்கே இவ்வாறு இரகசியமாக வேட்டு வைக்கும் அரசுத் தலைமை, தமிழர்களோடு பேசி இனப்பிரச்சினைக்கு அமைதித் தீர்வு காணும் முயற்சிகளில் நேர்மையுடன் செயற்படும் என்று எப்படி எதிர்பார்க்க முடியும்? எவ்வாறு நம்பமுடியும?

## தமது சகாவின் கொலையைக் கண்டித்து

# கண்காணிப்புக்குழு அலுவலகம் முன்பாக ஈ.பி.டி.பி. உறுப்பினர்கள் ஆர்ப்பாட்டம்

யாழ்ப்பாணம்,செப்.14

ஊர்காவற்றுறையில் சுட்டுக்கொல்லப்பட்ட ஈ.பி.டி.பி. உறுப்பினரின் கொலையைக் கண்டித்து ஈ.பி.டி.பி. உறுப்பினர்கள் நேற்றுக்காலை போர் நிறுத்தக் கண காணிப்புக் குழுவின் யாழ். அலுவலகம் முன்பாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

கடந்த சனிக்கிழமை மாலை ஊர்காவற்றுறை, கரம்பனில் வைத்து ஈ.பி.டி.பியின் யாழ். மாவட்ட நிதிப் பொறுப்பாளர் அருள்தாஸ் என்பவர் சுட்டுக்கொல்லப்பட்டிருந்தார்.

இந்தக் கொலையைக் கண்டித்து நேற்றுக்காலை 10 மணியளவில் யாழ் கோயில் வீதியில் அமைந்துள்ள போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் யாழ். அலுவலகம் முன்பாக 10 பேர் வரையிலான ஈ.பி.டி.பி. உறுப்பினர்கள் இந்த ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் கொலையைக் கண்டித்து பல சுலோக அட்டைகளைத் தாங்கியிருந்தனர்.

பொலீஸாரும், இராணுவத்தினரும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்களுக்குப் பலத்த பாதுகாப்பு வழங்கியிருந்ததையும் காணமுடிந்தது.

இறுதியாகப் போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் யாழ். அலுவலக அதிகாரியிடம் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் மகஜர் ஒன்றையும் கையளித்தனர். (4-7)



# தனிச்சிங்களத்தில் நடைபெற்று முடிந்த தேசியமட்ட விளையாட்டுப் போட்டி!

வட்டக்கச்சி,செப்.14

கடந்த 4ஆம், 5ஆம், 6ஆம் திகதிகளில் கொழும்பில் நடைபெற்ற பாடசாலைகளுக்கிடையிலான தேசிய மட்ட விளையாட்டுப் போட்டிகளின்போது தமிழ் மொழி முற்றுமுழுதாகப் புறக்கணிக்கப்பட்டதாகச் சுட்டிக்காட்டப்பட்டிருக்கின்றது.

இப்போட்டிகளின்போது போட்டியாளர்களுக்கான அறிவுறுத்தல்கள், அறிவித்தல்கள், அழைப்புகள் என்பன தனிச் சிங்களத்திலேயே வழங்கப்பட்டன.

அதுமட்டுமன்றி போட்டிகளின்போது ஏற்படும் சிக்கல்களைத் தீர்ப்பதற்கான கலந்துரையாடல்கள், தீர்ப்பு அறிவித்தல், பரிசளிப்பு நிகழ்வு போன்றவற்றிலும் தமிழ் மொழியை மருந்துக்கும் காணமுடியவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

இதனால், இப்போட்டிகளில் பங்குபற்றிய வடபகுதிகளைச் சேர்ந்த மாணவர்கள் எதுவுமே புரியாமல் திக்குமுக்காடினார்கள். இப்போட்டிகளில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கு வழங்கப்பட்ட பதக்கங்கள், சான்றிதழ்களிலும் தனிச் சிங்களமொழியே காணப்பட்டது.

போட்டிகள் நடைபெற்றுக்கொண்டிருந்த சமயத்தில் ஒரு சிலர் இந்த விடயத்தை ஏற்பாட்டாளர்களின் கவனத்துக்குச் சுட்டிக்காட்டிய போதிலும் அது கவனத்தில் எடுத்துக்கொள்ளப்படவில்லை என்றும் விசனம் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை -

இப்போட்டிகள் தொடர்பாக வடக்கு - கிழக்குப் பாடசாலைகளுக்கு ஏற்கனவே அனுப்பிவைக்கப்பட்டிருந்த வழிகாட்டி நூலும் தனிச்சிங்களத்திலேயே அமைந்திருந்ததும் - அதிலுள்ள விடயங்களை வாசித்து அறிந்து கொள்ளமுடியாமல் சமபந்தப்பட்டோர் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கியமையும் குறிப்பிடத்தக்கவை.

இப்போட்டிகளில் தமிழ் மொழி புறக்கணிக்கப்பட்டு தனிச்சிங்களத்தில் நடத்தப்பட்டமை குறித்து சம்பந்தப்பட்ட மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்கள் தரப்பில் கடும் விசனம் தெரிவிக்கப்பட்டது.

சமாதான காலத்திலும் கூட சிங்கள இனவாதம் மேலும் தலைவிரித்தாடுவது குறைந்து விடவில்லை என்பதையே இது காட்டுகின்றது எனவும் சுட்டிக் காட்டப்படுகின்றது. (4-405)

# வலி.வடக்கில் அபிவிருத்திக்கு மூன்று கிராமங்கள் தெரிவு

வலிகாமம் வடக்கு பிரதேச செயலக பிரிவில் உள்ள மூன்று கிராமங்கள் கிராம அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் அபிவிருத்தி செய்யப்படவுள்ளன.

அபிவிருத்தி நடவடிக்கைகள் மேற்கொள்வதற்காக கோணாவளை, குட்டியப்புலம் மற்றும் சுதந்திரபுரம் ஆகிய கிராமங்களே தெரிவுசெய்யப்பட்டுள்ளன.

இக்கிராமங்களை அபிவிருத்தி செய்வதற்கும், கீழ் மட்டத்தில் உள்ள விவசாயிகளை இனங்கண்டு அவர்களின் வருமானத்தையும், வாழ்க்கைத் தரத்தையும் உயர்த்துவதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது.

இதன்பொருட்டு இக்கிராமங்களில் உள்ள விவசாய சம்மேளனங்களினூடாக கூட்டங்களை நடத்தி அடிமட்டத்து விவசாயிகளை இனங்காணும் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவுள்ளன.

இதன்பொருட்டு தெரிவுசெய்யப்படும் விவசாயிகள் என்னென்ன வேலைகளைச் செய்யவிரும்புகிறார்களோ அவற்றுக்கான வேலைத் திட்டங்களை முன்னெடுக்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மேற்படி கிராமங்களில் விவசாயிகளை தெரிவு செய்வதற்கும், கிராமத்தை அபிவிருத்தி செய்வதற்குமான ஆலோசனைக கூட்டங்கள் தனித்தனியாக இடம்பெறவுள்ளன. (4-152)

# ஆசிரியர் நியமனம்; இப்படி ஓர் இழுபறி

அச்சுவேலி,செப்.14

தேசிய கல்வியியற கல்லூரிகளில் பயிற்சி முடித்து தேசிய பாடசாலைகளுக்கு நியமிக்கப்பட்ட தமிழ் ஆசிரியர்களின் நியமனத்தில் இழுபறி நிலை ஏற்பட்டிருக்கிறது.

தேசிய கல்வியியல் கல்லூரிகளில் பயிற்சி முடித்த ஆசிரியர்களில் ஒரு பகுதியினர் உயர்புள்ளி அடிப்படையில் தேசிய பாடசாலைகளுக்கு நியமிக்கப்பட்டனர்.

இவர்களுக்கான நேர்முகப் பரீட்சைகள் கடந்த மாத முற்பகுதியில் இசுருபாயாவில் உள்ள கல்வி அமைச்சில் நடைபெற்று உடனடியாக பதவி ஏற்குமாறு நியமனக் கடிதங்களும் வழங்கப்பட்டன.

வழங்கப்பட்ட நியமனக் கடிதங்களில் பதவி ஏற்கவேண்டிய பாடசாலைகள் தென்னிலங்கையில் உள்ள தேசியப் பாடசாலைகளாக இருந்தமையால் சொந்தமாவட்டங்களுக்கு நியமனம் வழங்குமாறு சம்பந்தப்பட்டோரிடம் கோரிக்கை விடப்பட்டது. இது தொடர்பாக ஆசிரியர் தொழிற்சங்கங்கள் மற்றும் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பிரமுகர்களிடமும் தெரியப்படுத்தப்பட்டது. அரசியல் மட்டத்தில் இந்த விவகாரம் கல்வி அமைச்சுக்குச் சுட்டிக்காட்டப்பட்டது. இதனையடுத்து அவர்களை அவரவரது சொந்த மாவட்டங்களுக்கு மாற்றுமாறு அமைச்சு மட்டத்தில் தீர்மானிக்கப்பட்ட போதும் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் அதனை நிறைவேற்றாமல் இழுத்தடிப்பதாகக் கூறப்படுகின்றது.

குறிப்பிட்ட ஆசிரியர்கள் உரிய திகதியில் கடமை ஏற்காமையினால் அவர்களது நியமனத் திகதி பின்தள்ளப்படுவதோடு, பதவியும் பறிபோகக் கூடிய நிலை ஏற்பட்டிருக்கிறது.

சம்பந்தப்பட்ட நியமனத்திற்குப் பொறுப்பான பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த பெண் உயர் அதிகாரி ஒருவரே இந்த நியமனத்தில் மாற்றங்களைச் செய்யமுடியாதெனக் கூறி இழுத்தடிக்கின்றார் என்று தெரிவிக்கப்பட்டது. இந்த வகையில் நியமனம் பெற்ற 44 தமிழ் ஆசிரியர்கள் பதவி பறிபோய்விடுமோ என்று கவலை அடைந்த நிலையில் உள்ளனர்.

தென்னிலங்கையில் உள்ள முஸ்லிம தேசியப் பாடசாலைகளுக்கே பெரும்பாலான ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டிருக்கின்றனர் என்பதும் -

நடனப்பயிற்சியை முடித்த ஓர் ஆசிரியை முஸ்லிம் பகுதியிலுள்ள ஆண்கள் பாடசாலை ஒன்றுக்கு நியமிக்கப்பட்டிருப்பதும் குறிப்பிடத்தக்கவை. (4-11)

**நாளை**

ஆவணி 30
புதன்கிழமை
(15.09.2004)
திதி : பிரதமை
முன்னிரவு 08.29 வரை
நட்சத்திரம் : உத்தரம்
முன்னிரவு 07.07 வரை
சுபநேரம்: 04.33-06.03
ராகுகாலம்: 12.03-01.33
(பழைய நேரப்படி)

# சேதமடைந்த ஆலயத்தை புனரமைக்க நடவடிக்கை

வடமராட்சி,செப்14

கடந்தகால இராணுவ நடவடிக்கையினால் முற்றாகப் பாதிக்கப்பட்டு சேதமடைந்த முள்ளியான் மண்டலாய்ப் பிள்ளையார் கோவிலைப் புனரமைத்து மீளக் கட்டி எழுப்ப நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுவருகிறது.

பச்சிலைப்பள்ளி, வடமராட்சி கிழக்கு பிரதேச மக்களின் முக்கிய - பிரசித்தி பெற்ற இக்கோவில் கடந்த 1992ஆம் ஆண்டு வெற்றிலைக்கேணி - கட்டைக்காடு இராணுவத் தரையிறக்கத்தைத் தொடர்ந்து இடம்பெற்ற இராணுவ நடவடிக்கையினால் முற்றாகச் சேதமடைந்தது.

அந்நடவடிக்கையினால் இப்பிரதேசங்களைச் சேர்ந்த பொதுமக்களும் இடம்பெயரவே மண்டலாய்ப் பிள்ளையாரின் மூலவிக்கிரகம் பாதுகாப்பாக எடுத்துவரப்பட்டுத் தம்பசிட்டி மாயக்கைப் பிள்ளையார் கோவிலில் வைத்து பூஜை வழிபாடுகள் செய்யப்பட்டு வந்தன. சில ஆண்டுகளுக்குப் பின்னர் புலோலி மேற்கு வத்தனைப் பிள்ளையார் கோவிலில் வைத்து பூஜை வழிபாடு செய்யப்பட்டுவருகிறது. (4-173-182)

**உதயவாக்கு**

தெரியாத விடயங்களில் மூக்கை நுழைப்பவனைக் காட்டிலும் தெரிந்த விடயங்களில் மட்டும் அக்கறை காட்டுபவன் சிறந்தவன்.

# இந்த வருடத்துக்கான சிறந்த விவசாயிகளைக் கௌரவிப்பதற்கு விரிவான ஏற்பாடுகள்

வலி.தெற்கு,செப்.14

யாழ்ப்பாணம் விவசாயத் திணைக்களத்தினால் நடத்தப்பட்ட இவ்வருடத்துக்கான சிறந்த விவசாயிகள் தெரிவில், தெரிவுசெய்யப்பட்ட விவசாயிகளைக் கௌரவிக்கும் நிகழ்வு இம்மாதம் 24 ஆம் திகதி வெள்ளிக்கிழமை திருநெல்வேலியிலுள்ள விவசாயத் திணைக்களத்தில் நடைபெறவுள்ளது.

சிறந்த விவசாயிகளைத் தெரிவுசெய்யும் நிகழ்வு ஏற்கனவே கமநலசேவை நிலையப் பிரிவுகளுடாக நடத்தப்பட்டுள்ளன.

நீர் முகாமைத்துவம், நிலத்தை வினைத்திறனுடையதாக பயன்படுத்தல், நெல்வயற் செய்கை, மிளகாய் செய்கை, பெண் தலைமைத்துவம், வதிவிடப் பயிர்ச்செய்கை போன்ற பல்வேறு வகைகளில் பயிர்ச்செய்கையில் சிறந்த விவசாயிகள் தெரிவுகள் இடம்பெற்றுள்ளன.

உடுவில் கமநல சேவை நிலையத்தில் இருந்து மாவட்ட மட்ட தெரிவுக்காக தெரிவு செய்யப்பட்டுள்ள விவசாயிகள் விவரம் வருமாறு:-

நீர்முகாமைத்துவம் - செல்லையா தயாபரன் (இணுவில்), நிலத்தை வினைத்திறனுடையதாக பயன்படுத்தல் - கனகரத்தினம் ரவிகுலநாதன் (சுன்னாகம் தெற்கு), நெற்செய்கை - கனகரத்தினம் மடுப்பிரசாந் (சங்குவேலி வடக்கு), மிளகாய்ச் செய்கை - வேலுப்பிள்ளை மகாதேவன் (புன்னாலைக் கடடுவன் தெற்கு), பெண் தலைமைத்துவம் திருமதி செல்லத்துரை ராயேஸ்வரி (புன்னாலைக் கட்டுவன் தெற்கு), வதிவிடப் பயிர்ச்செய்கை திருமதி வேலும்மயிலும் தவமலர் (ஏழாலை கிழக்கு)

கீரிமலை கமநலசேவை நிலையப் பகுதியில் இருந்து தெரிவுசெய்யப்பட்டோர் விவரம்:

வினைத்திறனாக நிலத்தை பயன்படுத்தல் - கணபதி முத்துலிங்கம் (கோணாவளை), வதிவிட வேளாண்மை - சிவனேசன் ரஞ்சனா (முருங்கையன்புலம் அளவெட்டி), பெண் தலைமைத்துவம் செல்லத்துரை செல்வரஞ்சிதம் (சாத்தனாவத்தை துர்க்காபுரம்).

கமநலசேவை நிலையங்களுடாக தெரிவு செய்யப்பட்ட விவசாயிகளில் இருந்து மாவட்ட மட்ட நிலையில் சிறந்த விவசாயிகளைத் தெரிவு செய்யும் நிகழ்வுகள் திருநெல்வேலி மாவட்ட விவசாயத் திணைக்கள அதிகாரிகளால் இன்றும் 16 ஆம் திகதியும் மேற்கொள்ளப்படவுள்ளன.

(4-152)

## அங்குரார்ப்பணக் கூட்டம்

யாழ்ப்பாணம்,செப்.14

வேலணை கிராமிய வைத்திய சாலைக்கு அபிவிருத்திச் சபை ஒன்றை அங்குரார்ப்பணம் செய்வதற்கான கூட்டம் நாளை புதன்கிழமை பிற்பகல் 2மணிக்கு வைத்தியசாலையின் வெளிநோயாளர் மண்டபத்தில் வைத்திய கலாநிதி ஆதிருநாவுக்கரசு தலைமையில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் தலைவர்கள், சங்கங்களின் தலைவர்கள், பொதுமககள், நலன் விரும்பிகள் ஆகியோர் கலந்து கொண்டு ஆலோசனைகளை வழங்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

(10)

# 82ஆவது கூட்டுறவு தின விழாவை கட்டைவேலி சங்கம் சிறப்புற நடத்தியது

யாழ்ப்பாணம்,செப்.14

கட்டைவேலி- நெல்லியடி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் 82ஆவது சர்வதேச கூட்டுறவு தின விழாவை அண்மையில் நெல்லை முருகன்திருமண மண்டபத்தில் சிறப்பாகக் கொண்டாடியது.

தொடர்ந்து இரு நாள்கள் நடைபெற்ற இந்த விழாவில் முதல் நாள் நிகழ்வுகள் கட்டைவேலி பல நோ.கூட்டுறவுச் சங்கத் தலைவர் த.சிதம்பரப்பிள்ளை தலைமையில் நடைபெற்றன. யாழ் மாவட்ட சிக்கன கடனுதவி வழங்கும் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவர் சி.சிவசுப்பிரமணியம் இதில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டார்.

இரண்டாம் நாள் நிகழ்வுகள் சங்கத்தின் உப தலைவர் ஆ.சண்முகம் தலைமையில் நடைபெற்றன. யாழ்.மாவட்ட கூட்டுறவுச் சபையின் தலைவர் பொ.கனகசபாபதி இதில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டார்.

இந்த நிகழ்வில் தெல்லிப்பழை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் சி.சிவமகாராசா சிறப்பு விருந்தினராகவும் கரவெட்டி மாணிக்கவாசகர் வித்தியாலய அதிபர் இ.இராகவன், நெல்லியடி மத்திய மகாவித்தியாலய அதிபர் செ.சேதுராசா மற்றும் கரவெட்டி விக்கினேஸ்வராக் கல்லூரி அதிபர் வே.சிவசிதம்பரம் ஆகியோர் கௌரவ விருந்தினர்களாகவும் பங்கேற்றனர்.

இந்த நிகழ்வின் சிறப்பம்சமாக ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த 65மாணவர்களுக்கும், ஜி.சீ.ஈ.சாதாரண தரத்தில் சிறப்புச் சித்தியெய்திய 39 மாணவர்களுக்கும், ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சையில் சிறப்புப் புள்ளிகளைப் பெற்ற 11மாணவர்களுக்கும் மற்றும் கல்விசார், மாவட்ட மட்ட கூட்டுறவுதினப் போட்டிகளில் பங்பற்றிப் பரிசில்கள் பெற்ற மாணவர்களுக்கும் போட்டியில் பங்குபற்றியோருக்கும் சங்க நூலகத்தில் நூல்பெற்று வாசிப்பவர்களுக்கும் கூட்டுறவுப் பயிற்சிக் கல்லூரியில் பங்குபற்றிச் சித்தியடைந்தோருக்கும், வைப்புக்கு எதிராக நுகர்ச்சிக் கடன்பெற்று திரும்பச் செலுத்தியோருக்கும், சங்க கிராமிய வங்கியில் கடன் பெற்று மீளளித்தவர்களுக்கும் பரிசுகளும் அன்பளிப்புகளும் ஊக்குவிப்புகளும் வழங்கப்பட்டன.

அத்துடன் சங்கத்தில் பணியாற்றிய பணியாளர்கள் மற்றும் மூத்த கூட்டுறவாளர்களு இந்த நிகழ்வின்போது கௌரவிக்கப்பட்டனர்.

கலை நிகழ்வாக மாவட்டப் போட்டிகளில் பங்குபற்றிப் பரிசுபெற்ற மாணவர்களது தனி நடனம், பாடல்கள், பாலர் நிகழ்வுகளும் கூட்டுறவுதினப் போட்டியில் பரிசுபெற்ற துன்னாலை சி.க.வ.கூ.சங்கத்தினரின் "கூட்டுறவில் பல நோக்கு" கல்வி வலய மட்டத்தில் பரிசு பெற்ற விக்கினேஸ்வராக் கல்லூரி மாணவர்களின் 'அரிச்சந்திரா' நாடகங்களும் நடைபெற்றன.

(எ-6)

## 14ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 05 - 11 - 1917

உதிர்வு 18 - 07 - 1990

### அமரர் வைத்திலிங்கம் சிங்கவேலு

(முன்னாள் உரிமையாளர், மருதனார்மடம் எரிபொருள் நிலையம்)

திதி: 14-09-2004

அன்புத் தெய்வமே ஐயா!
ஓயாது எம் துயரம்!

உங்கள் பிரிவால் துயருறும்:
பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

நல்லூர்.

(36388) (26-11-18)

## மரண அறிவித்தல்

### ஆறுமுகம் றொபேட் பேரின்பநாயகம்

புலோலி தெற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொணட ஆறுமுகம் றொபேட் பேரின்பநாயகம் (ஓய்வுபெற்ற விவசாயப் பணிப்பாளரும், முன்னாள் குண்டகசாலை விவசாய பாடசாலை விரிவுரையாளரும்) நேற்று 13.09.2004 காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற ஆறுமுகம் - திருமதி ஆறுமுகம் (பாட்டக்கா ஆசிரியை) அவர்களின் சிரேஷ்ட புதல்வனும் திருமதி கௌசாம்பிகை பேரின்பநாயகம் அவர்களின் அன்புக் கணவரும் திருமதி மாலினி சிவநேசன் (கனடா) அவர்களின் பாசமிகு தந்தையாரும் S.சிவநேசன் (கனடா) அவர்களின் மாமனாரும் நிஷா, பிரவீனா (கனடா) ஆகியோரின் பாசமுள்ள பேரனாரும் வே.ஈஸ்வரி தேவி (அமெரிக்கா), சொ.ராஜேஸ்வரி (கொழும்பு), ஆ.பேரானந்தநாயகம் (மட்டக்களப்பு) ஆகியோரின் சகோதரரும் Dr.R.மகாதேவன் (கலிபோர்னியா), திருமதி ஞானம்பிகை கந்தசாமி (கனடா) ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.09.2004) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கருகம்பன் இந்துமயானத்துக்கு தகனக்கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

*"ஞானந்தோட்டம்"*
*புலோலிதெற்கு,*
*புலோலி.*

தகவல்:
- மனைவி.

(36389)(39-11-18-26)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



இன்று (14.09.2004) கல்விப் பணியில்
வெள்ளி விழாக்காணும்
எமது வித்தியாலய அதிபர்

### திரு.க.செபஸ்தியாம்பிள்ளை

(B.A.Sp. Trd. Dip.in.Ed. S.L.P.S - 2-I)

அவர்களின் 25 வருட சேவை நிறைவினைப் பாராட்டி வாழ்த்துவதோடு மேலும் பல சிறப்புகள் பெற்று கல்விச் சேவையினைத் தொடர வாழ்த்துகின்றோம்.

பாடசாலைச் சமூகம்,
யா/நாவாந்துறை றோ.க.வித்தியாலயம்.

*நாவாந்துறை.*

(36385)(42-11-18-26)



ஓம்
ஸ்ரீராம ஜெயம்

## யாழ்ப்பாணம் - வண்ணை ஸ்ரீ வேங்கடேச வரதராஜப்பெருமாள் தேவஸ்தானம்

## தாரண வருட மகோற்சவ விஞ்ஞாபனம் – 2004

*நாராயணன் அடியார்களே!*

நிகழும் மங்களகரமான தாரண வருஷம் ஆவணித் திங்கள் 30ஆம் நாள் (15-09-2004) ஸ்ரீமத் வேங்கடேச வரதராஜப் பெருமாளின் திவ்விய மகோற்சவத்தொடர் காலை 10.15இற்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாக பகவான் திருவருள் பாலித்துள்ளார். அடியார்கள் அனைவரும் தொடர்ந்துவரும் மகோற்சவங்களுக்கு ஆசாரசீலராகவந்து எம்பெருமானைத் தரிசித்து, லக்ஷ்மி விலாச சப்பன்னராக வாழ்வீர்களாக.

| | | | |
|---|---|---|---|
| | 15-09-2004 | காலை 10.15 கொடியேற்றம் - சூரியபரிதிச்சேவை | மாலை 5.15 அன்னச்சேவை |
| 2ஆம் உற்சவம் | 16-09-2004 | காலை 10.15 கேடகம் | மாலை 5.15 ஷேஷ சயனசேவை |
| 3ஆம் உற்சவம் | 17-09-2004 | காலை 10.15 கேடகம் | மாலை 5.15 கருடசேவை |
| 4ஆம் உற்சவம் | 18-09-2004 (முதலாவது புரட்டாதிச் சனி) | காலை 10.15 கருடசேவை | மாலை 5.15 அநுபசேவை |
| 5ஆம் உற்சவம் | 19-09-2004 | காலை 10.15 கேடகம் | மாலை 5.15 பூந்தண்டிகைச்சேவை |
| 6ஆம் உற்சவம் | 20-09-2004 | காலை 10.15 கேடகம் | மாலை 5.15 கஜேந்திரசேவை |
| 7ஆம் உற்சவம் | 21-09-2004 | காலை 10.15 கேடகம் | மாலை 5.15 சப்பரம் - வெண்ணெய்தாளி சேவை |
| 8ஆம் உற்சவம் | 22-09-2004 | காலை 10.15 கருடச் சேவை | |
| 9ஆம் உற்சவம் | 23-09-2004 | காலை 8.30 வசந்தமண்டபபூசை, 10.30 இரதோற்சவம் | மாலை 5.15 கருடசேவை |
| 10ஆம் உற்சவம் | 24-09-2004 | காலை 8.00 வசந்த மண்டபபூசை, 9.30 தீர்த்தோற்சவம் | மாலை 5.15 கொடிஇறக்கம் சந்திரப்பிறைச்சேவை |
| | 25-09-2004 (இரண்டாவது புரட்டாதிச் சனி) | காலை 10.15 கருடசேவை | மாலை 5.15 திருக்கல்யாணம் பூந்தண்டிகை சேவை |
| | 26-09-2004 | | மாலை 5.15 திருவூஞ்சல் பூந்தோட்டச் சேவை |
| | 27-09-2004 | | மாலை 5.15 வதிரி விருஷயோக நாராயண உற்சவம் |
| | 28-09-2004 | காலை பிராயச்சித்த அபிஷேகம் | மாலை 5.15 ஆஞ்சநேயர் அபிஷேகம் பொங்கல் உற்சவம் |

- ஆதீன மகாசபை.

(சி-37645) (26-11-18)

## விளையாட்டு நிகழ்வு

யாழ்ப்பாணம்,செப்.14

உடுவில் ஞானப்பிரகாசர் சனசமூக நிலையம் இளைஞர், யுவதிகளிடையே விளையாட்டை ஊக்குவிக்கும் வகையில் கடந்த 11 ஆம் திகதி முதல் விளையாட்டு நிகழ்வுகளை நிலைய மைதானத்தில் நடத்தி வருகின்றது.

வள்ளுவர், ஞானபபிரகாசர், வஸ்திகர் ஆகிய கழகங்களுக்கிடையில் நடைபெற்று வரும் விளையாட்டு விழாவில் இன்று மாலை 4 மணிக்கு கரபந்தாட்டம் நடைபெறவுள்ளது.

(10-6)

## யாழ். பிரதேச செயலகத்தில் நடமாடும் சேவை

யாழ்ப்பாணம்,செப்.14

ஈச்சமோட்டை(ஜே-66), சுண்டிக்குழி தெற்கு (ஜே-75), சுண்டிக்குழி வடக்கு (ஜே-76), மருதடி (ஜே-77) ஆகிய கிராம சேவையாளர் பிரிவுகளில் உள்ள மக்கள் பிறப்புச் சான்றிதழ்கள் மற்றும் தேசிய அடையாள அட்டை என்பனவற்றைப் பெற்றுக்கொள்வதற்கான நடமாடும் சேவை எதிர்வரும் 17 ஆம் திகதி காலை 9 மணிக்கு யாழ். பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பிறப்புச் சான்றிதழ், தேசிய அடையாள அட்டை பெறாதவர்கள் இதனைப் பெற்றுக் கொள்வதற்கான ஆவணங்களுடன் வருமாறு கேட்கப்பட்டுள்ளது.

இல்லாதவர்களுக்கு அவற்றைப் பெற்றுக் கொடுப்பதற்கான ஏற்பாடும் செய்யப்படும் என்று யாழ். பிரதேச செயலர் பா.செந்தில் நந்தனன் தெரிவித்துள்ளார்.

(3-6)



# வசதிகள், உபகரணங்கள் கிடைத்தும் மருத்துவ சேவை தொடர்ந்து பாதிப்பு

## யாழ். ஆஸ்பத்திரியைப் புறக்கணிக்கும் சுகாதார அமைச்சு.....




வைத்தியசாலைகளில் பணியாற்றும் துணை நிலை மருத்துவ உத்தியோகத்தர்களால மேற்கொள்ளப்பட்டுவரும் சட்டப்படி வேலையால் யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெறும் நோயாளர்களே பெரும் பாதிப்பிற்குள்ளாகியுள்ளனர். இதனால், பெரும்பாலான அவசர, உயிராபத்தான நோயாளர்கள் பெரும் அவல நிலைகளைச் சந்திக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளது.

கொழும்பு மற்றும் பெரும்பான்மையின மக்கள் அதிகளவு வாழும் பகுதிகளிலுள்ள வைத்தியசாலைகளில் இந்தச் சட்டப்படி வேலை நிறுத்தத்தால் நோயாளர்களுக்கு எதுவித பாதிப்பும் ஏற்படாதவகையில் அரசினால் மேற்கொள்ளப்பட்டுள்ள உதவித் திட்டத்திலிருந்து யாழ்போதனா வைத்தியசாலை மட்டும் புறக்கணிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு மற்றும் வைத்தியசாலைகளில் சட்டப்படி வேலைக்குட்பட்ட நேரத்தைத் தவிர்நத ஏனைய வேளையில் அதாவது பிற்பகல் 4 மணி முதல் மறுநாள் காலை 8 மணிவரைக்கும் இடைபட்ட காலவேளையில் விபத்து மற்றும் ஆபத்தான நோய்வாய்ப்பட்ட நோயாளர்களுக்கு துணை நிலை மருத்துவசேவையைத் தனியார் மருத்துவ மனைகளில் பெற்றுக்கொள்ள வேண்டிய செலவுத் தொகைக்கென அமைச்சு நிதி ஒதுக்கீடு செய்து அத்தொகையை தனியார் மருத்துவமனைகளுக்கு வழங்கிவருகிறது. அதனால், அங்கு ஆபத்தான நோயாளர்களை உயிராபத்தில் இருந்து காக்கக்கூடிய நிலை தோற்றுவிக்கப்பட்டுள்ளது.

ஆனால், யாழ்.போதனா வைத்தியசாலைக்கு இத்தகைய வசதியை அமைச்சு வழங்கத்தவறியுள்ளதால் இங்குவரும் அவசர நோயாளர்கள் குறிப்பிட்ட அந்த நேரத்தில் - பிற்பகல் 4 மணி தொடக்கம் மறுநாள் காலை 8 மணிவரை - சுமார் 16 மணித்தியாலங்கள் முதலுதவிச் சிகிச்சையைத் தவிர வேறு எந்தவொரு சிகிச்சையையும் மேற்கொள்ளமுடியாத நிலையில் - மேற்கொள்ளப்படாத நிலையில் பெரும் அவஸ்தைப்படவேண்டியுள்ளது. அல்லது உயிராபத்தை சந்திக்கும் நிலைக்குத்தள்ளப்பட்டுள்ளனர். இந்த இடைவெளி நேரத்தில் துணைநிலை மருத்துவர்களின் சேவையைப்பெற்றுக் கொள்ளமுடியாத நிலையே இந்த உயிராபத்துக்கான காரணமாக அமைந்துள்ளது.

கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு அடுத்ததாக இரண்டாவது நிலையிலுள்ள ஒரு முக்கிய வைத்தியசாலை யாழ்.போதனா வைத்தியசாலையாகும். யாழ்.மாவட்டத்துடன் வன்னிப் பெருநிலப்பரப்பு மக்களுக்கும் சேவையாற்றும் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த ஒரு வைத்தியசாலையாகும்.

இப்படியான இடத்தை வகிக்கும் இந்த வைத்தியசாலை தற்போது மாத்திரமல்ல கடந்த காலங்களிலும் பல்வேறு வகைகளாலும் அமைச்சினாலும் புறக்கணிக்கப்பட்டே வந்தது என்பது வடபகுதிமக்கள் அறிந்த விடயம்தான். உபகரணங்கள், பயிற்சி பெற்ற மருத்துவ உத்தியோகத்தர்களுக்கான ஆளணி நியமனம், நிதிஒதுக்கீடு, புனரமைப்பு, மருந்து விநியோகம் எனப் பல வகையிலும் யாழ்.போதனா வைத்தியசாலை அமைச்சினால் புறக்கணிக்கப்பட்டே வந்தது.

வடககுக்கான ஒரே ஒரு போதனா வைத்தியசாலை யாழ்.போதனா வைத்தியாசலை மட்டுமே. போதனா வைத்தியசாலையாக இருந்த போதிலும் தரத்திற்கேற்றவகையில் ஆளணி நியமனங்கள் அதிகரிக்கப்படவில்லை. சாதாரண வைத்திய சாலையாக இருந்து பொது வைத்தியசாலை, போதனா வைத்தியசாலையாக தரமுயர்த்தப்பட்டும் சிகிச்சைபெறும் நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்தும் கூட ஆளணி நியமனம் மற்றும் கட்டட வசதிகள் எதுவும் அதிகரிக்கப்படாத நிலையிலேயே இன்னமும் இருந்து வருகின்றது. இதில் ஆளணி நியமனம் வைத்திய நிபுணர்களில் இருந்து சிற்றூழியர் வரை சகல மட்டத்திலும் பெரியதொரு குறைபாடாகவே இருந்துவருகிறது.

துணைநிலை மருத்துவ உத்தியோகத்தர்கள் பல வருட காலமாகப் பயிற்சிநெறியினைப் பெற்றவர்களாவர். இவர்களுக்கான பயிற்சிகளை வழங்கும்போதும் தமிழர்களைப் பொறுத்த மட்டில் குறைந்த விகிதத்தினரே பயிற்சி நெறிக்குத் தெரிவுசெய்யப்படுவர். பெரும்பாலும் நூற்றுக்கு இரண்டு வீதமானவர்களே தெரிவு செய்யப்படுவர். அப்படித் தெரிவு செய்யப்படுபவர்களும் பயிற்சிக் காலத்தின்போது பல நெருக்கடிகளுக்கு முகங்கொடுக்கவேண்டிய நிர்ப்பந்தமே அங்கு நிலவும் நெருக்கடிகளுக்கு மத்தியிலும் பயிற்சியினை நிறைவுசெய்து நியமனம் வழங்கப்படும்போது வடபகுதி நியமனங்கள் அதிகம் நிரப்பப்படாத நிலையில் புறக்கணிப்பட்டுவிடும். அவ்வப்போது வடபகுதி நியமனங்களுக்காக வைத்தியசாலை நிர்வாகம் அமைச்சுடன் தொடர்புகொண்ட போதிலும் அது செவிடன் காதில் ஊதிய சங்காகவே இருக்கும்.

இந்த குறிப்பிட்ட தரத்திலுள்ள சகல பயிற்சி பெற்ற உத்தியோகத்தினரின் கடமைநேரம் 6 மணித்தியாலமாக வரையறுக்கப்பட்ட போதிலும் துணைமருத்துவர்களின் தொகை குறைவாக இருப்பதினால் அவர்களின் சேவைகளைப் பெருமளவில் பெற்றுக்கொள்ளும் நோக்கில் இவர்களுக்கான கடமை நேரத்தை 8 மணித்தியாலங்களாக வழங்கி அதில் இரண்டு மணித்தியாலங்களை - 12மணியிலிருந்து 2மணிவரை - உணவு மற்றும் ஓய்வுக்கான நேரமாகச் சுகாதார அமைச்சு குறித்துள்ளது. இந்த ஓய்வு வேளையின்போது அத்தியாவசிய தேவை கருதி மேற்கொள்ளப்படும் பரிசோதனைகள் மற்றும் ஏனைய சேவைகளுக்கு (எக்ஸ்றே, ஈ.ஈ.ஜி., ஈ.சி.ஜி., மருந்து

**செய்திக் கட்டுரை**
**யாழ்.நகர்ச் செய்தியாளர்.**

வழங்கல்) ஒரு நோயாளிக்கு 22ரூபா 50 சதம் எனற அடிப்படையில் மேலதிக ஊதியம் துணை மருத்துவர்களுக்கு வழங்கப்பட்டு வந்தது. இதே போல கடமை நேரம் தவிர்ந்த ஏனைய அதாவது பிற்பகல் 4 மணி தொடக்கம் மறுநாள் காலை 8 மணிவரையிலான நேரங்களுக்கும் அவசர அழைப்பின் பேரில் செய்யப்படும் கடமைவேளையிலும் இக்கொடுப்பனவு வழங்கப்பட்டு வந்தது.

இந்த மேலதிக வேலைக் கொடுப்பனவுகளே தற்போது அமைச்சினால் நிறுத்திவைக்கப்பட்டுளன. ஆனால், இச்சேவைகளை நிவர்த்திசெய்யும வகையில் துணைமருத்துவ சேவையினரை 24 மணித்தியால சுழற்சி முறையில் கடமையை மேற்கொள்ளுமாறு அமைச்சு கேட்டுள்ளது.

### சுழற்சி முறைத் திட்டமும் சாத்தியமில்லை

அத்திட்டம் நடைமுறைக்கு வந்தபோதிலும் யாழ். போதனா வைத்தியசாலையைப் பொறுத்தவரையில் இவர்களுக்கான ஆளணி மிகமிகப் பற்றாக்குறையாகவே உள்ளது. குறிப்பாகச் சில குறிப்பிட்ட துறைகளான E.E.G., E.C.G., இயன் மருத்துவத்துறைகளில் ஒருவர், இருவர் என்ற வீதமே பணியாற்றிவருகின்றனர்.

(08ஆம் பக்கம் பார்க்க)

# நல்லூர்த் திருவிழாக் காலத்தில் யோகர் சுவாமிகளின் நினைவு

நல்லூர் முருகனின் பெருந்திருவிழாக் காலம் வந்ததும் அவனது வீதிகளில் நடமாடி ஞானமழை பொழிந்து அருளாளர்களைத் தமது மனதிருத்தி மானசிகமாக வணங்கித் துதிப்பவர்கள் பலர் நம்மிடையே உளர்.

யாழ்ப்பாணத்தின் ஞானக்கொழுந்து என ஏற்றிப் போற்றப்படும் யோகர்சுவாமிகளை சிறு வயதில் தரிசித்த பேற்றை நினைத்து, அமெரிக்கா, பொஸ்ரன் மாநிலத்தில் வதியும் அடியார் *நல்லூரடியான் சிவா* எழுதிய கட்டுரை இது.

நல்லூர் கந்தசுவாமி கோவிலில் வருடாந்தம் பெருவிழா தொடங்கிவிட்டால் யாழ்ப்பாணத்தில் ஆன்மீக மணம் கமழ்வது வழக்கம். அதேபோன்று இந்த மண்ணின் பெரும் அருளாளராக விளங்கிய யோகர் சுவாமிகளின் நினைவும் வந்துவிடும்.

யோகர் சுவாமிகளின் ஞானகுரு செல்லப்பா சுவாமிகள், யோகர் சுவாமிகளோ, மார்க்கண்டு சுவாமிகள், சுப்பிரமணிய சுவாமிகள், சந்தசுவாமிகள் என்று பலருக்குக் குருவாக விளங்கியவர்.

யோகர் சுவாமிகள் நல்லூரில் பெற்ற உபதேசம் சிவயோகம் அவர் பலருக்கு நல்லூர்க் கந்தனாகவே காட்சி கொடுத்தவர். எனினும், ஒரு வேளையில் மார்க்கண்டு சுவாமிகள், நல்லூர் முருகனின் தேரைத் தரிசிக்க விருப்பம் கொண்ட போது, உனது உடம்புதான் நல்லூர்,உனது உடலே தேர் என்றும் கூறியிருக்கிறார். நல்லூரின் வீதிகள் பெரும் ஞானவள்ளல்களின் பாதங்கள் பட்டு புனிதமடைந்த மண்ணாகும்.

"எந்நாளும் நல்லூரை வலம்வந்து வணங்கினால் இடர்கள் எல்லாம் போமே" என்று தமது நற்சிந்தனையில் பாடிய யோகர்சுவாமிகள் -

நல்லூரான் திருவடியை
நான்நினைத்த மாத்திரத்தில்
எல்லாம் மறப்பேனெடி - கிளியே
இரவுபகல் காணேனெடி - என்றும்
மெய்மறந்திருக்கிறார்

நல்லூர் முருகன் ஆலயமும் யோகர் சுவாமிகளின் ஞானவாழ்வும் இறுகப் பின்னிப் பிணைந்தவை.

அத்தகைய ஞானச் செம்மலின் சில நினைவுகளை மீட்டுப்பார்ப்பதே பெரும் பேறாகும்.

யோகர் சுவாமிகளுடன் அந்நியோன்னியமாகப் பழகும் வாய்ப்புக் கிடைத்தமை எத்தனையோ பிறப்புக்களில் நாம் செய்த தவப்பலனே அன்றி வேறில்லை.


யோகர் சுவாமிகள் தமது அருமைச் சீடர்களில் ஒருவரான மார்க்கண்டுச் சுவாமிகளைப் பார்ப்பதற்கு கைதடிக்கு வருவார். நடந்தும் வருவார். காரிலும்வருவார். அவரைச் சுற்றி ஆண்டி முதல் பெரும் அதிகாரசீலர்கள் வரை கூடி நிற்பார்கள்.

எல்லோருடனும் நன்றாகப் பேசுவார், சிரிப்பார். அவருடன் அமர்ந்து சாப்பிடும் போது ஒரு சோறுதானும் கீழே விழக்கூடாது விழுந்தால் கண்டபடி பேசுவார்.

சுவாமிகளைப் பார்த்து இந்த வீடு யாருடையது அந்தவீடு யாருடையது என்று கேட்டால் அனைத்துமே தன்னுடையது என்று கூறுவார்.

### ஒன்றே உயிர்

நாங்கள் சிறுவர்களாக இருக்கும்போது



அவருடன் கதைப்போம் ஒருதடவை 8 சிறுவர்கள் ஒன்றாக அவருக்கு முன்னால் பயபக்தியுடன் நின்றோம். எங்களுக்குக் கதைகளைக் கூறிக்கொண்டிருந்தார். திடீரென எங்களைப் பார்த்து, எங்களில் எத்தனைபேர் இருக்கிறோம் என்று எண்ணும்படி அனைவரிடமும் சொனனார்.

நாங்கள் எட்டுப்பேர் உள்ளோம் எனறு அனைவரும் பதில் கூறினோம். அதற்கு அவர் "நீங்கள் 8 பேர் அல்ல ஒருவர் தான்" என்றார். எமக்கு எதுவுமே புரியவில்லை.

சிறிதுநேரத்திலே தனது உதவியாளரை அழைத்து ஒன்பது பேருக்குத் தேநீர் கொண்டுவா" என்றார். எங்களுக்கு மேலும் குழப்பமாக இருந்தது.

முதலில் ஒருவர் என்று கூறிவிட்டு இப்போது ஒனபது பேர் என்று கூறுகின்றாரே என்று குழம்பிப் போனோம் பல வருடங்களின் பின்னர் இப்போதுதான் விளங்குகிறது. ஆத்மா ஒன்று உடம்புதான் பலது என்ற தத்துவத்தைத்தான் எங்களுக்குச் சொல்லித்தந்தார் என்பது.

### கடவுளால் முடியாதது!

ஒருமுறை யோகர் சுவாமிகள் இவ்வளவு பெரிய கடவுளால் செய்யமுடியாத ஒரு விடயம் உள்ளது. அது என்ன என்று சொல்லுங்கள் பார்க்கலாம் என்று கேட்டார். அப்போது நாங்கள் கடவுளால் எல்லாம் செய்யமுடியும் அவரால் முடியாதது எதுவுமில்லை என்று கூறினோம்.

அதற்கு சுவாமிகள் 'உந்தக் கடவுளை எங்களைவிட்டு ஒரு கணம் பிரிந்திருக்கச் சொல்லுங்கள் பார்க்கலாம். அது அவரால் முடியாது' என்று கூறினார்.

கடவுள் எங்களைவிட்டு எப்போதுமே பிரிந்திருக்கமாட்டார் என்ற தத்துவத்தை எமக்குப் புரியவைக்கவே அதனைக் கூறினார் என்று இப போது புரிகிறது.

ஒவ்வொரு சனி, ஞாயிற்றுக்கிழமைகளிலும எமது மைத்துனர் முத்துக்குமாரசாமி, யோகர் சுவாமிக்கு மதியபோசனம் கொண்டுபோவர். நாங்கள் அப்போது அவருடன் பொழுதுபோக்காகச் செல்லுவோம். அவர் சுவாமிகளுக்கு சாப்பாடு கொடுத்துவிட்டு சிவதொண்டன் போய்விடுவார். நாங்கள் கொழும்புத்துறையில் நின்று விளையாடுவோம. சுவாமிகள் படுத்த பாடில்லை. சில வேளைகளில வந்து உங்களுக்கு இருங்களடா என்று அதட்டி இருத்துவார். ஒரு முறை எங்கள் விளையாட்டை சுவாமி குழப்பிவிட்டார். எனக்குச் சரியான கோபம். அப்போது ஒன்பது வயது இருக்குமென நினைக்கிறேன்.

அப்போது சுவாமி என்னைப்பார்த்து கேட்டார் "நான் ஏனடா கட்டிலில் இருக்கிறேன், நீங்கள் கீழே இருக்கிறீர்கள்" என்று கேட்டார். உடனே "நீங்கள் கிழவன் அத்தோடை உங்களுக்கு காலும் முறிந்துபோச்சு. அதுதான் கட்டிலில் இருக்கிறீர்கள்" என்றேன்.

உடனே,சுவாமிகள் சிரித்துக்கொண்டு ந சொன்னது சரியென்றார். அவர் சொன்னதன் அர்த்தத்தை என்னால் இன்றுவரை புரிந்து கொள்ள முடியவில்லை.

சுவாமிகளிடம் எனது தகப்பனார் மயில்வாகனம், சிறிய தந்தையர் விசுவலிங்கம் மற்றும் ஸ்ரீகாந்தா போன்ற பெரியவர்கள் தாராளமாக ஏச்சு வாங்கியிருக்கிறார்கள் சுவாமிகள் பேசுவது அவர்களின் கர்மங்களை போக்கவேயாகும். எனது தகப்பனார் கோயில் குணமறியார். அவருக்கு, யோகர் சுவாமிகளே எல்லாம். ஒருமுறை அவர் வாங்கிச்சென்ற அப்பிள், திராட்சையுடன் சென்று படலையைத் திறக்க "டேய் மயில்வாகனம் கொண்டுபோடா எல்லாத்தையும்" என்று ஏசித் துரத்தினார். ஆனால், சிறுவர்களாகிய எங்களைக் கூப்பிட்டு பலகாரம் தேநீர் தந்தார். எமது தகப்பனார் அழுதுகொண்டு வெளியில் நின்றார்.

அடுத்தநாள் காலையில் சுவாமிகள் கைதடிக்கு வந்து, "மயில்வாகனம் நீ எப்ப கொழும்பாலை வந்தனி, வந்தால் என்னட்டை தானே முதலில் வாறநீ இந்தமுறை ஏன் என்னிட்டை வரவில்லை. உனக்கு என்னிலை என்ன கோபம்"? என்று கேட்டார் தகப்பனார் சுவாமிகளின் காலைப பிடித்து திரும்பவும் அழுதார்.

இவ்வாறு சுவாமிகளின் திருவிளையாடல்கள் எண்ணிலடங்கா.

### சாயிபாபாவும் யோகர் சுவாமியும்

பகவான் ஸ்ரீ சத்திய சாயிபாபாவும் யோகர் சுவாமிகளும் ஒருவரையொருவர் நன்கு ஞான சக்தி மூலம் அறிந்திருந்தார்கள். இலங்கையைச் சேர்ந்த சாயிராம் கந்தசாமி ஐயா, சாயிபாபாவிடம் ஒருமுறை கேட்டார். "சுவாமி உங்களை நாங்கள் 1965 ஆம் ஆண்டிற்கு முன்னர் அறிய முடியவில்லையே" என்று -

அதற்கு பகவான் சொன்னார்: "அதற்கு முன்னர் ஒரு பெரிய மகான் யாழ்ப்பாணத்திலிருந்து உங்களை வழிநடத்திக்கொண்டிருந்தார். அதனால், அங்கு எனக்கு எந்தவேலையும் அப்போது இருக்கவில்லை என்றார். இதேபோல யோகர் சுவாமிகளும் சாயிபாபாவைப் பற்றி அவ்வப்போது சில இடங்களில் கூறியிருக்கின்றார்.

இந்தியாவில் தலயாத்திரை செய்தபோது காஞ்சிப் பெரியவரை ஒருமுறை சந்தித்தார். யோகர் சுவாமிகள் நடந்து வரும்போது அதனைப் பார்த்த காஞ்சிப பெரியார் "இதோ ஒரு சிங்கம் போகிறது" என்று தனது சீடர்களுக்குச் சொன்னார்.

சுவாமிகளின் தூய உடம்பு மறையுமுன் "நான ஒரு தருக்கும் ஒரு குறையும் வைக்கவில்லை" என்று கூறினார். சிவதொண்டன் தறிகெட்டுப் போகாமலிருக்க மார்க்கண்டு சுவாமிகள் சோலபரி பிரபுவின் மகள் சந்தசுவாமிகள், செல்லத்துரை சுவாமிகள் போன்றோரை பயிற்றுவித்து சென்றுள்ளார்கள். இப்போது செல்லத்துரை சுவாமிகள் சிவதொண்டன் நிலையத்தில் இருந்து வழிநடத்துகிறார்கள். யோகர் சுவாமிகளின் ஞான ஒளி எங்கள்மீது இப்போதும் பரவிக் கொண்டிருப்பதை அவரது அடியார்கள் உணர்கிறார்கள். அவர் நற்சிந்தனையில் கூறிய நல்வழியில் வாழ்ந்து ஆன்ம ஈடேற்றம் காண்போமாக. ❊

## போட்டிகளுக்கு ஏற்பாடு

யாழ்ப்பாணம்,செப்.14

அடுத்த மாதம் 10ஆம் திகதியன்று கொண்டாடப்படவுள்ள உலக உள நாளையொட்டி சாந்திகம் நிறுவனம் மாணவர்களின் திறனை ஊக்குவிக்கும் முகமாக ஓவியம், கவிதை, பேச்சு போட்டிகளை நடத்த உள்ளது.

மூன்று பிரிவுகளாக நடத்தப்படவுள்ள இப்போட்டிகளில் பங்குபற்ற விரும்பும் மாணவர்கள் பாடசாலை அதிபரின் உறுதிப்படுத்தலுடன் தமது சுய விபரத்தினை விழா ஏற்பாட்டுக்குழு, சாந்திகம் இல.15,கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

(3-204)

## இன்னிசை வீதியுலா

நல்லூர்க்கந்தன் ஆலயத்தின் தீர்த்த உறசவமான இன்று செவ்வாய்க்கிழமை அகில இலங்கைத் திருமுறை மன்றத்தின் ஏற்பாட்டில் தேவாரப் பண் இன்னிசைக் கோஷ்டி வீதியுலா இடம்பெறவுள்ளது.

இன்று காலை நல்லூர் கச்சேரி வீதியிலுள்ள ஸ்ரீகாமாட்சி ஆம்பாள் மடாலயத்தில் இருந்து ஆரம்பமாகும் இந்த வீதி உலா நல்லூர் கந்தன் ஆலயத்தை வந்தடையும்.

(3-7)

## முன்பள்ளிக்கு அன்பளிப்பு

அல்லாரை தெற்கு அபிராமி முன்பள்ளி பாலர் பகல் பராமரிப்பு நிலையத்திற்கு 'சேவாலங்கா' நிறுவனம் விளையாட்டு உபகரணங்களை அன்பளிப்பாக வழங்கியுள்ளது.

பெறுமதி மிக்க இவ் விளையாட்டு உபகரணங்கள் பிள்ளைகளின் தேவைக்கு, பராமரிப்புக்கு பயன்படககூடியன என பராமரிப்பு நிலைய நிர்வாகத் தலைவர் தெரிவித்தார்.

(3-15)

## விபத்தில் சிக்கி மயக்கமுற்ற மாணவன் மரணம்

பண்டத்தரிப்பு - தொட்டிலடி வீதியில் கடந்த 4ஆம் திகதி இடம்பெற்ற வீதி விபத்து ஒன்றில் காயமடைந்து யாழ். ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வந்த பாடசாலை மாணவன் நேற்றுமுன்தினம் காலை மரண மானார்.

இளவாலை ஹென்றியரசர் கல்லூரி மாணவனான றெஸ்மன் பிரதீஸ் (வயது18) என்பவரே உயிரிழந்தவராவார்.

சம்பவதினம் தண்ணீர் எடுப்பதற்காக வீதியில் சென்ற சமயம் மோட்டார் சைக்கிள் ஒன்று அவரை மோதி விட்டுத் தப்பியது.

தலையில் ஏற்பட்ட பலமான அடியினால் மயக்கமடைந்த மாணவன் யாழ்.ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டிருந்தார். நேற்று முன்தினம் அவர் உயிரிழந்தார்.

(ஐ-3)

## ஒருங்கிணைப்புக்குழு கூட்டம்

வலி.தெற்கு,செப்.14

வலிகாமம் தெற்குப் பிரதேச செயலக ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டம் இன்று செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் பிரதேச செயலர் எஸ்.திருவாகரன் தலைமையில் நடைபெறவுள்ளது. ஒருங்கிணைப்பு குழுக் கூட்டத்தை தொடர்ந்து விவசாய சம்மேளனங்களின் கூட்டமும் இடம்பெறும்.

(3-152)


6th Months

யாழ்ப்பாணத்தில் M.M.I.C

20% கழிவு

வானொலி, தொலைக்காட்சி, பத்திரிகை சார் தபால் மூலம் கற்கை நெறி.

- Diploma in massmedia

Dip.in.m.m.(Sri Lanka) சான்றிதழ்

இல.15, சிறாம்பியடி ஒழுங்கை, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.

(C/37514) Call: 0777 316258. (42-14-26-16)



### யாழ்ப்பாணம் மாவட்டக் கூட்டுறவுச் சபை (வ-து)
### பதவி வெற்றிடம்
### எழுதுநர் தரம்- 302/15

01. வயதெல்லை: 25தொடக்கம் 45 வரை
02. கல்வித்தகைமை:

அ. கூட்டுறவுச் சங்க ஊழியர் 16ஆவது சம்பளத்திட்ட எழுதுவினைஞர் பதவியொன்றில் இரண்டு வருடங்களிற்குக் குறையாத அனுபவம்.

அல்லது

ஆ. க.பொ.த.சாதாரணதர சான்றிதழ் கணிதம்/ வர்த்தக எண் கணிதம்/எண்கணிதம் மற்றும் சிங்களமொழி/தமிழமொழி உட்பட ஐந்து பாடங்களில் திறமைச்சித்தியுடன் ஆறு பாடங்களில் சித்தி.

03. சம்பள அளவுத்திட்டம்:

3500 - 4850 / 65X10 - 70X10 (இத்துடன் கூட்டுறவு வேலையாளர் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட இதர படிகளும் வழங்கப்படும்)

04. விண்ணப்ப முடிவு திகதி: 27-09-2004
05. விண்ணப்பம் அனுப்பவேண்டிய முகவரி:

செயலாளர்,
யாழ்ப்பாண மாவட்டக் கூட்டுறவுச் சபை,
இல.12, கே.கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.
(விண்ணப்பப்படிவத்தை ரூபா 10 செலுத்திச் சபையில் பெற்றுக்கொள்ளவும்)

06. அனைத்துச் சான்றிதழ்களினதும் பிரதிகள் இணைக்கப்பட வேண்டும்.
07. நிறுவனங்களில் கடமை புரிபவர்கள் நிறுவனத் தலைவர்களின சிபார்சுடன் நிறுவனத்தினூடாக விண்ணப்பிக்கவேண்டும்.
08. கூட்டுறவுப் பணியாளர்களுக்கு வயதெல்லை விலக்களிக்கப் பட்டுள்ளது.
09. தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரி சபையினால் கோரப்படும் பிணையைச் செலுத்துதல் வேண்டும்.

(சி-37624) (14-16-26) - செயலாளர்.


## ஓராண்டு நினைவஞ்சலி

பிறப்பு 21 - 05 - 1935



இறப்பு 27 - 08 - 2003

### அமரர் துரைச்சாமி மார்க்கண்டு

( முன்னாள் அதிபர் - காலையடி யாழ்.பண்ணாகம் வடக்கு அ.மி.த.க.பாடசாலை)

திதி:14.09.2004

ஓராண்டு சென்றாலும், எம் இதயத்தில் உங்கள்
நினைவுகள் தான் என்றும் நிலைத்திருக்கும்.
காலங்கள் மாறலாம், உங்கள் காட்சிகள் மறையலாமா!
கண்ணை விட்டு
உயிர்கள் பிரியலாம் ஆனால் உறவுகள் பிரியுமா?
உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்போமாக.....

பனிப்புலம்,
பண்டத்தரிப்பு.

அன்பு மனைவி புஸ்பவதி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், சகோதரர்கள்.

(36359)(39-26-14-16)

## மூவாண்டு இரங்கல் பா

மலர்வு 21 - 05 - 1919



உதிர்வு 27 - 05 - 2001

மலர்வு 22 - 07 - 1925



உதிர்வு 16 - 09 - 2001

அமரர் **கதிர்காமு கிருஷ்ணபிள்ளை** (ஓய்வுபெற்ற அதிபர்)

திருமதி **கிருஷ்ணபிள்ளை பவளம்**

வாழ்வைத் தந்து வாழும் வழிகள் வகுத்து
வாழ்வாங்கு வாழ வைத்த தெய்வங்களே!
விழிமூடி மூவாண்டு சென்றாலும்
இமைப் பொழுதும் எம்முடனே இருக்கின்றீர்!
என்றென்றும் உங்கள் நினைவுடன்...

துவாரகை,
அல்வாய் வடக்கு,
அல்வாய்.

மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

(36361)(39-14-16-26)

உ

## பூப்புப்புனித நீராட்டு விழா அழைப்பு

*அன்புடையீர்!*

நிகழும் மங்களகரமான தாரண வருடம் ஆவணி 30ஆம் நாள் நாளை (15-09-2004) புதன்கிழமை காலை 8.27 மணி முதல் 10.03 மணி வரையான கன்னி லக்கினமும் பிரதமைத் திதியும் அமிர்த சித்தயோகமும் உத்தர நட்சத்திரமும் கூடிய சுபவேளையில்,

எங்கள் ஏக புத்திரி
திருநிறை செல்வி

### பிரசாந்தினி

அவர்களுக்கு எமது இல்லத்தில் பூப்புப்புனித நீராட்டுவிழா நடத்தப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சமேதராக வருகைதந்து செல்வியை ஆசீர்வதித்துத் தொடர்ந்து நடைபெறும் விருந்துபசாரத்தில் கலந்து சிறப்பிக்குமாறும் எமது உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*தங்கள் நல்வரவை நாடும்:*

முடக்காடு ஒழுங்கை,
அல்வாய் தெற்கு
(நெல்லியடி கிழக்கு),
அல்வாய்.

திரு. திருமதி ஸ்ரீநிவாஸன் குடும்பத்தினர்.

(சி-37558) (26-16-14)

## விண்ணுலகேகிய முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 16 - 01 - 1941



மறைவு 28 - 08 - 2003

### அமரர் வைத்தியலிங்கம் மகேசதாசன்

(சிவன்கோயிலடி தெற்கு, வல்வெட்டித்துறை)

திதி :- 15.09.2004

விண்ணுலகம் நீ சேர்ந்து ஓராண்டு ஆனதய்யா
புயல் வீசிச் சாய்ந்தது போல் சடுதியில் மறைந்தீரே!
கண்ணுறங்கும் வேளையிலும் கனவிலும் உம் நினைவால்
கலங்கித் தவிக்கின்றோம்
கூடிழந்த பறவைகளாய்த் தவிக்கின்றோம் நாம்
தேடுகின்றோம் உம் தயவை
இனி எப்பிறப்பில் காண்போம் உமை?

எங்களது குடும்பத்தலைவனது ஆத்மாசாந்தியடைய எமது வல்வை இல்லத்தில் நாளை (15.09.2004) புதன்கிழமை நடைபெறவுள்ள கிரியைகளிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

(36064)

மனைவி :- ம.அன்னலக்சுமி
பிள்ளைகள் :- மாலதி,சிவகுமாரன்,குகநேசன்
மருமக்கள் :- சி.அரங்கண்ணல்,சி.ரஜினி
பேரப்பிள்ளைகள் :- கதிர்,சுஸ்வி,யாதவன் மற்றும் உறவினர்கள்

தகவல் :- மகன் ம.சிவகுமாரன். 0773068750

# தமிழீழ மீட்புநிதி மீளப்பெறுவோர் விவரம் - 2004

யாழ்ப்பாணம், செப்.14

தமிழீழ மீட்புநிதிக்கடன் மீளப்பெறுவோரில் மானிப்பாய், தெல்லிப்பழை (ஒருதொகுதி) உதவி அரச அதிபர் பிரிவுகளில் தெரிவானோர் விவரம் வருமாறு:-

## மானிப்பாய் உதவி அரச அதிபர் பிரிவு

| | |
|---|---|
| மா/ 90 | திரு. சின்னத்தம்பி மயில்வாகனம் |
| மா/ 105 | திருமதி. இராஜேஸ்வரி இராசரத்தினம் |
| மா/ 172 | திரு. சிவக்கொழுந்து இராசேந்திரன் |
| மா/ 177 | திரு. சின்னத்தம்பி மருதலிங்கம் |
| மா/ 223 | திரு. பசுபதி சுந்தரலிங்கம் |
| மா/ 251 | திரு. கந்தையா இராசதுரை |
| மா/ 270 | திரு. விசாகமுத்து பொன்னம்பலம் |
| மா/ 346 | திரு. இராசகுலசூரியர் கணபதிப்பிள்ளை |
| மா/ 348 | திரு. நகுலேஸ்வரன் குலஞானவதி |
| மா/ 396 | திருமதி. அன்னலட்சுமி கனகரத்தினம் |
| மா/ 420 | திரு. குட்டித்தம்பி கார்த்திகேசு |
| மா/ 422 | திரு. சுப்பையா கதிர்காமத்தம்பி |
| மா/ 435 | திருமதி. மகிழ்மலர் இராசேந்திரம் |
| மா/ 601 | திரு. கதிரவேலு சுப்ரமணியர் |
| மா/ 607 | திரு. சின்னத்தம்பி சங்கரப்பிள்ளை |
| மா/ 616 | திரு. கந்தர் சரவணமுத்து |
| மா/ 629 | திரு. சின்னப்பு விஸ்வலிங்கம் |
| மா/ 742 | திரு. ஆறுமுகம் சின்னத்துரை |
| மா/ 755 | திரு. செல்லப்பா ஜோசெப்இளையதம்பி |
| மா/ 767 | திரு. செல்லப்பா கந்தையா |
| மா/ 822 | திருமதி. புஸ்பராணி பூபாலசிங்கம் |
| மா/ 838 | திரு. தம்பிமுத்து கந்தையா |
| மா/ 876 | திருமதி. லீலா சிவராசா |
| மா/ 914 | திரு. சுப்பிரமணியம் ஆறுமுகம் |
| மா/ 931 | திரு. முத்துத்தம்பி இராமநாதன் |
| மா/ 956 | திரு. சுப்பையா முருகேசபிள்ளை |
| மா/ 966 | திரு. தம்பு செல்லையா |
| மா/ 968 | திருமதி. சிவபாக்கியம் சுப்பிரமணியம் |
| மா/ 972 | திருமதி. தனேஸ்வரி செல்வராசா |
| மா/ 1034 | திருமதி. லோகேஸ்வரி ரவீந்திரக்குமார் |
| மா/ 1150 | திரு. அரியகுட்டி சௌந்தரராஜா |
| மா/ 1268 | திருமதி. லோகநாயகி பாலசுப்பிரமணியம் |
| மா/ 1299 | திரு. செல்லப்பா பொன்னையா |
| மா/ 1368 | திரு. கதிரேசு சண்முகம் |
| மா/ 1409 | திருமதி. விஜயலட்சுமி கனகசபை |
| மா/ 1461 | திரு. தாமோதரம்பிள்ளை கனகசுந்தரம் |
| மா/ 1468 | திரு. யோசெப் மரியநாதர் |
| மா/ 1479 | திரு. சூசைப்பிள்ளை பாக்கியநாதர் |
| மா/ 1510 | திரு. மாசிலாமணி இராசையா |
| மா/ 1530 | திரு. த.ஆறுமுகம் சங்கரப்பிள்ளை |
| மா/ 1659 | திரு. அருளப்பு செபஸ்ரி |
| மா/ 1694 | திரு. தீத்துஸ் அந்தோனிப்பிள்ளை |
| மா/ 1723 | திரு. மூத்தான் கதிரேசன் |
| மா/ 1755 | திரு. மயில்வாகனம் சுப்பிரமணியம் |
| மா/ 1759 | திரு. சுப்பிரமணியம் செல்வரெட்ணம் |
| மா/ 1772 | திரு. முத்துராசா அரியரத்தினம் |
| மா/ 1781 | திரு. கதிரவேலு குழந்தைவேலு |
| மா/ 1836 | திரு. றம்பியல் தேவசகாயம் |
| மா/ 1854 | செல்வி. தர்மசோதி கனகரத்தினம் |
| மா/ 1873 | திருமதி. பார்பதிப்பிள்ளை பொன்னுத்துரை |
| மா/ 1875 | திருமதி. புனிதவதி திருஅருள் |
| மா/ 1877 | திரு. ஆறுமுகம் பொன்னம்பலம் |
| மா/ 1926 | திருமதி. இராசமலர் சவுந்தரநாயகம் |
| மா/ 1970 | திருமதி. வசந்தி சிவநாதன் |
| மா/ 1972 | திரு. தியோகு பிறின்ஸ்பிலிப் |
| மா/ 1992 | திருமதி. இரத்தினம் இராசையா |
| மா/ 1997 | திருமதி. சின்னம்மா செல்லப்பா |
| மா/ 2104 | திருமதி. இராசநாயகம் அருணாசலம் |
| மா/ 2108 | திருமதி. பரமேஸ்வரி கமலநாதன் |
| மா/ 2123 | திருமதி. மல்லிகாவதி கந்தசாமி |
| மா/ 2126 | திரு. சண்முகம் மார்க்கண்டு |
| மா/ 2143 | திரு. செல்வநாயகம் செல்வதாசன் |
| மா/ 2171 | திரு. காத்தி நவரத்தினம் |
| மா/ 2181 | திருமதி. முத்துப்பிள்ளை செல்லையா |
| மா/ 2200 | திரு. மருதர் அரியகுட்டி |
| மா/ 2230 | திருமதி. அருந்ததி நடராசா |
| மா/ 2256 | திரு. அலேசுப்பிள்ளை யோசவ் |
| மா/ 2388 | திரு. பறனாந்துப்பிள்ளை யேசுநாயகம் |
| மா/ 2470 | திரு. பஸ்தியாம்பிள்ளை சூசைப்பிள்ளை |
| மா/ 2519 | திரு. இராமலிங்கம் தம்பையா |
| மா/ 2525 | திரு. நடராசா விசயகுமார் |
| மா/ 2587 | திரு. மார்க்கண்டு ஈஸ்வரன் |
| மா/ 2666 | திரு. சந்தியாப்பிள்ளை மாசிலாமணி |
| மா/ 2689 | திரு. கந்தையா நாகமணி |
| மா/ 2696 | திரு. விசுவநாதர் நடராசா |
| மா/ 2745 | திரு. சூசைப்பிள்ளை சிங்கராசா |
| மா/ 2764 | திருமதி. சந்தானாஇன்னேசம் செபஸ்ரியாம்பிள்ளை |
| மா/ 2814 | திரு. வீரகத்தி விநாயகராசா |
| மா/ 2825 | திரு. சூசைப்பிள்ளை மாட்டின் |
| மா/ 2826 | திரு. தோமஸ் அன்ரனி |
| மா/ 2879 | திருமதி. லட்சுமிப்பிள்ளை கணபதிப்பிள்ளை |
| மா/ 2995 | திருமதி. ஜேற்றூட் மரியதாஸ் |
| மா/ 3146 | திரு. பத்திநாதர் ஜேம்ஸ் |
| மா/ 3176 | திரு. வேலுப்பிள்ளை இராசையா |
| மா/ 3218 | திரு. யோசெப்யஸ்ரின் றெஜீஸ் |
| மா/ 3296 | திருமதி. அல்வீன்அம்மா மனுவேற்பிள்ளை |
| மா/ 3316 | திரு. பொன்னையா யோசப்பொன்னையா |
| மா/ 3323 | திரு. அறுக்காஞ்சிப்பிள்ளை அந்தோனிப்பிள்ளை |
| மா/ 3351 | திருமதி. மேரிப்பிள்ளை யோசப் |
| மா/ 3360 | திரு. சிம்மியாம்பிள்ளை செபஸ்ரியாம்பிள்ளை |
| மா/ 3385 | திரு. வ.கருணாகரர் கபிரியேல்பிள்ளை |
| மா/ 3457 | திரு. கந்தப்பு சுப்பிரமணியம் |
| மா/ 3466 | திருமதி. மார்க்றிரேட் லோறன்ஸ் |
| மா/ 3489 | திருமதி. பிலோமினா நீக்கிலாஸ் |
| மா/ 3497 | திரு. கதிரவேற்பிள்ளை குமாரசுவாமி |
| மா/ 3533 | திரு. கணவதிப்பிள்ளை கனகசபை |
| மா/ 3572 | திரு. சோமஸ்கந்தக்குருக்கள் சண்முகரத்தினக்குருக்கள் |
| மா/ 3635 | திரு. கந்தையா சிவநாதன் |
| மா/ 3677 | திரு. கந்தையா சபாநாயகம் |
| மா/ 3741 | திரு. விநாசித்தம்பி பொன்னுச்சாமி |
| மா/ 3769 | திருமதி. மேரிறோசஜெயசீலி பத்மநாதன் |
| மா/ 3783 | திருமதி. மரியகொறற்றி சிவசுந்தரலிங்கம் |
| மா/ 3796 | திருமதி. அற்புதம் தம்பிமுத்து |
| மா/ 3849 | திரு. நாகமுத்து மார்க்கண்டு |
| மா/ 3933 | திரு. அந்தோனிமுத்து பிலிப்பு |
| மா/ 3957 | திருமதி. நாகமலர் நடராஜா |
| மா/ 3985 | திரு. சந்தியாப்பிள்ளை கொர்நெலிஸ் |
| மா/ 4016 | திரு. மார்க்கண்டு சிறீதரன் |
| மா/ 4073 | திருமதி. நாகம்மா தாமு |
| மா/ 4089 | திரு. கந்தையா இலங்கையர் |
| மா/ 4106 | திரு. சின்னத்தம்பி சிவக்கொழுந்து |
| மா/ 4113 | திரு. சுப்பையா காசிப்பிள்ளை |
| மா/ 4125 | திரு. சிவப்பிரகாசம் திருவிளங்கம் |
| மா/ 4172 | திரு. கந்தையா குணராசா |
| மா/ 4188 | திரு. முருகேசு கனகரத்தினம் |
| மா/ 4290 | திரு. நாராயணபிள்ளை சின்னத்துரை |
| மா/ 4351 | திரு. தம்பிப்பிள்ளை குகநாதன் |
| மா/ 4398 | திரு. கந்தர் சின்னப்பு |
| மா/ 4399 | திருமதி. சந்திரிகா பாலசுப்பிரமணியம் |
| மா/ 4407 | செல்வி. பெலிசிற்றாமதிவதனி சேம்பர்லேன் |
| மா/ 4528 | திருமதி. கொலஸ்ரிக்கா தேவசகாயம்பிள்ளை |
| மா/ 4564 | திரு. சிதம்பரப்பிள்ளை கயிலாசபிள்ளை |
| மா/ 4577 | திரு. ஆறுமுகம் தர்மலிங்கம் |
| மா/ 4594 | திருமதி. பாக்கியம் கந்தையா |
| மா/ 4611 | திருமதி. அன்னரத்தினம்மா விஸ்வநாதக்குருக்கள் |
| மா/ 4646 | திரு. தியாகராசா கதிரவேல்பிள்ளை |
| மா/ 4661 | திரு. சின்னத்தம்பி அரியரத்தினம் |
| மா/ 4669 | திருமதி. அன்னம்மா பரமன் |
| மா/ 4762 | திருமதி. சிவகாமசுந்தரி சிவக்கொழுந்தன் |
| மா/ 4851 | திருமதி. சகாயநாயகி பாக்கியநாதர் |
| மா/ 4900 | திருமதி. நல்லம்மா தம்பு |
| மா/ 4904 | திரு. அன்னியன் மேரியோசப் |
| மா/ 4955 | திரு. கந்தையா செல்லக்கண்டு |
| மா/ 5005 | திரு. இரத்தினம் அற்புதராசா |
| மா/ 5036 | திரு. லோப்புப்பிள்ளை அமிர்தநாதன்யோசப் |
| மா/ 5066 | திரு. செல்லையா பஞ்சாட்சரம் |
| மா/ 5118 | திரு. கணபதி பேரம்பலம் |
| மா/ 5189 | திருமதி. இராசம்மா செல்லத்துரை |
| மா/ 5238 | திருமதி. மீனாட்சி லோறன்ஸ் |
| மா/ 5255 | திரு. சுப்பையா செல்வநாயகம் |
| மா/ 5258 | திரு. சுவாமிநாதன் சீவரத்தினம் |
| மா/ 5278 | திருமதி. கௌரியம்மா தம்பிராசா |
| மா/ 5287 | திரு. பொன்னம்பலம் மயில்வாகனம் |
| மா/ 5295 | திரு. சின்னத்தம்பி முருகேசபிள்ளை |
| மா/ 5328 | திரு. நாகமுத்து சற்குணராசா |
| மா/ 5338 | திரு. வயிரமுத்து செல்லத்துரை |
| மா/ 5364 | திரு. அந்தோனிப்பிள்ளை சூசைப்பிள்ளை |
| மா/ 5366 | திருமதி. இராசம்மா பாபரா தம்பிஐயா |
| மா/ 5378 | திருமதி. அன்னமேரி சமரக்கோன் |
| மா/ 5381 | திருமதி. பரமேஸ்வரி தங்கராசா |
| மா/ 5387 | திரு. தியாகர் சின்னத்தம்பி |
| மா/ 5401 | திரு. கார்த்தியேசு கந்தையா |
| மா/ 5411 | செல்வி. பற்றிமா சூசைப்பிள்ளை |
| மா/ 5419 | திரு. சிற்றம்பலம் கந்தசாமி |
| மா/ 5436 | திரு. சுவாம்பிள்ளை சூசைப்பிள்ளை |
| மா/ 5468 | திரு. வீரகத்திப்பிள்ளை நவரத்தினராசா |
| மா/ 5509 | திரு. துரையன் தங்கராசா |
| மா/ 5515 | திரு. அம்பலம் வேலுப்பிள்ளை |
| மா/ 5519 | திருமதி. பிரகாசியம்மா மரியாம்பிள்ளை |
| மா/ 5541 | திரு. சிவக்கொழுந்து பாலசுப்பிரமணியம் |
| மா/ 5591 | செல்வி. கலைச்செல்வி சுப்பிரமணியம் |
| மா/ 5603 | திரு. சின்னத்தம்பி குமாரசாமி |
| மா/ 5641 | திருமதி. வேலுப்பிள்ளை பொன்னம்பலம் |
| மா/ 5644 | திருமதி. பராசக்தி கந்தையா |
| மா/ 5647 | திரு. சின்னவன் தம்பிமுத்து |
| மா/ 5658 | திரு. விஸ்வநாதர் இலட்சுமணபிள்ளை |
| மா/ 5685 | திரு. கனகசுந்தரம் சுப்பிரமணியம் |
| மா/ 5691 | திரு. கிஸ்ணர் கணபதிப்பிள்ளை |
| மா/ 5710 | திரு. வேலுப்பிள்ளை இராசையா |
| மா/ 5736 | திருமதி. தேவரத்தினம் இராசையா |
| மா/ 5770 | திரு. பொன்னையா கதிரேசு |
| மா/ 5782 | திரு. துரையப்பா கணேசலிங்கம் |
| மா/ 5784 | திருமதி. யசிந்தாகொன்சலா எட்வின்கெலன் |
| மா/ 5796 | திரு. சந்தியாப்பிள்ளை மரியாம்பிள்ளைஅந்தோனிப்பிள்ளை |
| மா/ 5872 | திரு. ஆறுமுகம் பாலகிருஷ்ணன் |
| மா/ 5873 | திருமதி. இரத்தினம் பொன்னம்பலம் |
| மா/ 5887 | திரு. கவிரியல் பொன்ராசா |
| மா/ 5889 | திருமதி. இந்திராணி பொன்னுத்துரை |
| மா/ 5898 | திருமதி. பூமணி சுப்பிரமணியம் |
| மா/ 5924 | திருமதி. புவனேஸ்வரி பொன்னுச்சாமி |
| மா/ 5928 | திரு. ஆசை இராசா |
| மா/ 5949 | திருமதி. புனிதவதி சச்சிதானந்தன் |
| மா/ 5968 | திருமதி. மகேஸ்வரி கந்தையா |
| மா/ 6007 | திருமதி. மகேஸ்வரி கணபதிப்பிள்ளை |
| மா/ 6059 | திரு. பொன்னையா செல்லத்துரை |
| மா/ 6124 | திரு. கந்தையா மயில்வாகனம் |
| மா/ 6143 | திருமதி. மாகிறேற்றம்மா ஜேம்ஸ் |
| மா/ 6158 | திருமதி. சேதுப்பிள்ளை கார்த்திகேசு |
| மா/ 6181 | திரு. ஆசீர்வாதம் குசைதாஸ் |
| மா/ 6193 | திருமதி. மேரிதிரேசாசெல்லம்மா இன்மனுவேல் |
| மா/ 6214 | திரு. அருணாசலம் தம்பிப்பிள்ளை |
| மா/ 6227 | திரு. சுப்பையா இராசேந்திரன் |
| மா/ 6242 | திரு. றிச்சாட் யோட்ஸ்டேவிட் |
| மா/ 6300 | திருமதி. முத்தம்மா அருணாசலம் |
| மா/ 6354 | திரு. அந்தோனிப்பிள்ளை ஞானப்பிரகாசம் |
| மா/ 6357 | திரு. சந்தியாப்பிள்ளை சூசைப்பிள்ளை அந்தோனிப்பிள்ளை |
| மா/ 6366 | திரு. சேனாதிராஜா கனேந்திரராஜா |
| மா/ 6367 | திருமதி. பொன்னம்மா சங்கரப்பிள்ளை |
| மா/ 6407 | திரு. ஜோசேப்பு ஞானாபரணம் |
| மா/ 6427 | திரு. அப்புக்குட்டி பொன்னையா |
| மா/ 6431 | திரு. சின்னத்தம்பி பொன்னம்பலம் |
| மா/ 6492 | திரு. அமிர்தலிங்கம் தவராசா |
| மா/ 6544 | திருமதி. இராசமலர் செல்லையா |
| மா/ 6585 | திருமதி. நாகபூஷணி அரசரத்தினம் |
| மா/ 6593 | திரு. டேவிற் ஞானமுத்து |
| மா/ 6602 | திரு. அமலதாசன் மரியதாஸ் |
| மா/ 6621 | திரு. கணபதிப்பிள்ளை கந்தையா |
| மா/ 6632 | திருமதி. நாகரத்தினம் சித்திரவேலு |
| மா/ 6642 | திரு. விநாசித்தம்பி வேலாயுதபிள்ளை |
| மா/ 6685 | திரு. ஆண்டி முருகேசு |
| மா/ 6689 | திருமதி. வள்ளியம்மா கிருஸ்ணபிள்ளை |
| மா/ 6691 | திருமதி. செல்வம் வைரமுத்து |
| மா/ 6699 | திருமதி. பகவதியம்மா நாகலிங்கம் |
| மா/ 6700 | திருமதி. வடிவாம்பிகை சுந்தரம்பிள்ளை |
| மா/ 6767 | திருமதி. அமிர்தவல்லி அமரசிங்கம் |
| மா/ 6783 | திருமதி. ஆனாப்பிள்ளை நீக்கிலாப்பிள்ளை |
| மா/ 6799 | திருமதி. அன்னம்மா சுவாம்பிள்ளை |
| மா/ 6841 | திரு. இராமலிங்கம் தம்பிராசா |
| மா/ 6884 | திருமதி. ருக்மணி அருமைநாயகம் |
| மா/ 6890 | திரு. வீரவாகு நாகரத்தினம் |
| மா/ 6901 | திரு. சின்னத்தம்பி பொன்னையா |
| மா/ 6935 | திருமதி. அமுதாம்பிகை கந்தையா |
| மா/ 7020 | திரு. ஆறுமுகம் மார்க்கண்டு |
| மா/ 7047 | திருமதி. தங்கரத்தினம் முத்துக்குமாரசாமி |
| மா/ 7078 | திருமதி. கிறேஸ்சுகிர்தமலன் மேன் |

## தெல்லிப்பழை உதவி அரச அதிபர் பிரிவு

| | |
|---|---|
| தெ/ 16 | திருமதி. தங்கரத்தினம் நல்லதம்பி |
| தெ/ 115 | திரு. சின்னத்தம்பி பொன்னுத்துரை |
| தெ/ 144 | திருமதி. புஸ்பராணி ஜெயசிங்கம் |
| தெ/ 149 | திரு. சரவணமுத்து பரநிருபசிங்கம் |
| தெ/ 150 | திரு. ஞானப்பிரகாசம் பத்திநாதர் |
| தெ/ 152 | திரு. நல்லதம்பி செல்லத்துரை |
| தெ/ 154 | திரு. ஞானப்பிரகாசம் பத்திநாதர் |
| தெ/ 190 | திரு. முத்து தில்லைநடராசா |
| தெ/ 231 | திருமதி. ஜெயந்தி ஸ்கந்தகுமார் |
| தெ/ 252 | திரு. இளையதம்பி சின்னையா |
| தெ/ 336 | திருமதி. சரஸ்வதி சுப்பிரமணியம் |
| தெ/ 396 | திருமதி. சந்திரவதனா அருளம்பலம் |
| தெ/ 520 | திருமதி. ஸ்ரீசத்தியபாமா நித்தியானந்தம் |
| தெ/ 600 | திரு. கணபதி மார்க்கண்டு |
| தெ/ 615 | திரு. விஸ்வலிங்கம் முருகையா |
| தெ/ 616 | திருமதி. இந்திராணி வடிவேல் |
| தெ/ 686 | திரு. சிதம்பரப்பிள்ளை பொன்னம்பலம் |
| தெ/ 687 | திரு. மயிலு பசுபதி |
| தெ/ 716 | திருமதி. நிர்மலா தாமோதரம்பிள்ளை |
| தெ/ 781 | திரு. பொன்னுச்சாமி ஐயாத்துரை |
| தெ/ 789 | திரு. தாமு ஐயம்பிள்ளை |
| தெ/ 877 | திரு. வேலுப்பிள்ளை சுப்பிரமணியம் |
| தெ/ 890 | திரு. வேலுப்பிள்ளை முத்தையாப்பிள்ளை |
| தெ/ 896 | திருமதி. ஞானேஸ்வரி பாலசிங்கம் |
| தெ/ 908 | திரு. பொன்னம்பலம் யோகலிங்கம் |
| தெ/ 956 | திரு. சின்னத்தம்பி செல்லத்துரை |
| தெ/ 978 | திரு. நல்லப்பா சரவணமுத்து |
| தெ/ 1001 | செல்வி. மனோன்மணி சின்னத்தம்பி |
| தெ/ 1016 | திரு. சின்னத்தம்பி கந்தையா |
| தெ/ 1032 | திரு. விநாயகர் கந்தையா |
| தெ/ 1033 | திரு. சின்னத்தம்பி கந்தசாமி |
| தெ/ 1062 | திரு. சபாபதி கதிரமலை |
| தெ/ 1069 | திரு. சின்னத்துரை சண்முகநாதன் |
| தெ/ 1071 | திருமதி. சிவமணி விஜயகுமாரன் |
| தெ/ 1115 | திரு. நாகநாதர் கணபதிப்பிள்ளை |
| தெ/ 1138 | திரு. பொன்னுத்துரை தங்கராசா |
| தெ/ 1144 | திரு. சுப்பிரமணியம் முருகையா |
| தெ/ 1168 | திரு. நாகலிங்கம் இராமநாதன் |
| தெ/ 1189 | திரு. செல்லப்பா சந்திரசேரம் |
| தெ/ 1264 | திருமதி. ஞானசோதி சின்னத்தம்பி |
| தெ/ 1276 | திரு. இராஜேந்திரா அரவிந்தன் |
| தெ/ 1370 | திரு. காசிப்பிள்ளை கதிர்காமத்தம்பி |
| தெ/ 1374 | திருமதி. தனலட்சுமி தாமோதரம்பிள்ளை |
| தெ/ 1383 | திரு. கந்தசாமி வைரவநாதன் |
| தெ/ 1489 | திரு. கந்தையா இராசநாயகம் |
| தெ/ 1493 | திரு. சரவணமுத்து சண்முகநாதன் |
| தெ/ 1528 | திரு. சேனாதிராசா சிதம்பரஉடையார் |
| தெ/ 1557 | திரு. சின்னத்தம்பி சங்கரப்பிள்ளை |
| தெ/ 1564 | திரு. தில்லையம்பலம் அருமைநாயகம் |
| தெ/ 1566 | திரு. தில்லையம்பலம் அருமைநாயகம் |
| தெ/ 1593 | திரு. விசுவலிங்கம் இரங்கநாதன் |
| தெ/ 1646 | திரு. கிருஷ்ணர் சின்னையா |
| தெ/ 1784 | திரு. வைரவி வல்லிபுரம் |
| தெ/ 1828 | திரு. சரவணமுத்து சுப்பிரமணியம் |
| தெ/ 1864 | திரு. மயில்வாகனம் விக்கினேஸ்வரன் |
| தெ/ 1887 | திரு. அப்புத்துரை நாகலிங்கம் |
| தெ/ 1957 | திரு. சண்முகம் கனகசபை |
| தெ/ 1972 | திரு. மோசஸ் செபமாலை |
| தெ/ 1991 | திருமதி. இராசம்மா வல்லிபுரம் |
| தெ/ 2133 | திரு. சின்னையா அம்பிகைபாகன் |
| தெ/ 2157 | திரு. செல்லையா சிவசுப்பிரமணியம் |
| தெ/ 2158 | திரு. சின்னத்தம்பி அசோக்குமார் |
| தெ/ 2198 | திரு. நல்லதம்பி குருசாமி |
| தெ/ 2228 | திரு. சேனாதிராஜா சிதம்பரஉடையார் |
| தெ/ 2254 | திரு. இளையதம்பி சரவணமுத்து |
| தெ/ 2368 | திரு. இளையவர் நவசிவாயம் |
| தெ/ 2371 | திரு. இளையவர் நமசிவாயம் |
| தெ/ 2391 | திரு. சுப்பிரமணியம் கந்தையா |
| தெ/ 2399 | திரு. பாலசுந்தரக்குருக்கள் கெங்காதரசர்மா |
| தெ/ 2467 | திரு. அருளம்பலம் வீரசிங்கம் |
| தெ/ 2515 | திருமதி. அழகம்மா சுந்தரம்பிள்ளை |
| தெ/ 2571 | திருமதி. செல்வநாயகி குமாரசாமி |
| தெ/ 2651 | திரு. சீனிவாசகம் ஜெயநாதன் |
| தெ/ 2880 | திரு. முத்து சின்னத்துரை |
| தெ/ 2987 | செல்வி. இரத்தினமலர் வல்லிபுரம் |
| தெ/ 2999 | செல்வி. இதயகுமாரி கனகரத்தினம் |
| தெ/ 3002 | திரு. சின்னத்தம்பி சத்தியலோகநாதன் |
| தெ/ 3013 | திரு. கந்தசாமி சிறீதரன் |
| தெ/ 3050 | திருமதி. கலாவதி கருணாந்தசிவம் |
| தெ/ 3088 | திரு. இளையதம்பி சின்னத்தம்பி |
| தெ/ 3095 | திரு. கிருஷ்ணர் சிவப்பிரகாசம் |
| தெ/ 3112 | திரு. இராசநாயகம் இடாரூடன் |
| தெ/ 3139 | திரு. பொன்னம்பலம் கைலாசபிள்ளை |
| தெ/ 3161 | திருமதி. உருக்குமணி இரத்தினம் |

(வளரும்)

## பகிரங்க அறிவித்தல்

யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 77 ஆம் வரி மதிப்பிலக்கம் கொண்டதும் 'சியானாஸ்' என்னும் வியாபாரப் பெயரில் வியாபாரம் நடைபெற்று வருவதுமான கடைக்கட்டடம் யாழ்ப்பாணம் உடையார் ஒழுங்கை, 7 ஆம் இலக்கத்திலும் தற்காலிகமாகத் தற்போது கொழும்பிலும் வசிப்பவர்களுமாகிய

1. கதிரேஸ்வரியும்
2. பரமசாமிச் செட்டியார் செல்வநாதனும்
3. பெண் இரங்கநாயகி அம்மாளும்

ஆகியவர்களின் சட்டபூர்வமான உரிமையும் சொந்தமும் ஆனதென்றும் குறித்த கடைக்கட்டடத்தில் திரு. முகம்மது உசனார் முகம்மது தாஹிர் என்பவர் குத்தகையாளராக மட்டுமே இருந்து வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகிறார் என்றும் அவருடைய குத்தகைக் காலம் 01.04.2005 இல் முடிவடைகிறது என்றும் அக்குத்தகைக் காலம் எக்காரணம் கொண்டும் நீடிக்கப்படமாட்டாது என்றும் அக்கடைக் கட்டடத்தினை அல்லது அதன் எப்பாகத்தையாவது அல்லது அதில் நடைபெறும் வியாபாரத்தையோ எவரும் கொள்விலையாகவோ குத்தகைக்கோ அல்லது வாடகைக்கோ அல்லது கமிஷன் அடிப்படையிலோ பெற்றுக்கொள்ளவோ அல்லது அவ்வாறான முயற்சிகளில் ஈடுபடவோ வேண்டாம் எனவும் இத்தால் சகலருக்கும் அறிவிக்கப்படுகின்றது.

பரமசாமிச் செட்டியார் செல்வநாதன்
80
1/1, W.A. சில்வா மாவத்தை, கொழும்பு 6.
(36356)(34-18-19)


## படகில் புகைத்தலுக்குத் தடை

நெடுந்தீவிற்கும் - குறிகாட்டுவானுக்கும் இடையில் பயணிகள் சேவையில் ஈடுபடுத்தப்படும் பல நோ.கூ. சங்கப் படகுகளில் புகைபிடிப்பது முற்றாகத் தடைசெய்யப்பட்டுள்ளது.

புகைப்பிடிப்பதன் காரணமாக ஏனைய பயணிகளில் பலர் அசௌகரியங்களை எதிர் நோக்குவதாகச் சுட்டிக்காட்டப்பட்டதை அடுத்தே புகைபிடித்தலுக்கு படகில் தடை விதிக்கப்பட்டிருப்பதாகத் தெரிவிககப்பட்டது. (4-112)

## வசதிகள்.....

(5 ஆம் பக்கத் தொடர்ச்சி)

எக்ஸ்-றே, ஆய்வு கூடம் ஆகியவற்றிலும் சுழற்சிமுறையில் பணியாற்றும் ஆளணி போதியளவு இல்லாமலேயே இயங்குகின்றன.

இதனாலேயே யாழ். வைத்தியசாலையில் சுழற்சிமுறைத் திட்டத்தை நடைமுறைப்படுத்த முடியாத இக்கட்டான நிலை வைத்தியசாலை நிர்வாகத்திற்கு ஏற்பட்டுள்ளது.

கொழும்பு மற்றும் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெறும் அவசர நோயாளர்களுக்கு வேண்டிய அவசரதுணை மருத்துவ சேவைத் தேவைகளுக்கு வழங்கப்படுவதுபோல நிதி ஒதுக்கீட்டினைக் கேட்கும் அமைச்சு அதனை வழங்க முன்வரவில்லை.

இதனால் நோயாளர்களுக்கு ஏற்பட்டுள்ள அவலநிலையைப் போக்க யாழ்.போதனா வைத்தியசாலை நிர்வாகத்துக்கு எதுவுமே செய்யமுடியாத இக்கட்டானநிலை ஏற்பட்டுள்ளது. நோயாளர் களும் உயிராபத்தைச் சந்திக்கவேண்டிய அவலநிலை தோற்றுவிக்கப்பட்டுள்ளது.

மேலும் தற்போது யாழ். போதனா வைத்தியசாலைக்கு நவீன முறையிலான வைத்திய வசதிகள் கிடைத்துள்ளபோதிலும், அண்மைக் காலமாக திருப்தியான சேவைகள் வைத்தியசாலையால் வழங்கப்பட்டபோதிலும் அரசின் இத்தகைய செயற்பாட்டினால் அச்சேவைகளைப் பொதுமக்கள் பூரண அளவில் பெற்றுக் கொள்ளமுடியாத துர்ப்பாக்கியநிலையே எஞ்சியுள்ளது. ☆




## சொலெக்ஸ் ஒப்ரிக்கல் & டென்ரல்வேக்ஸ்

எங்களால் முதன்முறையாக அறிமுகப்படுத்தப்பட்ட பிறேம் அற்ற (RIMLESS) கண்ணாடிகளையும், சண்கிளாஸ் வகைகளையும் யாழ்.நகரில் கொழும்பு விலைக்கே பெற்றுக்கொள்ளலாம்.

இத்துடன்.................



★ பல் சம்பந்தமான ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்ளவும்
வசீகரமான சங்குப் பற்களைக் கட்டிக்கொள்ளவும்
★ மிதப்புப் பற்களுக்கு இலகுமுறையில் கிளிப்போட்டுக் கொள்ளவும், சீர்செய்துகொள்ளவும்
★ வேணடிய அளவில் மாபிள் கண்களைப் பெற்றுக்கொள்ளவும்

நாடுங்கள்: சொலெக்ஸ் பல்மூக்குக் கண்ணாடியகம்,
516, ஆஸ்பத்திரி வீதி, (OPD இற்கு முன்பாக)
யாழ்ப்பாணம்.

கிளை: சொலெக்ஸ் ஒப்ரிக்கல்
வண்ணமாடம் லேன், நெல்லியடி.
T.P.:222 7631

★ பிரதி வெள்ளிக்கிழமைகளில் நெல்லியடியில் தொடர்புகொள்ளலாம்.

(சி37637)(34-19-18)



## பகிரங்க அறிவித்தல்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வண்ணார்பண்ணைக் கோவிற்பற்று, வண்ணார்பண்ணை வடமேற்கு இறை 'சுரிவெளி' என்னும் 50 நெற்பரப்பு விஸ்தீரணம்கொண்ட காணி யாழ்ப்பாணம் முஸ்லிம் கல்லூரி வீதியில் வசித்தவரும் தற்போது கொழும்பு தெகிவளை, குவாறி றோட் 54/1B என்னும் இலக்கத்தில் வதியும் அப்துல் அசிஸ் முகம்மது அப்துல் ரஷீத் ஹாஜியார் என்பவருக்கும் அவரின் சகோதர சகோதரிகளுக்கும் சொந்தமானது. இந்த ஆதனத்தை அல்லது அதன் எப்பாகத்தையும் எவரும் அறுதி வாங்கவோ குத்தகை எடுக்கவோ அல்லது வேறு எந்த விதத்திலும் பாரம் பராதீனம் செய்யவோ வேண்டாம் என எச்சரிக்கை செய்யபபடுவதுடன் அந்த ஆதனம் சம்பந்தமாகக் காரியங்களைச் செய்ய எவருக்கும் எதுவிதமான அதிகாரமும் வழங்கப்படவில்லை என்பதையும் அறிந்துகொள்ளுமாறு இத்தால் பொதுமக்கள் வேண்டிக்கொள்ளப்படுகிறார்கள். அவ்வாதனம் பொம்மைவெளியில் தற்போது கண்ணிவெடி அகற்றும் செயற்பாடுகள் நடைபெறும் ஒரு பகுதியாகவும் உள்ளது. குறித்த ஆதனம் சம்பந்தமாக உரிமைக்காரருடன் தொடர்புகொள்ள விரும்புவோர் கொழும்பு 2735736 இலக்கம் மூலமாகத் தொடர்புகொள்ளவும்.

அப்துல் அசிஸ் முகமது ரஷீத் ஹாஜியார்
56/1B, குவாறி றோட்,தெகிவளை.

(36357) (19-18-34)



## மனோதத்துவ வைத்தியம்
## (GENERAL PSYCHO THERAPY)

இப்பொழுது யாழ்ப்பாணத்தில்

14.09.2004 -18.09.2004வரை

முன்கூட்டியே பதிவுசெய்யவும்.

இளைஞர்களே!

☆ சக்தி குறைவு ☆ ஞாபக மறதி ☆ பயம்
☆ ஆளுமைக்குறைவு ☆ நடுக்கம் ☆ நித்திரைக் குறைவு
என்பவற்றால் தாழ்வு மனப்பான்மையா?

கவலையை விடுங்கள் ஆரம்ப மனநோய் பாதிப்பு உடனடியாக நீங்க என்னுடன் உடனடியாகத் தொடர்புகொள்ளுங்கள்! ஆண்மைச்சக்தி குறைவுதான் உங்கள் கவலையா? மனோதத்துவ வைத்தியத்தாலும் மூலிகை மருந்துகளாலும் வெற்றி பெறலாம். பலர் இங்கே சிகிச்சைபெற்று பூரண சுகமடைந்தமைக்கு ஆதாரம் உண்டு.

குறிப்பு: இறுதிநேரத்தில் வருவதைத் தவிர்க்கவும்.

தொடர்புகளுக்கு: பலரது பாராட்டைப் பெற்ற

பிரபல மனோதத்துவ நிபுணர்
Dr.P.ஆறுமுகம் S.M.P.
A.S.N. சுற்றுலா விடுதி,
392/A, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.
(பெருமாள் கோயிலுக்கும் வெலிங்டன் சந்திக்குமிடையில்).
Govt. Regd. No. 9492 Hot Line: 0777 569205 T.P.: 3181, 5399
(முன்கூட்டியே பதிவுகளை மேற்கொள்ளவும்)

(சி-30109) (34-19-18)



# சூரியன் கேட்டால்
# ரூபா. 50,000

நாள்தோறும். காலை 07.00 முதல் காலை 10.00 வரை.

சூரியன் FM
SOORIYAN FM
93.0 FM
யாழ்ப்பாணம்

A member of the ABC Radio Network

LEO BURNETT

103.2 கொழும்பு / தெற்கு 93.0 யாழ்ப்பாணம் 97.3 கண்டி / ரஜரட்ட 97.9 நாடு முழுவதும்.

# மினி உலகக் கிண்ணக் கிரிக்கெட் -2004



ஆட்டமிழப்பு ஒன்றுக்கு முறையீடு செய்யும் தென்னாபிரிக்க அணியின் பந்துவீச்சாளர் ஷேன் பொலக்.



விக்கெட் ஒன்றை வீழ்த்திய மகிழ்ச்சியில் தென்னாபிரிக்க அணியின் பந்துவீச்சாளர் லாங்வெல்டுடன் நிக்கிபோஜே.



பங்களாதேஷ் வீரர் அடித்த பந்தை பிடிஎடுத்த மக்கயா நிற்னி மற்றும் அணித் தலைவர் கிரேம் ஸ்மித்.

## பங்களாதேஷ் அணியை இலகுவாக வெற்றிகொண்டது தென்னாபிரிக்கா

மினி உலகக் கிண்ணப் போட்டியில் நேற்று முன்தினம் தென்னாபிரிக்க - பங்களாதேஷ் அணிகளுக்கிடையே நடைபெற்ற போட்டியில் தென்னாபிரிக்க அணி பங்களாதேஷ் அணியை மிக இலகுவாக 9 விக்கெட்டுக்களால் வெற்றியீட்டியுள்ளது.

நாணயச் சுழற்சியில் வெற்றியீட்டிய பங்களாதேஷ் அணி, முதலில் துடுப்பெடுத்தாடிய போதும் தென்னாபிரிக்க வீரர்களின் பந்துவீச்சுக்கு முகம்கொடுக்கமுடியாமல் அடுத்தடுத்து விக்கெட்டுக்களை இழந்தது. இதனால், 31.3 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 93 ஓட்டங்களை மாத்திரம் பெற்றது பங்களாதேஷ் அணி.

அணியின் சார்பில் நபீஸ் இக்பால் 40 ஓட்டங்களையும் காலித் மசூத் 24 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் தென்னாபிரிக்க அணியின் சார்பில் லாங்வெல்ட் 17 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களையும் நிற்னி 19 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களையும் நிக்கி போஜே 23 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

மிகவும் இலகுவான இலக்குடன் தொடர்ந்து களமிறங்கிய தென்னாபிரிக்க அணி 17.5 ஓவர்களில் ஒரு விக்கெட்டை மாத்திரம் இழந்து வெற்றியீட்டியது. அணியின் சார்பில் அணித் தலைவர் ஸ்மித் ஆட்டமிழக்காமல் 42 ஓட்டங்களையும் ஜக்கலிஸ் ஆட்டமிழக்காமல் 40 ஓட்டங்களையும் எடுத்தனர். ஆட்டநாயகனாக லாங்வெல்ட் தெரிவானார்.

நியூஸிலாந்து அணியுடன் 5 போட்டிகளையும் இலங்கை அணியுடன் 5 போட்டிகளையும் தொடர்ச்சியாகத் தோல்வியுற்றிருந்த தென்னாபிரிக்க அணிக்கு பங்களாதேஷ் அணியுடனான வெற்றி ஆறுதல் அளிப்பதாக இருக்கும். (10)

## மினி உலகக் கிண்ணப் போட்டிதான் யுவராஜ், ஷேவாக்குக்கு கடைசி வாய்ப்பா?






லண்டன்,செப்.14

தற்பொழுது நடைபெற்றுவரும் மினி உலகக் கிண்ணப் போட்டி ஷேவாக், யுவராஜ்சிங் ஆகிய இருவருக்கும் கடைசி வாய்ப்பாக இருக்கக்கூடும் என்று அணித் தலைவர் கங்குலி எச்சரிக்கை விடுத்துள்ளார்.

சிலகாலமாக துடுப்பாட்டத்தில் திறமைகாட்டாத நான், லக்ஸ்மன், கைப் ஆகியோர் மீண்டும் துடுப்பாட்டத்தில் சோபிக்கத் தொடங்கிவிட்டோம். ஆனால், ஷேவாக்கும், யுவராஜ் சிங்கும் மீண்டும் தமது திறமையை வெளிக்காட்டவில்லை. எனவே, பாகிஸ்தான் அணியுடனான போட்டியில் அவர்கள் கட்டாயம் தமது திறமையை வெளிப்படுத்தவேண்டும் என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இருவரும் சிறந்த வீரர்கள் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை. கடந்தகாலங்களில் இவர்கள் இந்திய அணியின் வெற்றிகள் பலவற்றுக்குக் காரணமாக இருந்துள்ளனர். ஆனால் சிலகாலமாக இருவரது துடுப்பாட்டத் திறனும் வீழ்ச்சி கண்டுள்ளது எனவும் அடுத்த போட்டியில் இவர்கள் தமது திறனை வெளிப்படுத்தாவிட்டால் இவர்களை அணியில் சேர்த்துக்கொள்வது பற்றி ஆலோசிக்க வேண்டிவரும் எனவும் கங்குலி எச்சரிக்கை விடுத்துள்ளார். (10)

## எதிர்பார்ப்பைத் தூண்டும் '19'

இந்தியா - பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான கிரிக்கெட் மோதல் எப்போதுமே எதிர்பார்ப்புகளை ஏற்படுத்தும். உலகக் கிண்ணப் போட்டி, மினி உலகக் கிண்ணப் போட்டி போன்ற முக்கிய தொடர்களில் இரு அணிகளும் சந்தித்தால் எதிர்பார்ப்பின் அளவு இன்னும் அதிகம். அப்படி ஒரு பரபரப்பான மோதல் எதிர்வரும் 19ஆம் திகதி இடம்பெறவுள்ளது.

### பலம்... பலவீனம்

இந்தியா - பாகிஸ்தான் இரு அணிகளில் எது வெற்றிபெறுகிறதோ அந்த அணி அரையிறுதிக்குச் செல்லும். மற்ற அணி வீட்டுக்குக் கிளம்பவேண்டியதுதான். ஆக 'வாழ்வா சாவா' போராட்டம் இது. இந்திய அணி பாகிஸ்தானை அவர்களது சொந்தமண்ணில் வெற்றிபெற்றது பழைய கதை. அதற்குப் பிறகு கொஞ்சம் பலவீனமாக உள்ளது இந்திய அணி. அந்தத் தோல்விகளில் பாடம் கற்ற பாகிஸ்தான் அணி, புதிய பயிற்சியாளர் பொப்வூல்மரின் உதவியுடன் அதிக பலம் பெற்றிருக்கிறது.

### இரு தோல்விகள்

அந்தத் தொடருக்குப் பிறகு இந்திய - பாகிஸ்தான் அணிகள் இருமுறை சந்தித்திருக்கின்றன. இரண்டிலுமே பாகிஸ்தான் வெற்றியீட்டியதைக் கவனிக்கவேண்டியது அவசியம். இலங்கையில் நடந்த ஆசியக் கிண்ணக் கிரிக்கெட் தொடரில் பாகிஸ்தான் அணி இறுதிப் போட்டிக்குத் தகுதிபெறாவிட்டாலும் கூட, சூப்பர் லீக் சுற்றில் இந்திய அணியை 59 ஓட்டங்களில் வென்றது.

அடுத்து இரு அணிகளும் ஹொலண்ட் முத்தரப்புத் தொடரில் சந்தித்துக்கொண்டன. ஆசியக் கிண்ணத் தோல்விக்கு பழிவாங்கி விடுவார்கள் என்று எதிர்பார்த்தால் 66 ஓட்டங்களில் பாகிஸ்தான் மீண்டும் வெற்றியீட்டியது. வரிசையாக பாகிஸ்தானிடம் அடுத்தடுத்து இருதோல்விகள் இந்தியாவுக்கு. இந்த இரு வெற்றிகள் பாகிஸ்தான் வீரர்களுக்கு மனரீதியாக கூடுதல் பலமளித்துள்ளது.

அடுத்து, மூன்றாவது முறையாக மினி உலகக் கிண்ணத் தொடரில் எதிர்வரும் 19ஆம் திகதி இரு அணிகளும் சந்திக்கின்றன. (10)

**இன்றைய போட்டிகள்**

இலங்கை எதிர் சிம்பாப்வே

பாகிஸ்தான் எதிர் கென்யா

## வழிகாட்டுதல் குழுத் தலைவராக டால்மியா

சென்னை,செப்.14

இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் வழிகாட்டுதல் குழுத்தலைவராக ஜக்மோகன் டால்மியா தெரிவுசெய்யப்பட்டுள்ளார். தற்பொழுது இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் தலைவராக இருக்கும் டால்மியாவின் பதவிக்காலம் எதிர்வரும் 29ஆம் திகதியுடன் நிறைவடையவுள்ளது.

இதனைக் கருத்திற்கொண்டே வழிக்காட்டுதல் குழுத்தலைவர் பதவியை டால்மியாவுக்கு வழங்க கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபை உறுப்பினர்கள் முன்வந்தனர். (10)



தென்னாபிரிக்க வீரர் ஜக்கலிஸின் ஆட்டமிழப்பு தொடர்பாக முறையீடு செய்யும் பங்களாதேஷ் விக்கெட் காப்பாளர்



பந்தொன்றைத் தடுத்தாட முயலும் பங்களாதேஷ் துடுப்பாட்ட வீரர் நபீஸ் இக்பால்

## பாகிஸ்தான் அணியை வெற்றிபெறுவோம் நம்பிக்கை தெரிவிக்கின்றார் கங்குலி



லண்டன்,செப்.14

மினி உலகக் கிண்ணப் போட்டியில் கென்ய அணியைத் தோற்கடித்தது போல் பாகிஸ்தான் அணியையும் வீழ்த்துவோம் என்று இந்திய அணித் தலைவர் கங்குலி நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

இப்போட்டியில் இந்தியா தனது தொடக்க ஆட்டத்தில் 98 ஓட்டங்கள் வித்தியாசத்தில் கென்யாவைத் தோற்கடித்தது. இந்தியாவின் வெற்றி குறித்து பின்னர் கங்குலி செய்தியாளர்களிடம் கூறியதாவது:-

இந்திய அணி மீண்டும் நல்ல நிலைக்குத் திரும்பியுள்ளது. கென்யாவுக்கு எதிரான ஆட்டத்தில் இந்திய வீரர்களின் துடுப்பாட்டம் மற்றும் பந்துவீச்சு என்பன மிகவும் சிறப்பாக இருந்தன.

நானும் லக்ஸ்மனும் இணைந்து சிறப்பாகத் துடுப்பெடுத்தாடினோம். ட்ராவிட்டும் கைப்பும் அதிரடியாக ஆடி ஓட்டங்களைக் குவித்தது மகிழ்ச்சி அளிக்கிறது.

கடந்த இரண்டு ஆட்டங்களிலும் 90 ஓட்டங்களில் அவுட் ஆகியுள்ளேன். சதம் அடிக்க முடியாமல் போனது வருத்தம் அளிக்கிறது.

பாகிஸ்தானை அடுத்த ஆட்டத்தில் எதிர்கொள்கிறோம். சவால் நிறைந்த இந்த ஆட்டத்தில் பாகிஸ்தானை எதிர்கொள்ளத் தயாராக உள்ளோம். கென்யாவுக்கு எதிராக ஆடியதுபோல் இந்த ஆட்டத்திலும்சிறப்பாக ஆடி வெற்றிபெறுவோம் என்ற நம்பிக்கை உள்ளது.

மேற்கண்டவாறு கங்குலி தெரிவித்தார். (10)

## மீள்பார்வை

**வைஷாலி**

முதலாவது மினி உலகக் கிண்ணத்தை வென்ற அணி தென்னாபிரிக்க அணியாகும். மேற்கிந்தியத் தீவுகள் அணியை 4 விக்கெட்டுக்களால் வெற்றியீட்டிக் கிண்ணத்தை அது கைப்பற்றியிருந்தது.

இந்த இறுதியாட்டத்தில் தென்னாபிரிக்க அணியில் வேகப்பந்து வீச்சாளர் அலன் டொனால்ட், சகலதுறை வீரர்களான ஷேன் பொலக், லான்ஸ் குளூஸ்னர் ஆகியோர் இடம் பெற்றிருக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. ஆயினும், இன்னொரு சகலதுறை வீரரான ஜக்கலிஸ் தனது திறமையான பந்துவீச்சினால் 30 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்டுக்களைக் கைப்பற்றி அணியின வெற்றிக்கு வழிவகுத்தார்.

மேற்கிந்தியத் தீவுகள் அணி 34 ஓவர்களில் 3 விக்கெட்டுக்கள் இழப்பிற்கு 180 ஓட்டங்களைப் பெற்றிருந்தபோதும் 50 ஓவர்கள் நிறைவில் 245 ஓட்டங்களையே பெறமுடிந்தது. இந்த அணியின் வீரர் பிலோவலஸ் இறுதியாட்டத்தில் சதம் பெற்றிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

முதலாவது மினி உலகக் கிண்ணப் போட்டியின் இறுதியாட்டத்தில் சந்தித்த இந்த இரு அணிகளும் நான்காவது மினி உலகக் கிண்ணப் போட்டியில் ஒரே பிரிவில் அதாவது 'பி' பிரிவில் இடம்பெற்றுள்ளன. இதனால் இந்த இரு அணிகளும் எதிர்வரும் 18 ஆம் திகதி மோதவுள்ளன.



விக்கெட்டைப் பறிகொடுத்த நிலையில் தென்னாபிரிக்காவின் துடுப்பாட்ட வீரர் ஹேர்சல் கிப்ஸ்

# திருமண அழைப்பு

அன்புடையீர்,

நிகழும் மங்களகரமான தாரணவருடம் ஆவணி மாதம் 30 ஆம் நாள் நாளை (15-09-2004) புதன்கிழமை பகல் 1.37 மணி முதல் 2.23 மணி வரையுள்ள சுபமுகூர்த்த வேளையில்

எமது புத்திரன்
திருநிறை செல்வன்
**ரகுநாதன்**
(ரகு – கனடா)
அவர்களுக்கும்



எமது புத்திரி
திருநிறை செல்வி
**நிசாந்தினி**
(நிஷா)
அவர்களுக்கும்

இறைவன் திருவருள் துணைகொண்டு நல்லூர், சட்டநாதர் கோயில் அருகிலுள்ள திவ்விய ஜீவனசங்க மண்டபத்தில் திருமாங்கல்யதாரணம் செய்யப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்பசகிதம் வருகை தந்து மணமக்களை ஆசீர்வதித்து சிறப்பிக்கும் வண்ணம் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

தங்கள் நல்வரவை நாடும்:

திரு.திருமதி கி.இராசரத்தினம்,
219, கோவில் வீதி,
நல்லூர்,
யாழ்ப்பாணம்.

திரு.திருமதி கனகரத்தினம்,
மயிலணி வடக்கு,
சுன்னாகம்,
யாழ்ப்பாணம்.

(36391)(42-11-16-30) (இரு வீட்டார் அழைப்பு)

# நம்பாதீர்



**திடீர் பணக்காரர் ஆக்கும் அற்புதங்களை செய்யும்**

சிலர் தமக்கு சரியான அடையாளங்கள் அல்லது விலாசம் இல்லாத போதும் மாயாஜாலம் ஒன்றின் மூலம் தாங்கள் திடீர் பணக்காரராக முடியும் என்பதை அறிந்துள்ளனர். அநேகமாக, இவர்களில் சிலர் இவ்வாறு பணக்காரர்களாக உரிமை கொண்டாட முடியும்.

**இதன்மூலம் இலங்கையில் வசிக்கும் 19,000,000 மக்களில் அனைவருமே பணம்படைத்தவர்களாக ஆகிவிடுவர் என்று அர்த்தப்படாது.**

இவ்வகையான ஏமாற்று சுலோக வார்த்தைகளானது,

**பிரமிட் எனும் சந்தைப் படுத்தல் வலையமைப்பின்**

மூலம் உங்களை ஏமாற்ற முனைகின்றது.

**இவர்களைக் குறித்து எச்சரிக்கையாயிருங்கள்**

உண்மையான பொருளாதார மேம்பாட்டுக் காரணிகள் மூலம் மாத்திரமே ஒரு நாட்டின் சரீர புஷ்டியான சுகவாழ்வை உயர்வடைய செய்ய முடியும்.

இவ்வகை பிரமிட் திட்டங்கள் மூலம்

**நூறாயிரம் பேர்களின் கடின உழைப்பால் சம்பாதிக்கப்பட்ட பணம்**

ஒரு சிலரையே சென்றடைகின்றது.

**இது ஒரு ஏமாற்று வித்தை**

இதனால் தான், நாட்டின் தலைவர் என்ற பொறுப்புணர்ச்சியுடன் மேன்மைதங்கிய ஜனாதிபதி அவர்கள் கூறும்போது...

''பத்திரிகைகளிலும், இலத்திரனியல் ஊடகங்களிலும் காணப்படும் கவர்ச்சிகரமான விளம்பரங்களைக் குறித்து பொதுஜனங்கள் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். இவற்றில் வரும் தனிநபர்கள் தமது பெயரைத் தவிர வேறு எதுவித விபரங்களையும் அங்கு குறிப்பிடவில்லை. இவைபோன்ற திட்டங்களால் இலட்சக்கணக்கான மக்கள் வாழும் இந்நாட்டில், கைவிட்டு எண்ணக்கூடிய ஒரு சிலரே இப்படியாக இலட்சாதிபதிகளாக மாறி வஞ்சனையாக அப்பாவி ஜனங்களை தம்வசப்படுத்தி ஏமாற்ற முனைகின்றனர்.''

(ஜனாதிபதி செயலகத்தினால் வெளியான செய்தி பிரசுரத்திலிருந்து)

## ''சூடு கண்டபூனை அடுப்பங்கரை நாடாது''

என்று மீண்டும் நினைவுபடுத்த தேவையில்லை

பொது மக்களின் நன்மை கருதி மத்தியவங்கியினால் வெளியிடப்படுகிறது

**இலங்கை மத்திய வங்கி**

30, ஜனாதிபதி மாவத்தை கொழும்பு-01.தொ.பே:-2477639, பெக்ஸ்:-2477739
ஈமெயில்:-information@cbsl.lk வெப்சைட்:-www.centralbanklanka.org

## இலங்கை மின்சாரசபை
## யாழ். பிரதேச அலுவலகம்
## மின்தடை பற்றிய அறிவித்தல்

கீழ்க்குறிப்பிடப்படும் இடங்களில் அவசர திருத்த வேலைகளை மேற்கொள்ளும் பொருட்டு 15.09.2004 புதன்கிழமை காலை 8.00 மணிதொடக்கம் மாலை 5.00 வரை மின்சாரம் தடைப்பட்டிருக்கும்.

வேலைகள் முன்னதாக முடிவுற்றால் குறிப்பிடப்பட்டுள்ள நேரத்திற்கு முன்பும் மின்சாரம் வழங்கப்படலாம் என்பதனை கவனத்தில் கொள்ளவும்.

**மின்சாரம் தடைப்படும் இடங்கள்**

இணுவில், உடுவில், மருதனார்மடம், தாவடி, கொக்குவில், ஆனைக்கோட்டை, நவாலி, மானிப்பாய், சங்குவேலி, கந்தரோடை, மாகியப்பிட்டி, பண்டத்தரிப்பு, இளவாலை, சங்கானை, மாதகல், வட்டுக்கோட்டை, சுழிபுரம், மூளாய், காரைநகர், சுன்னாகம், மல்லாகம், ஏழாலை, அளவெட்டி, தெல்லிப்பழை, பன்னாலை.

இதனால் மின்பாவனையாளர்களுக்கு ஏற்படும் அசௌகரியங்களுக்கு மனம் வருந்துகின்றேன்.

பிரதேச மின்பொறியியலாளர்,
இலங்கை மின்சாரசபை, சுன்னாகம்.

"சூழல் மற்றும் அபிவிருத்தி வேலைகளுக்கு கைகொடுக்கும்"
இலங்கை மின்சாரசபை. (சி-3749)(43-30-11-16)

# 31ஆம் நாள் நினைவும் அழைப்பும்

மண்ணில் மழலையாய்
09 07 1945



விண்ணில் தெய்வமாய்
15 08 2004

நிலையில்லா வாழ்வினிலே நீங்காத நினைவுகளைத் தந்துவிட்டு நிலையான வாழ்வு தேடிச் சென்ற தெய்வத்தாய்

## திருமதி மேரிவதனா தெலஸ்போ

கடந்த 15.08.2004 அன்று இறையடி சேர்ந்த எமது குடும்ப ஒளி விளக்கின் 31ஆம் நாள் நினைவாகிய இன்று (14.09.2004) செவ்வாய் முற்பகல் 11.30 மணியளவில் உடுப்பிட்டி உலக இரட்சகர் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும். அதனைத் தொடர்ந்து எமது இல்லத்தில் நடைபெறும் ஆன்ம ஈடேற்ற நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*R.C. சேச்,*
*உடுப்பிட்டி.*
(36392)(30-11-16)

தகவல்
கணவர், பிள்ளைகள்,
சகோதரர், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

# மரண அறிவித்தல்கள்

## திருமதி பொன்னையா யோகரத்தினம் (குருத்து)



நாமகள் ஒழுங்கை, கொக்குவில் கிழக்கைப பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னையா யோகரத்தினம் (குருத்து) 11.09.2004 சனிக்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கதிரவேலு பொன்னையாவின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான தா.க.சின்னத்துரை, அப்புத்துரை (பொதுவில்) மற்றும் இராஜேஸ்வரி (சீனி), பரமேஸ்வரி (வேவி), பாலசுப்பிரமணியம் (பொபி - கொழும்பு) ஆகியோரின் அன்புச் சகோதரியும் பத்மாவதி (பிரேமாவதி), வசந்தகுமாரி (ஜேர்மனி), ரவீகரன் (77, குறோசறி - கொழும்பு), விஜயகுமாரி (ஜேர்மனி), மனோகரன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தாயாரும் லோகேஸ்வரன் (டயா வாச்), கணேசன் (ஜேர்மனி), சுப்பிரமணியம் (ஜேர்மனி), இந்திராணி, ஜெயா (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் நாளை (15.09.2004) புதன்கிழமை காலை 9.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் 10.30 மணியளவில் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*நாமகள் ஒழுங்கை,*
*கொக்குவில் கிழக்கு,*
*கொக்குவில்.* (36393)(30-11-16)

தகவல்:
பொ.ரவீகரன்
(மகன்)

## வேலுப்பிள்ளை செல்லத்துரை (வேயன்னா வாத்தியார் - ஓய்வுபெற்ற ஆசிரியர்)

நீர்வேலி மத்தி, நீர்வேலியைப் பிறப்பிடமாகவும் தற்போது கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை செல்லத்துரை அவர்கள் 10.09.2004 வெள்ளிக்கிழமை கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை - பொன்னாச்சி தம்பதிகளின் ஏக புதல்வனும், வள்ளிப்பிள்ளையின் அன்புக் கணவரும் யோகேஸ்வரியின் அன்புத் தந்தையும், கிருஷ்ணசாமி (ஓய்வுபெற்ற நில அளவையாளர்) அவர்களின் அன்பு மாமனும் தினேஸ், சாந்தினி, ஜமுனா, மாலா, யோகுவா ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (14.09.2004) செவ்வாய்க்கிழமை கனடாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

T.P.: 4165169763
*கனடா* (36395)(30-11-16)

தகவல்:
ஆ.ஆனந்தன் (நீர்வேலி)

# 'பழையதும் புதியதும்' நூல் நேற்று வெளியிட்டுவைப்பு

தென்னிந்தியத்திருச்சபைப் பேராயர் கலாநிதி எஸ்.ஜெபநேசனின் 'பழையதும் புதியதும்' என்ற நூலின் வெளியீட்டு விழா நேற்று பிற்பகல் 4மணிக்கு யாழ்.ஆஸ்பத்திரி வீதியில் உள்ள யாழ்ப்பாணக் கல்லூரியின் பட்டதாரி பிரிவு மண்டபத்தில் நடைபெற்றது.

யாழ்ப்பாணக்கல்லூரி அதிபர் என்.ஏ.விமலேந்திரன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், மதுரைக் காமராசர் பல்கலைக்கழகப் பேராசிரியர் இரா.மோகன், மதுரை செந்தமிழ்க் கல்லூரி பல்கலைக்கழகப் பேராசிரியை கலாநிதி திருமதி நிர்மலா மோகன் ஆகியோர் பிரதம விருந்தினர்களாகக் கலந்து கொண்டனர்.

நூலின் அறிமுகவுரையினை யாழ்.பல்கலைக்கழக பேராசிரியர் கலாநிதி எஸ்.சிவலிங்கராஜாவும், வெளியீட்டுரையினைப் பேராசிரியர் இரா.மோகனும் நிகழ்த்தினர்.

நூலின் முதற்பிரதியை பேராசிரியர் இரா.மோகனிடம் இருந்து யாழ்.பல்கலைக்கழகப் துணைவேந்தர் பேராசிரியர் சு.மோகனதாஸ் பெற்றுக்கொண்டார்.

இரண்டாவது பிரதியை பேராயர் ஜெபநேசனிடம் இருந்து திருமதி நிர்மலா மோகன் பெற்றுக் கொண்டார்.

நூலின் நயப்புரையை பேராசிரியை கலாநிதி நிர்மலா மோகனும், நூல் மதிப்பீட்டுரையை யாழ்.பல்கலைக் கழகத் தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் அ.சண்முகதாஸும் பதிலுரையை பேராயர் கலாநிதி எஸ்.ஜெபநேசனும் நிகழ்த்தினர். (3-6)

## உதைபந்தாட்டம் ஆரம்பம்

'தியாக தீபம்' லெப்.கேணல் திலீபன் நினைவு நாளை ஒட்டி யாழ்மாவட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையில் யாழ். பொது விளையாட்டரங்கில் (துரையப்பா) நடத்தப்படவிருக்கும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி இன்று ஆரம்பமாகின்றது.இன்றைய ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகளின் விவரம் வருமாறு:-

★ பி.ப. 4.30 மணி-நவசக்தி வி.க. எதிர் ஐயனார் வி.க.

★ பி.ப. 3.30 மணி-விநாயகர் வி.க. எதிர் ஐயனார் வி.க. (வேலணை) (ஐ-173)


அந்தியேட்டி சபிண்டிகரண அழைப்பு

தோற்றம் 10 - 03 - 1941



மறைவு 16 - 08 - 2004

அமரர் செல்லையா இரத்தினம்

(நாட்டுப்பற்றாளர்)

அன்புடையீர்,

கடந்த 16.08.2004 திங்கட்கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத்தலைவர் அவர்களின் அந்தியேட்டிக்கிரியை இன்று (14.09.2004) செவ்வாய்க்கிழமை காலை வேலணை சாட்டித் தீர்த்தக்கரையிலும், சபிண்டிகரணக்கிரியைகள் நாளை (15.09.2004) புதன்கிழமை அன்னாரது இல்லத்திலும் நடைபெற உள்ளது. அத்தருணம் தாங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

230 A, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

- குடும்பத்தினர்.

(36403)(38-13-14-43)



லக்சுமி இணுவில்



தனுஸ், சாயாசிங், கருணாஸ் மற்றும் பலர் நடிப்பில்

திருடா திருடி (றீகல்)

காட்சிநேரம் : 11.00, 3.00, 7.00 (பு.நே)

(36223)(12)

நாகம்ஸ் சுன்னாகம்

தனுஷ், சிந்துதுலானி, கருணாஸ், மணிவண்ணன், நடிப்பில்

சுள்ளான்



(சி-36415) காட்சிநேரம்: 11.00,3.00, 7.00 (புதிய நேரம்)

ராஜா யாழ்ப்பாணம்

இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதின வெளியீடு

விஜய், சோனியா அகர்வால், வடிவேல் நடிக்க மதுர



பு.நே.:10.30, 2.30, 6.30, 9.30

ரிக்கெற் முற்பதிவு செய்துகொள்ளலாம்.

நிரஞ்சனாஸ் சங்கானை

ரஜனி, நக்மா, ரகுவரன் நடித்த பாட்ஷா



காட்சிகள்: 11.00, 2.45, 6.00பு.நே

Return To Two Moon Junction (இரவு 8.45 பு.நே)

வெள்ளி, சனி, ஞாயிறு.


## கன்னியாவில் புதிய காவலரண்கள்

திருகோணமலை மாவட்டத்திலுள்ள கன்னியா பகுதியில் படைத்தரப்பினர் புதிய காவலரண் ஒன்றை அமைத்து வருகின்றனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த வாரம் கன்னியா அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலைக்கு அருகில் ஒரு காவலரண் அமைக்கப்பட்டிருந்தது எனவும் கூறப்பட்டது.

அண்மைக்காலமாக இப்பகுதியில் கண்ணிவெடி அகற்றப்பட்டு, 1990களில் இடம்பெயர்ந்த மக்கள் மீண்டும் குடியேறி வரும் நிலையில் இவ்வாறான புதிய காவலரண்கள் அமைக்கப்பட்டு வருவது குறித்து மக்கள் மத்தியில் அச்சம் தோஹ்றியுள்ளது.

கன்னியா, மாங்காய் ஊற்று, பில்லியடி போன்ற பகுதி மக்கள் அண்மைக் காலமாக படிப்படியாக மீளக் குடியமர்ந்து வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## பெண் மரணம்

கிணற்றில் வீழ்ந்து வயோதிப் பெண் ஒருவர் மரணமடைந்தார்.

மீசாலை மேற்கு, பங்களா வீதியைச் சேர்ந்த கந்தசாமி புனிதவதி (வயது67) என்ற பெண்ணே மரணமானார். இச்சம்பவம் கடந்த சனியன்று இடம் பெற்றது.


உங்களுக்கு இதயம் ஒன்று இருந்தால்............



அதில் எங்களைக் கவனம் செலுத்தவிடுங்கள்.
அறுவை சிகிச்சை இல்லை!!! ஒரு சில ஆயுர்வேத குளிகைகள், அந்தக் குளிகைகள் உங்கள் அடைப்புக்களைக் கரைத்துவிடும்.
செலவு குறைவு. மிகவும் குறைவு.
பக்க விளைவுகள் இல்லை. வேறுவித சிக்கல்களுமில்லை.
கடந்த ஆறு வருடங்களில் ஒரு தோல்வியும் கூட ஏற்பட்டதில்லை.
(இது குறித்து அறிய நூறு முகவரிகளை எம்மால் வழங்கமுடியும்)
மேல் விவரங்களைப் பெறத் தயவுசெய்து எங்களுக்கு எழுதுங்கள்.
இதற்காக 5 நிமிடங்களைச் செலவழியுங்கள். இந்த 5 நிமிடங்களும் உங்கள் வாழ்வில் மிகுந்த நினைவுக்குரிய காலமாக அமையும். அது ஆரோக்கியமான கவலையற்ற, இதயக்கோளாறு மற்றும் மார்புவலி இல்லாத சாதாரண வாழ்வை மீதமுள்ள வாழ்நாள் முழுவதும் வழங்கும்.

| | |
|---|---|
| மூட்டு வீக்கம்/மூட்டுவலி......?? | ஒற்றைத் தலைவலி...?? நிரந்தர நிவாரணம் |
| நீண்டகால முதுகுவலி...?? நீண்டநாள் முதுகுவலி குறைக்கப்படும்! | சிறுநீரக சுரப்பி பிரச்சினைகள்...?? அறுவைச் சிகிச்சையிலிருந்து சிறுநீரக சுரப்பியைப் பாதுகாத்துக்கொள்ளுங்கள் |
| கல்லீரல் பிரச்சினைகள்...?? கல்லீரலில் ஏற்படும் மஞ்சள் காமாலை மற்றும் உபாதைகளுக்கு | இருதயத்தில் ஓட்டை? இருதயத்தில் ஓட்டையுள்ள குழந்தைகள் அறுவை சிகிச்சையைத் தவிர்க்கலாம் |

விவரங்களுக்கும் இலவச ஆலோசனைகளுக்கும்

FAIR PHARMA (PVT) LTD
(MANUFACTURERS OF AYURVEDIC MEDICINES)
A BOI APPROVED COMAPANY

Level 5/East Tower/1C, World Trade Centre, Colombo-01.
Phone: 0094-11-5517897, 5551879, 5558442
Fax:0094-11-5517756
E-mail:fppvtl@lankabellnet.com
Website : www.fppvtl.com

(சி-37642)(34-13-14-43)

மருத்துவ ஆலோசனைகள்: Dr.வசந்தா பத்மகுமார தொ.பே.077-3063550
வர்த்தக மற்றும் ஏற்றுமதி தகவல்: திரு.நிரோஷ் ஜயமகா தொ.பே.077-3063540


# மரண அறிவித்தல்கள்

## தம்பு நாகரட்ணம் (பாப்பா)



நாயன்மார்கட்டைப் பிறப்பிடமாகவும் உயரப்புலம் ஆனைக்கோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட தம்பு நாகரட்ணம் (பாப்பா) நேற்று (13.09.2004) திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பு - இலட்சுமியின் அன்புப் புதல்வனும் காலஞ்சென்ற அல்பிறட் அம்மாவின் அன்புக் கணவருமா சதிஸ்குமார் (கீதா), கல்பனா (டென்மார்க்), நந்தகுமார் (சத்தியன்), தாமரி (சுவிஸ்), றதீஸ்குமார் (மொறிஸ்), கவிதா ஆகியோரின் அன்புத் தந்தையும் சற்குணசிங்கம் (டென்மார்க்), றகு (சுவீஸ்), ஜான்சி (நீர்கொழும்பு), கலை ஆகியோரின் அன்பு மாமனாரும் கம்சாயினி, டிசானி, சங்கீத், சோபிதா, காவியா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (14.09.2004) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 மணிக்கு (புதிய நேரம்) உயரப்புலம், ஆனைக்கோட்டை அடைக்கலநாயகி ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு, நல்லடக்கத்திற்காக அடைக்கலநாயகி (காக்கைதீவு) சேமக்காலைக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

*உயரப்புலம், ஆனைக்கோட்டை.* (36336)(29-13-14-43)

தகவல்: நந்தகுமார் (சத்தியன் - மகன்)

செல்வி

## மேரி கனிஸ்ரா ஆனந்தறாணி எட்வேட்



யாழ்ப்பாணம், 33/22,அடப்பன் வீதியைச் சேர்ந்த செல்வி மேரி கனிஸ்ரா ஆனந்தறாணி எட்வேட் நேற்று (13.09.2004) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற எட்வேட்-கிறேஸ் தம்பதியினரின் புத்திரியும் திருமதி சூசன் மேரி றாணி, அன்ரன் தவசிங்கம், யூலியன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புச் சகோதரியும் J.T.M. கிறிஸ்தோப்பர், திருமதி தவசிங்கம் சுகன்யா, திருமதி விங்கா யூலியன் ஆகியோரின் அன்பு மைத்துனியும் றொகான் (நோர்வே), நேசன் (நோர்வே), நாதன் (நோர்வே), செல்வினி மகிழ்றாஜன் (கனடா) ஆகியோரின் அன்பு சிறிய தாயாருமாவார்.

அன்னாரின் நல்லடக்கம் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றா, உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*33/21, அடப்பன் வீதி, யாழ்ப்பாணம்.* (36396)(29-13-14-43)

தகவல்: J.T.M. கிறிஸ்தோப்பர் (மைத்துனர்).

## ஞானமூர்த்தி ஏகாம்பரம்

(ஓய்வு பெற்ற விவசாயவிரிவாக்க உத்தியோகத்தர்)



மீசாலை வடக்கைப் பிறப்பிடமாகவும் உசன், மிருசுவிலை வதிவிடமாகவும் கொண்ட ஞானமூர்த்தி ஏகாம்பரம் அவர்கள் நேற்று (13.09.2004) திங்கட்கிழமை சிவபதமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற ஞானமூர்த்தி - கதிராசி தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்ற சிவஞானவதியின் அன்புக் கணவரும் சுசலாவதி (கிராம அலுவலர்-உசன்), ஜெகதீஸ்வரி (ஆசிரியை, உசன் இராமநாதன் மகாவித்தியாலயம்), சந்திரேஸ்வதி (குடும்பநல உத்தியோகத்தர், அரசினர் வைத்தியசாலை-கொடிகாமம்) ஆகியோரின் பாசமிகு தகப்பனாரும் செல்வவிநாயகம் (வ.பி.போ.சபை-பருத்தித்துறை), தர்மகுலசிங்கம் (வ.பி.போ.சபை-கோண்டாவில்), இ.தயாளன் ஆகியோரின் அருமை மாமனாரும் காலஞ்சென்ற இரத்தினசிங்கம் ஆச்சிமுத்து, பொன்னுத்துரை, ஐயாத்தம்பி, குமாரசாமி (ஓய்வு பெற்ற கிராம அலுவலர்) ஆகியோரின் பாசமிகு சகோதரனும் சுப்பிரமணியம், காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை வினாசித்தம்பி, செல்லத்துரை ஆகியோரின் அன்பு மைத்துனரும் சுஜிநதா (மாணவி, யா/வேம்படி மகளிர் உயர்தரப்பாடசாலை), கிருத்தா (யாழ்.இந்து மகளிர் கல்லூரி), கிஷோத்மன் (யாழ்.மத்திய கல்லூரி), விதுஷா (ஜோன்பொஸ்கோ வித்தியாலயம்), வாகீசன் ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.09.2004) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக ஈச்சங்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், அன்பர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*உசன், மிருசுவில்.* (36397)(43-13-14)

தகவல்: மக்கள், மருமக்கள்.

## திருமதி கனகம்மா மயில்வாகனம்



நாயன்மார்கட்டைச் சேர்ந்த திருமதி கனகம்மா மயில்வாகனம் 12.09.2004 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சிவஞானம் மயில்வாகனம் (மக்கள் வங்கி காசாளர்) அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற தியாகராசா - மங்கையர்க்கரசி தம்பதிகளின் மகளும் காலஞ்சென்ற சிவஞானம் - தங்கம்மா தம்பதிகளின் மருமகளும் தர்மலிங்கம், மாணிக்கவாசகர், பிள்ளையம்மா, கனகசபாபதி, காலஞ்சென்ற நல்லையா, பாலசுந்தரம் ஆகியோரின் சகோதரியும் காலஞ்சென்ற கனகரட்ணம் (வைத்தியர்), சுப்பிரமணியம் (நுணாவில்), குமரகுருநாதன் (வைத்தியர்) ஆகியோரின் மைத்துனியும் காலஞ்சென்ற செல்வராணி, செல்வராசா மற்றும் அமுதா, சுந்தரராசா (லண்டன்) ஆகியோரின் அன்புத்தாயாரும் மகேந்திரன் (ஓய்வு பெற்ற ஊழியர், யாழ்.ப.நோ.கூ. சங்கம்), அமிர்தினி (லண்டன்) ஆகியோரின் மாமியாரும் தர்ஷிகா (லண்டன்), மயூரன், மகிந்தன், மது, சனா, ஆர்த்தி, அகிலன் ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (15.09.2004) புதன்கிழமை மாலை 3.00 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் செம்மணி இந்துமயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*32/10,அம்பாள் வீதி, நாயன்மார்கட்டு, யாழ்ப்பாணம்.* (36398)(43-13-14)

தகவல்: தி.மகேந்திரன் (மருமகன்), ம.சுந்தரராசா (மகன்).

# தெற்கு ஊடகவியலாளர்கள் தமிழ்ச்செல்வனுடன் சந்திப்பு

யாழ்ப்பாணம்,செப்.14

கிளிநொச்சிக்கு வந்துசேர்ந்துள்ள தென்னிலங்கை ஊடகவியலாளர் குழு, விடுதலைப் புலிகளின் அரசியற்றுறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வனை இன்று முற்பகல் 10 மணிக்குச் சந்திக்கவிருக்கிறது.

சமாதானப் பேச்சுக்களின் தற்போதைய நிலை, தென்னிலங்கை அரசியல் சக்திகளின் செயற்பாடுகள் ஆகியன தொடர்பாக இச் சந்திப்பில் கலந்துரையாடப்படவிருக்கின்றது.

நேற்றுமுன்தினம் கிளிநொச்சி வந்தடைந்த இக்குழுவினர் வன்னியில் பல பகுதிகளுக்கும் சென்று பொதுமக்களுடன் கலந்துரையாடல்களை நடத்தினர். அங்கு மேற்கொள்ளப்படும் அபிவிருத்தித்திட்டங்களையும் பார்வையிட்டனர்.

இன்று பிற்பகல் யாழ்ப்பாணத்துக்கு வரும் இவர்கள் இங்கு ஊடகவியலாளர், புத்திஜீவிகளை சந்தித்துக் கலந்துரையாடவிருக்கின்றனர். (ஐ-3-164)

## திலீபனின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

படத்துக்கான மலர் மாலையும் அணிவிக்கப்படும். அதனைத் தொடர்ந்து மலரஞ்சலி மற்றும் நினைவுரைகள் என்பனவும் இடம்பெறும்.

பாடசாலைகளில் திலீபன் நினைவு தினத்தை மிகுந்த எழுச்சியுடன் அனுஷ்டிக்குமாறு யாழ். மாவட்டக் கல்விக் கழகம் வேண்டுகோள் விடுத்திருக்கிறது.

அதிபர், ஆசிரியர்கள் தினமும் காலையில் தியாகி திலீபனைப் பற்றிய நினைவுரைகளை வழங்கி மாணவர்களுக்கு அவரது தியாக வரலாற்றுக் கருத்துக்களைத் தெரிவிக்கவேண்டும் எனவும் கல்விக் கழகம் கேட்டிருக்கிறது.

குடாநாட்டின் பிரதான நிகழ்வுகள் நல்லூர் ஆலய பின் வீதியில் திலீபனின் நினைவுத்தூபி அமைந்துள்ள பகுதியில் நடைபெறும்.

இதேவேளை -

திலீபன் நினைவாகப் பொது இடங்களில் சிரமதானப் பணிகள் மேற்கொள்ளப்படவிருக்கின்றன.

இறுதி மூன்று தினங்களும் திரையரங்குகள், மினிசினிமாக்களை மூடி நிகழ்வுகளுக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு கேட்கப்பட்டுள்ளது. இந்த நாள்களில் அடையாள உண்ணாவிரதங்கள், நினைவுரைகள், கலை நிகழ்வுகள் என்பனவற்றுக்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. (ஐ-4-15-17-149-125-173)

## நல்லூரில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பவுண் சங்கிலி.

கொழும்புத்துறையைச் சேர்ந்த கதிர்வேலாயுதபிள்ளை திலகவதி (வயது 67) என்பவரின் மூன்றரைப் பவுண் சங்கிலி.

நவாலியைச் சேர்ந்த சின்னத்துரை கன்னிகா பரமேஸ்வரி (வயது 57) என்பவரின் 4 பவுண் சங்கிலி -

மிருசுவிலைச் சேர்ந்த செல்லத்துரை நல்லம்மா (வயது 69) என்பவரின் 3 பவுண் சங்கிலி.

இராசாவின்தோட்டத்தைச் சேர்ந்த சண்முகலிங்கம் ஞானேஸ்வரி (வயது 66) என்பவரின் 10 பவுண் சங்கிலி -

பண்டத்தரிப்பைச் சேர்ந்த கந்தையா இராசமலர் (வயது 60) என்பவரின் நான்கரைப் பவுண் சங்கிலி -

ஈச்சமோட்டையைச் சேர்ந்த சுந்தரலிங்கம் கமலாம்பிகை (வயது 50) என்பவரின் 2 பவுண் சங்கிலி -

ஆகியனவே அறுக்கபட்டுள்ளன,

அரியாலையைச் சேர்ந்த புஷ்பராசா கமலேஸ்வரி (வயது 40) என்பவரின் ஐந்தரைப் பவுண் எடையுள்ள தாலிக்கொடி அபகரிக்கப்பட்டுள்ளது.

இவற்றைவிட மூன்று இளைஞர்கள் தமது கைச்சங்கிலிகளை இழந்துள்ளனர்.

பக்தர்களின் கைப்பைகளின் 'சிப்' கழற்றப்பட்டு சுமார் 20 பேரிடமிருந்து பணம் மற்றும் மூவரின கைத்தொலைபேசிகளும் சாதுரியமாகத் திருடப்பட்டுள்ளன.

இந்தத் திருட்டுக்கள் தொடர்பாக நல்லூர் ஆலய உற்சவகால செயலணி அலுவலகத்தில் முறையிடப்பட்டிருக்கிறது. (ஐ-3)

## முகமாலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திய செய்தியாளர் மாநாட்டிலேயே, அவர் இந்தத் தகவலைத் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் கூறியதாவது:-

குடாநாட்டில் அபிவிருத்திப் பணிகளை முன்னெடுக்க வசதியாக ஏ-9 பாதையூடான போக்குவரத்தைச் சீராக்க வேண்டியுள்ளது.

அதன் முதற்படியாக ஏ-9 பாதையூடான போக்குவரத்து நேரத்தை அதிகரிக்க நடவடிக்கை எடுத்துள்ளோம்.

செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் அதிகாரிகளுடன் பேச்சு நடத்தியுள்ளோம். அவர்கள் நேர நீடிப்புக்கு இணக்கம் தெரிவித்துள்ளனர். விரைவில் நேர நீடிப்பு நடைமுறைக்கு வரும் என்று அவர் கூறினார். (ஐ-3-8)

## ஊர்காவலரின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கின்றனர்.

சம்பந்தப்பட்ட ஊர்காவலர் தற்பாதுகாப்புக்காக அவர்களை நோக்கிச் சுட்டிருக்கிறார். அதில் ஒருவர் அந்த இடத்திலே கொல்லப்பட்டார்.

தங்களுடைய சகா சூடுபட்டு விழுந்ததைக் கண்ட ஏனையோர் தாம் வந்த வானிலேயே தப்பியோடினர்.

உயிரிழந்தவர் ஸ்ரீலங்கா தேசிய பாதுகாப்புப் படைப்பிரிவைச் சேர்ந்த இரண்டாவது லெபடினன்ட் டபிள்யூ.எல்.ஏ.எஸ்.எஸ்.மங்கள ரட்ண என்றும் - ஒழுக்காற்று நடவடிக்கைகளின் அடிப்படையில் விரைவில் இராணுவத்திலிருந்து நீக்கப்படவிருந்தவர் என்றும் -

இச்சம்பவத்தில் சம்பந்தப்பட்டவர் என்று கருதப்படும் இரண்டாம் லெப்டினன்ட் ஜயக் கொடி என்பவர் கந்தளாய் சீனித் தொழிற்சாலை இராணுவ முகாமுக்குப் பக்கத்தில் வைத்து பொலீஸார் கைதுசெய்துள்ளனர்.

வானில் வந்த மூன்றாவது நபரை பொலீஸார் தேடி வருகின்றனர்.

கந்தளாய் சர்வோதயத்திற்குச் சொந்தமான வானையே இவர்கள் இவ்வேலைக்குப் பயன்படுத்தியிருக்கின்றார்கள் எனப் பொலீஸார் நம்புகின்றனர். அந்த வானைத் தடுத்து வைத்துள்ள பொலீஸார் அது தொடர்பாக இருவரை விசாரணைக்கு உட்படுத்தியுள்ளனர்.

மேற்படி சம்பவத்தில் படுகாயமடைந்த சந்தன புஷ்பகுமார என்ற ஊர்காவலர் குருநாகல் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

பாதுகாப்புப்படைகளின் நடவடிக்கை தலைமைச் செயலகம் தெரிவித்தது.

கந்தளாய் பொலீஸாரும், இராணுவப் பொலீஸாரும் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய ஏனைய சந்தேக நபர்களையும் கைதுசெய்வதற்கும், சம்பந்தப்பட்ட வானைக் கண்டுபிடிப்பதற்கும் தேடுதல் ஆரம்பிக்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. (க-3)

## நல்லூர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நூற்றுக்கணக்கானவர்கள் பறவைக்காவடி, செடில் காவடி எடுத்தும், கற்பூரச்சட்டி ஏந்தியும், அடி அழித்தும் தமது நேர்த்திக்கடன்களை நிறைவேற்றினர்.

ஆலயச் சூழலில் வீதி ஒழுங்கு மற்றும் இதர வசதிகள் விரிவாக நடைமுறைப்படுத்தப்பட்டன. எனினும், நெரிசல் அதிகமாகக் காணப்பட்டது.

ஆலயம் நோக்கி வந்த பறவைக் காவடிகளில் இரண்டினது உழவு இயந்திரங்கள் ஆலயத்திலிருந்து திரும்பிச் செல்கையில் விபத்துக்குள்ளாகின. இதில் நால்வர் காயமடைந்தனர். அவர்கள் யாழ். ஆஸ்பத்திரியில் சிகிச்சைப் பெற்றனர்.

(ஐ-3-86-139-173)

## அரசு-புலிகள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பேச்சுக்களை ஆரம்பிப்பது தொடர்பாக அது சகல தரப்புக்களுடனும் கலந்து பேசி வருகின்றது. அரசின் சமாதான செயலகம் சமாதானப் பேச்சுக்கள் பற்றிய நடவடிக்கைகளில் ஈடுபடும் அதேவேளை, எமது புனர்வாழ்வு நல்லிணக்க அமைச்சு வடக்கு - கிழக்கில் அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்வது தொடர்பாக அக்கறை செலுத்தும் பல்வேறு வேலைத் திட்டங்களை முன்னெடுக்க நாம் இப்போது தீர்மானித்துள்ளோம். முதற்கட்டமாக தெல்லிப்பளை புற்றுநோய் வைத்தியசாலை இவ் வருட இறுதிக்குள் சொந்த இடத்தில் இயங்கும். இதற்கான அனைத்து நடவடிக்கைகளும் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அடுத்த ஆண்டு ஜனவரி மாதம் முதல் சமுர்த்தித் திட்டம் யாழ். குடாநாட்டில் அமுல்படுத்தப்படும். இதன்பின்னர், வசதி படைத்தவர்களுக்கான நிவாரணம் நிறுத்தப்படும். ஒருவருக்கு அவர் சாகும்வரை நிவாரணம் வழங்க வேண்டும் என்ற அவசியம் இல்லை. நிவாரணத்துக்குச் செலவிடப்படும் பணத்தைக் கொண்டு யாழ். மாவட்டத்திலேயே வேறு பல பலன்தரக் கூடிய திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்குத் தீர்மானித்துள்ளோம். குடாநாட்டுக்கு மக்களின் நிவாரணத்துக்கு செலவிடப்படும் பணத்தை இங்கேயே திட்டங்களை நடைமுறைப்படுத்தப் பயன்படுத்துவோம்.

முன்னைய அரசு 25 ஆயிரம் ரூபா மீள் குடியமர்வுக் கொடுப்பனவை வழங்கிய பின்னர் 6 மாதங்களுக்கு மட்டுமே நிவாரணம் வழங்கத் தீர்மானித்தது. பின்னர், மேலும் 6 மாதங்களுக்கு அதனை நீடித்தது. பின்னர் இப்போதுள்ள அரசு மேலும் 3 மாதங்கள் அதனை நீடித்தது.

வடக்கு - கிழக்கில் இராணுவம் மற்றும் விடுதலைப் புலிகள் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் இயல்பு நிலை ஏற்படுத்த எமது அமைச்சு முயற்சிகளை மேற்கொள்ளுகின்றது. இப்பகுதிகளில் அபிவிருத்திப் பணிகளும் மேற்கொள்ளப்படும்.

தற்போது இந்தியாவிலிருந்து ஈழ அகதிகள் மீளத்திரும்பி வருகின்றார்கள். இவர்கள் பல்வேறு இன்னல்களுக்கு ஆளாகுகின்றார்கள். இந்திய அகதி முகாம்களில் இன்னும் 60 ஆயிரம் அகதிகள் உள்ளனர். அவர்களை இங்கு அழைத்துவர அகதிகளுக்கான ஐ.நா. தூதரகத்துடன் தொடர்பு கொண்டுள்ளோம். முதற்தடவையாக 5 ஆயிரம் அகதிகளை அழைத்துவர அவர்கள் சம்மதித்துள்ளார்கள். அகதிகளை விமானம் மூலமும் அவர்களுடைய பொருள்களைக் கொள்கலன்கள் மூலமும் கொண்டுவர ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன - என்றார் ஹரீம் பீரிஸ்.

முன்னதாக அவர் பிரதேச செயலர்கள், பிரதேச சபையின் செயலாளர்கள் ஆகியோரைச் சந்தித்துக் கலந்துரையாடினார். அவருடன் புனர்வாழ்வு அமைச்சின் மேலதிக செயலாளர் ஏ.ஜெயரட்ணமும் சந்திப்பில் கலந்துகொண்டார். (ஐ-8)

## குழிக்குள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கள் தாமதமடைந்தன. எனினும், கனரக வாகனங்களின் உதவியுடன் குழிக்குள் இருந்த சேற்று மண் முழுவதும் வெளியே உறிஞ்சி இறைக்கப்பட்ட பின்னர் சடலம் எடுக்கப்பட்டது.

அச்சுவேலி வடக்கில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் இரத்தினசபாபதி இரத்தினானந்தன் (வயது 38) என்ற குடும்பஸ்தரே பலியானவராவார்.

மல்லாகம் நீதிமன்ற நீதிவான் திருமதி சரோஜினி இளங்கோவனின் உத்தரவின்பேரில் சடலம் யாழ். ஆஸ்பத்திரியில் பிரேத பரிசோதனை செய்யப்பட்டு உறவினர்களிடம் கையளிக்கப்பட்டது.

அச்சுவேலி பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரி சஞ்சீவ பண்டார, சார்ஜன்ட் எச்.எல். றபால்டின் ஆகியோர் அடங்கிய பொலீஸ் குழு விசாரணைகளை நடத்தியது. (ஐ-11)

## ஜே.வி.பி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

களைக் கடந்த வெள்ளிக்கிழமை இரவு ஜனாதிபதி மாளிகைக்கு அழைத்து அவர்களுடன் சுமார் நான்கு மணிநேரம் ஜனாதிபதி மந்திராலோசனை நடத்தினார் எனத் தெரிகின்றது.

அப்போது இவ்வாறு ஜே.வி.பி. தலைவர்கள் முன்னிலையில் ஜனாதிபதி உறுதிபடக் கூறினார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சிக்கும் ஜே.வி.பிக்கும் இடையில் ஏற்பட்டுவரும் முறுகல் நிலையை நீக்குவதற்கான உபாயங்கள் குறித்தும் விடுதலைப் புலிகளுடன் சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கான வழிவகைகள் பற்றியும் இக் கூட்டத்தில் விரிவாக ஆராயப்பட்டதாகவும் தெரிகின்றது.

தாம் முன்னெடுக்கவிருக்கும் சமாதானப் பேச்சுக்களுக்கு ஜே.வி.பி.ஆதரவு வழங்காவிட்டால் அதைத் தாம் முன்னெடுக்கமாட்டார் என்று இச்சந்திப்பின்போது ஜனாதிபதி உறுதிகூறினாராம்.

இனப்பிரச்சினைத் தீர்வுக்கான அமைதி முயற்சிகளுக்கு உதவியளிக்கும் வகையில் சகல கட்சிகளினதும் பிரதிநிதிகளையும் உள்ளடக்கித்தாம் அமைக்க எண்ணியிருக்கும் சமாதானத்துக்கும் நல்லிணக்கத்துக்குமான தேசிய ஆலோசனைக் கவுன்ஸில் குறித்தும் -

இந்தக் கவுன்ஸில் அமைக்கும் யோசனை தொடர்பாக எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுடன் தாம் நடத்திய பேச்சுக்கள் குறித்தும் -

இந்தக் கூட்டத்தில் ஜனாதிபதி விளக்கினார் என்றும் அறியவந்துள்ளது.

நாடாளுமன்றக் கூட்டங்களில் ஆளும் கூட்டமைப்பின் உறுப்பினர்கள் முரண்பட்டு நடந்துகொள்வது குறித்தும் கூட்டத்தில் விசனம் தெரிவிக்கப்பட்டதாக அறியவந்தது.

இத்தகைய நிலைமை ஏற்படாமல் தவிர்ப்பதற்காகக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் கட்சிகளின் தலைவர்கள் நாடாளுமன்றக் கூட்டத்தொடர் ஆரம்பிக்கும் தினத்துக்கு முதல்நாள் ஒன்றாக ஜனாதிபதியைச் சந்தித்து விடயங்களை ஆராய்வது என்றும் -

நாடாளுமன்ற நடவடிக்கைகளின்போது கடைப்பிடிக்கவேண்டிய பொது உத்தியை அப்போது வகுத்து அதன்படி செயற்படுவது என்றும்-

அக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டதாக மேலும் அறியவந்தது. (ஐ-3)

## மரண அறிவித்தல்

### எலியாஸ் ஜெயராஜா

**(பிரபல கட்டட ஒப்பந்தகாரர்)**



மருதடி ஒழுங்கையில் வசித்த பிரபல கட்டட ஒப்பந்தகாரர் எலியாஸ் ஜெயராஜா செப்ரெம்பர் 13 ஆம்நாள் கொழும்பில் இறையடி சேர்ந்தார்.

அன்னார் இராஜேஸ்வரியின் அன்புக் கணவரும், ஜெயந்தி (ஆஸ்திரேலியா), டியோனி, ஷாமினி, அன்று ஆகியோரின் அருமைத் தந்தையும் ஜோன்சன் (ஆஸ்திரேலியா), ஜஸ்ரின் (சிலிங்கோ காப்புறுதிக்கூட்டுத்தாபனம்), உயிரோவியம் (ஆசிரியர்,சென்ஜோன்ஸ் கல்லூரி) ஆகியோரின் அன்பு மாமனும் ஜீவராஜா (பிரான்ஸ்), அன்ரனி கிப்பொலிற்றா (கனடா), நெல்சன் திரேசா (கனி - UK) ஆகியோரின் அன்புச் சகோதரருமாவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (15.09.2004) புதன்கிழமை மாலை தொடக்கம் அவரது இல்லத்தில் இறுதி மரியாதைக்காக வைக்கப்படும். இறுதிச்சடங்குகள் பற்றி பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:
திருமதி இராஜேஸ்வரி ஜெயராஜா (மனைவி).

*2/1, மருதடி ஒழுங்கை, நல்லூர், யாழ்ப்பாணம்.* (36404)(38-12-17)

**Computer courses**
Diploma in Computerized Accounting
Diploma in AUTOCAD
Diploma in Internet E-mail
Diploma in Microsoft office 2003
Diploma in Desktop Publishing
Diploma in Computer Hardware Engineering
Note:-பல்கலைக்கழகத்தில் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கு தனிப் பிரிவு ஆரம்பிக்கப்படும்.
மேலதிக விபரங்களுக்கு:-
43, Arasady Road,
Thaddatheru Junction,
Jaffna, Sri Lanka.
T.P: 021 2225170
ஆரம்பம் 18.09.2004

**நிரு ரியூசன் சென்ரர்** கோண்டாவில்
**வணிகக்கல்வி**
PAPER CLASS 2005
★ அலகுரீதியான கடந்தகால வினாக்கள்
★ மாதிரி வினாக்கள்
BY: S. யசோ
ஆரம்பம்: 14-09-2005 TU. - 5 p.m.
(36402)(38-12-17)

**உடன் தேவை**
T.V., Radio பற்றிய திருத்த வேலையும், விற்பனை செய்யக்கூடியவரும் உடன் தேவை.
தொடர்பு:
சிறி மாதவன்,
97, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
(36384)(38-12-17)



தீர்த்தத் திருவிழாவில் பாவந்தீர்ந்திடவே
கீர்த்தியுடன் வருவாய் வெற்றி வேலா! முருகா! திருவருள் பாலிப்பாய் அப்பனே!
இலத்திரனியல் மற்றும் அழகுசாதன, அன்பளிப்புப் பொருள்கள்,
மொத்தமாகவும், சில்லறையாகவும், பெற்றுக்கொள்ளலாம்.
டாட் என்ரபிறைஸ் Dart Enterprise
02, நவீன சந்தை மேல்மாடி, யாழ்ப்பாணம். (மக்கள் வங்கி அருகில்)
11,12, நவீன சந்தை, உட்புறம், யாழ்ப்பாணம்.
T.P:- 021 222 3098
021 222 7622
Fax: 021 222 3098
(C/37112)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 14.09.2004இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

### பாதுகாப்புக் காரணங்களுக்காக

# சந்தேக நபரை வேறு நீதிமன்றத்தில் ஆஜர்செய்ய நீதிவான் அனுமதி

கைக்குண்டுடன் கைதுசெய்யப்பட்ட - இராணுவ உள வாளி என்று கருதப்படுகின்ற - சந்தேக நபர் ஒருவரைப் பாதுகாப்புக் கருதி அவர் தடுத்துவைக்கப்பட்டிருக்கும் பொலநறுவைப் பகுதி நீதிமன்றத்திலேயே அடுத்த தவணையின்போது ஆஜர்படுத்துமாறு மட்டக்களப்பு நீதிமன்றம் உத்தரவிட்டது.

கடந்த 26 ஆம் திகதி மட்டக்களப்பு புதுநகரில் கைக் குண்டுடன் கைதுசெய்யப்பட்டவர் எனக் கூறப்படும் சுப்பிரமணியம் யோகநாதன் என்பவர் கடந்த வியாழக்கிழமை மட்டக்களப்பு நீதிமன்றத்தில் மீண்டும் ஆஜர்படுத்தப்பட்டார். அப்போது மேற்படி உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

குறிப்பிட்ட நபர் பொலநறுவைச் சிறைச்சாலையிலிருந்து பலத்த பாதுகாப்புடன் நீதிமன்றத்திற்கு அழைத்துவரப்பட்டார்.

எதிர்வரும் தவணையின்போது இவரை அழைத்து வருவதில் பாதுகாப்புத் தொடர்பான பிரச்சினைகள் இருப்பதாகச் சிறைச்சாலை அத்தியட்சகர் நீதிமன்றத்திற்கு அறிக்கை சமர்ப்பித்தார்.

இதனை ஏற்றுக்கொண்ட நீதிபதி, சந்தேக நபரை எதிர்வரும் 23ஆம் திகதி தவணையின்போது பொலநறுவை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துமாறு உத்தரவிட்டார்.

இதேவேளை - மட்டக்களப்பு சிறைச்சாலையில் கருணா குழுவைச் சேர்ந்த சச்சு மாஸ்டர் உட்பட இருவர் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபரான மகேந்திரன் புவிதரனை எதிர்வரும் 20ஆம் திகதி தவணையின்போது கட்டாயம் மட்டக்களப்பு நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துமாறு நீதிபதி எம்.எச்.எம்.அஜ்மீர் உத்தரவிட்டுள்ளார்.

தற்போது பதுளை சிறைச்சாலையில் வைக்கப்பட்டுள்ள இவர், ஏற்கனவே 2 தவணைகளில் ஆஜர்படுத்துவதற்காக நீதிமன்றத்துக்கு அழைத்து வரப்படவில்லை.

இவரை அழைத்து வருவது தொடர்பாகத் தாம் பாதுகாப்புப் பிரச்சினைகளை எதிர்நோக்குவதாகச் சிறைச்சாலை அத்தியட்சகர் நீதிமன்றத்திற்கு அறிக்கை சமர்ப்பித்திருந்தார்.

இதனை அப்போது ஏற்றுக்கொண்ட மட்டக்களப்பு நீதிவான் எதிர்வரும் தவணையின்போது அவரைக கட்டாயம் மன்றில் ஆஜர்படுத்தவேண்டும் என உத்தரவிட்டார். (க)

# சங்கானைக் கோட்டத்திலிருந்து 40 ஆசிரியர்கள் தீவகத்துக்கு மாற்றம்

வலி.தெற்கு,செப்.14

சங்கானைக் கல்விக் கோட்டத்தில் இருந்து நாற்பது ஆசிரியர்கள் தீவகப் பகுதிக்கு விரைவில் இடமாற்றம் செய்யப்படவுள்ளனர் என வலிகாமம் கல்விப் பணிப்பாளர் திருமதி றெஜினா இருதயநாதன் தெரிவித்துள்ளார்.

இவர்களுக்குப் பதிலாகத் தீவகத்தில் மிகநீண்ட காலமாகக் கடமையாற்றிவரும் 40 ஆசிரியர்கள் சங்கானைக்கு இடமாற்றம் செய்யப்பட உள்ளார்கள்.

இது ஒரு கட்டாய இடமாற்றமாக இருக்கும். தொடர்ச்சியாக ஐந்து வருடங்கள் சங்கானைக் கோட்டத்தில் பணிபுரிந்துவரும் ஆசிரியர்கள் இந்த இடமாற்றத்துக்கு உள்ளாக்கப்படவுள்ளனர்.

இவ்வாறு இடமாற்றம் செய்வதற்குரிய ஆசிரியர்களைத் தெரிவுசெய்வதற்கான நடவடிக்கைகள் ஏற்கனவே மேற்கொள்ளப்பட்டுள்ளன.

ஐந்து வருடங்களுக்கு மேலாகப் பணிபுரிந்துவரும் ஆசிரியர்கள் பற்றிய விவரங்கள் திரட்டப்பட்டுள்ளன எனக் கல்விப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார். (4-152)

## பாவனைக்குதவாத அரிசி குடத்தனையில் மீட்பு

யாழ்ப்பாணம்,செப்.14

வடமராட்சி கிழக்கு, குடத்தனைப் பிரதேசத்தில் பாவனைக்குதவாத அரிசி அம்பன் பகுதிப் பொதுச் சுகாதாரப் பரிசோதகரால் கைப்பற்றப்பட்டு அழிக்கப்பட்டதாகப் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் க.இளங்கோ தெரிவித்தார்.

பொதுமக்களுக்கு நிவாரணம் வழங்குவதற்கென வைக்கப்பட்டிருந்த 130 கிலோ அரிசி பூச்சி அரித்த நிலையில் காணப்பட்டது. பாவனைக்குதவாத இந்த அரிசியைப் பற்றி அறிந்த பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் அதனைக் கைப்பற்றிப் பொது மக்கள் முன்னிலையில் அவற்றை அழித்தனர். (4-204)


## இன்று நல்லைக் கந்தன் ஆலயத்தில்

**25**ஆம் நாள் தீர்த்தத் திருவிழா

காலை 7.00 மணிக்கு பஞ்சமூர்த்திகள் எழுந்தருளல்

**தீர்த்தம்**

· மாலை 6.30 மணிக்கு கொடியிறக்கம்

அஞ்சேலென அபயமளித்து வரும் பஞ்சமூர்த்திகளே
தஞ்சமெனச் சரணடைந்தோம் முருகா வா வா



## கொழும்பு பங்குப் பரிவர்த்தனை

பங்குச்சந்தையில் முதலிட வேண்டுமா?

தொடர்புகொள்ளுங்கள் : "பொஸ்கோ"

இல.252 பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். (நல்லூர் கந்தசுவாமி கோவிலுக்கு முன்பாக)

06.09.2004 முதல் 15.09.2004வரை

காலை 9 மணியிலிருந்து இரவு 9 மணி வரை மட்டும்

ஆஷா ஃபிலிப் செக்யூரிட்டீஸ் : கேதீஸ்வரன், சுதர்ஷன், விஜயந்தன்.(222- 2592)

பாட்லீட் மலோரி ஸ்டொக் புறோக்கர்ஸ் : நிரஞ்சன்(222-7012, 0777-222291)

கப்பிட்டல் எலயன்ஸ் ஹோல்டிங்ஸ் : முகுந்தன்(0777-770014)

எச் என் பி ஸ்டொக்புறோக்கர்ஸ் : சுமங்களா, வசந்தகுமார்(222-2787,222-3463)

லங்கா செக்யூரிட்டீஸ் : மயூரன்(0777-392231), நிரஞ்சன் றைல்ஸ்(0712-731254)

(C/37486)


## கூவு குயிலே!

கூவுகுயி லேபறந்து கூவுகுயிலே
கும்பிடுவார் மனத்தானைக் கூவுகுயிலே

நம்பிக்கை யாய்ப்பறந்து கூவுகுயிலே
நாங்கள்சிவ மென்றுசொல்லிக் கூவுகுயிலே

ஆதியந்தம் இல்லையென்று கூவுகுயிலே
அளந்தறிய ஒண்ணாதென்று கூவுகுயிலே

நீதிநெறி யைச்சென்று கூவுகுயிலே
நித்தியம்நாம் என்றுசொல்லிக் கூவுகுயிலே

ஊரும்பேரும் இல்லையென்று கூவுகுயிலே
ஒருபொல்லாப்பு மில்லையென்று கூவுகுயிலே

ஆருமறிய யாரென்று கூவுகுயிலே
அகம்புறமும் இல்லையென்று கூவுகுயிலே

ஐம்பூதம்நா மல்லவென்று கூவுகுயிலே
ஐம்பொறிநா மல்லவென்று கூவுகுயிலே

ஆன்மாவே நாமென்று கூவுகுயிலே
அங்குமிங் கும்பறந்து கூவுகுயிலே

மாண்புட னேபறந்து கூவுகுயிலே
மரணம்பிறப் பில்லையென்று கூவுகுயிலே



நாமேநா மென்றுசொல்லிக் கூவுகுயிலே
நமக்குக் குறை வில்லையென்று கூவுகுயிலே

போமேபோம் வினையென்று கூவுகுயிலே
புண்ணியம்போல் பாவமென்று கூவுகுயிலே

நல்லூரான் வீதியிற்போய்க் கூவுகுயிலே
நல்லதொண்டர் நாமென்று கூவுகுயிலே

- யோகர்சுவாமிகள்.

## நல்லூர் ஆலயச் சூழலில் இன்று நடப்பவை

யாழ்ப்பாணம்,செப்.14

நல்லூர்க் கந்தன் ஆலயப் பெருந்திருவிழாவையொட்டி இளங்கலைஞர் மன்றத்தினர், நல்லூர் துர்க்கா மணிமண்டபத்தில் நடத்திவரும் தெய்வீக இசையரங்கில் தீர்த்தத் திருவிழாவான இன்று செவ்வாய்க்கிழமை மாலை 6.30 மணிககு ந.வி.மு.நவரட்ணத்தின் பாட்டுக் கச்சேரி இடம்பெறும். என்.பரந்தாமன் இவருடன் உடன் பாடுவார்.

இதில் பக்கவாத்தியதாரர்களாக வயலின் - எம்.விஸ்வமூர்த்தி, மிருதங்கம் - வி.ரமணன், கடம் - சதாவேல்மாறன், முகர்சிங் - கே.நந்தகுமார் ஆகியோர் பங்கேற்கவுள்ளனர். (எ)

✦ ✦ ✦

யாழ்ப்பாணம்,செப்.14

நல்லூர்க் கந்தன் ஆலய வருடாந்தப் பெருந்திருவிழாவையொட்டி இந்துகலாசார திணைக்களத்தின் யாழ். மாவட்ட அலுவலகம், நல்லூர் நாவலர் மணிமண்டபத்தில் நடத்திவரும் ஆன்மீக நிகழ்வுகளில் இன்று செவ்வாய்க்கிழமை மாலை 7 மணிக்கு 'சூழல் மனிதனைக் கட்டுப்படுத்துகின்றதா? மனிதன் சூழலைக் கட்டுப்படுத்துகின்றானா? என்ற தலைப்பில் மதுர கவி காரை.எம்.பி. அருளானந்தன் தலைமையில் பட்டிமன்றம் நடைபெறும். (எ)

✦ ✦ ✦

யாழ்ப்பாணம்,செப்.14

நல்லூர்க் கந்தன் ஆலயப் பெருந்திருவிழாவையொட்டி நல்லூர் மேற்கு வீதியிலுள்ள ஸ்ரீமுத்துவிநாயகர் ஆலய மண்டப அரங்கில் தினமும் 6 மணிக்கு நடைபெற்று வரும் கம்பராமாயணத் தெய்வீகத் தொடர் இசைப் பேருரையில் தீர்த்தத்திருவிழாவான இன்று செவ்வாய்க்கிழமை சி.வை.நித்தியானந்த சர்மா 'ராம இராவணயுத்தம்' எனும் காட்சி பற்றி உரையாற்றுவார். (எ)

✦ ✦ ✦

யாழ்ப்பாணம்,செப்.14

நல்லைக் கந்தன் பெருந்திருவிழாவையொட்டி நல்லை ஞானசம்பந்தர் ஆதீனம் இன்று நடத்தவுள்ள நிகழ்ச்சிகள் வருமாறு:-

☆ 9.00 மணி - அழகேசன் அமிர்தலோஜன் - பாட்டு.

☆ 10.00 மணி - திருமதி பங்கையர்ச் செல்வி முகுந்தன் - பாட்டு.

☆ 11.00 மணி - பொன். சுபாஸ்சந்திரன் - பாட்டு.

☆ 11.30 மணி - செல்வி - வி.மஞ்சுளா - பாட்டு.

☆ 12.00 மணி - திருமதி மல்லிகா குணபூசணம் - பாட்டு.


☆ 12.30 மணி - சி.சிவஞானராசா - பாட்டு.

☆ 1.00 மணி - திருமதி சிவயோகராணி - பாட்டு. (3)

# நல்லூர்க்கந்தன்

## பெருந்திருவிழாக் காலச் சிறப்பம்சம்

### தீர்த்தத் திருவிழா



## தீர்த்தருள் தர வா கந்தா

வார்த்தைகள் வெடித்துச் சூடாய்
வாழ்க்கையைப் பாழாக்காமல்
போர்த் தொழில் மீண்டும் ஓங்கிப்
பூமியைக் காடாக்காமல்
யார்க்கும் யார் அடிமை இல்லை
என்பதை உணர்த்திப் போரைத்
தீர்த் தருள் தரவா கந்தா!
தீர்த்தமா டியும் வா கந்தா!

- சிற்பி.

## காத்தருள வருவாயே!

உள்ளத்திலே நிறைந்து உதிரத்திலே உறைந்த
உமையவள் பெற்ற உத்தம பாலகனே
கள்ளமனம் படைத்த கயவர்கள் ஆட்சியிலே
கலங்குந் தமிழினத்தைக் காத்தருள வருவோயே

- மட்டுவிலூர் த.அப்பாத்துரை.

## நலம் பல பெறுவோம்

செல்லக் கணபதிக்கு தம்பி ஆறுமுகன்
சொல்ல வல்ல முத்தமிழின் காவலன்
தொல்லைகள் நீக்கி நல்லவை செய்பவன்
நல்லையில் உறைந்து நல்வரம் தருபவன்
மெல்ல அவன் கழல் பற்றி நலம்பல பெறுவோம்.

- மு.வே.அன்பழகன்.

## நல்ல செய்தி தாருமையா!

நல்லை நகரமர்ந்து நம்வாழ்வில் இனிமைபெற
நானிலத்தார் போற்றிட நயமுடனே அருள்பவனே
மயிலேறும் மலரவனே மனக்குறைகள் தீர்ப்பவனே
நாடும் நலம் பெற நல்ல சேதி தாரும் ஐயா!

ஆறுதிருமுகமும் அருளாட்சி கொடுத்திடவே
ஈராறுகரம் கொண்டு இருமனையாள் துணை நிற்க
இடர்பல அகற்ற வென்றே இனியதொரு வேல் எடுத்தாய்
நாடு நலம்பெற நல்ல சேதி தாரும் ஐயா!

- இணுவையூர் சொரூபன்.

## தங்கிடும் சமாதானத்தை இத்தரணிக்கு நீ தருவாய்

ஆடியே நீ வருவாய் ஆறுமுக வேலவா
நாடியே நாம் வந்தோம் நல்லருளைத் தந்திடுவாய்
வாடி வருந்தி நிதம் வல்வினையைப் போக்கிடவே
தேடியே நாங்கள் வந்தோம் தரிசனம் தந்திடுவாய்

தங்க மயிலேறும் சண்முகனே நீ வருவாய்
மங்கா அருள்தனை மகிழ்வுடனே நீ தருவாய்
ஏங்கிடும் எம்மவரின் துயர்தீர்க்க நீ வருவாய்
தங்கிடும் சமாதானத்தை இத்தரணிக்கு நீ தருவாய்.

- சிதம்பரநாதன் சசீவன்.

## சொல்லிற் தமிழழகன்

நல்லையிலென் அன்பன்
நலம்பலசெய் பேரன்பன்
வல்லமை தந்தெனக்கு
வாழ்வொளி நல்கியவன்
சொல்லரிய பேரழகன்
சொல்லிற் தமிழழகன்
பல்லூழி வாழ்கவெனப் பாடு.

- அங்குசன்.

## பகைமை பறந்திடப் பாடுங்கடி!

கந்தனருள் பெறக் கூடுங்கடி! - என்றும்
கைமலர் கூப்பி வணங்குங்கடி!
செந்தமிழால் கவி பாடுங்கடி! - நிதம்
செய்தொழி லோங்கிடப் பாடுங்கடி!

பொச்சாப்பு போக்கிடப் பாடுங்கடி! - பாரில்
பொறாமை தொலைந்திடப் பாடுங்கடி!
பச்சை செழித்திடப் பாடுங்கடி! - என்றும்
பகைமை பறந்திடப் பாடுங்கடி!

வேலன் புகழ்தனைப் பாடுங்கடி! - அவன்
விந்தை விளங்கிடப் பாடுங்கடி!
ஞாலம் ஒளிர்ந்திடப் பாடுங்கடி! - வல்ல
நல்லை நயந்திடப் பாடுங்கடி.

- தென்நல்லை கு.பகீரதன்.

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

## மணமகன் தேவை

யாழ். கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, 1968இல் பிறந்த, அத்தம் நட்சத்திர ஆசிரியைக்கு B.A. (Dip.in Ed.) அரசாங்க/அரச கூட்டுத்தாபனத்தில் வேலைசெய்யும் மணமகன் தேவை. தொடர்பு: விளம்பர இலக்கம் 2370, C/o உதயன், யாழ்ப்பாணம். (36243)

## தவறிவிட்டது

திருமுறுகண்டியைச் சேர்ந்த சின்னக்கண்டு யோகராணி என்பவருடைய தே.அ. அட்டை (No.735892606X) 03-09-2004 அன்று முகமாலைக்கும் யாழ். போதனா வைத்திய சாலைக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் சி.நித்தியானந்தராசா திருமுறுகண்டி எனும் முகவரிக்கு அனுப்பிவைக்கவும். (34453)

N.P.G.S. 3888 இலக்கத்தைக் கொண்ட மோட்டார் சைக்கிள் இலக்கத்தகடு தவறிவிட்டது. தயவுசெய்து கண்டெடுத்தவர்கள் ஜெகதீஸ்வரி, கமநலசேவை நிலையம், சாவகச்சேரியில் ஒப்படைத்துவவும். சன்மானம் வழங்கப்படும். (சி-37638)

## கோழிக்குஞ்சு விநியோகம்

தரமான நம்பர்-01, பகிரா புறொயிலர் குஞ்சுகள் நாளை 15.09.2004 மாலை விநியோகிக்கப்படும். பதிவுகளை மேற்கொள்ளவும். ராஜீவ், ஆனைக்கோட்டைச் சந்தி. T.P.:3529, ரஞ்சீத், 517, ஸ்ரான்லி றோட், ஸ்ரீராம் பருத்தித்துறை பஸ்நிலையம் முன்பாக, ராதா மாவடி, வட்டுக்கோட்டை, P.ரவி, தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி. (36378)

ஒறியினல் பிறிமா இறைச்சிக் குஞ்சுகளும், பேட்டுக்குஞ்சுகளும் உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு:க.தனபாலசிங்கம், (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு), 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (36380)


**இணைய, இணையத்தள சேவை**

.com .net .org .info
Doman Registration Rs.400/= per Year
Hosting upto Rs.2000/= per year
Limited time offer

**SAAMSTECH, 841, Hospital Road, Jaffna.**
**T.P.: 0773 068968.** (சி-37510)

**SAAMSTECH இன் ஆங்கில, சிங்கள நேரடி வகுப்பு**

காலம்: 2 மாதங்கள்
கட்டணம்: ஆங்கிலம் ரூபா 6000, சிங்களம் ரூ.4000/= முழுமையாகக் கதைக்கலாம்.

**SAAMSTECH**
841, Hospital Rd., Jaffna.
Phone: 0773068968.
(சி-37511)

**விற்பனைக்கு**

கன்னாதிட்டி, கன்னாதிட்டி வீதியில் பிரபலம் வாய்ந்த நகை வியாபாரம் நடைபெற்று தற்போது தற்காலிகமாக மூடப்பட்டுள்ள பாரிய கடைக் கட்டடம் விற்பனைக்குள்ளது. விரும்புவோர் 2735736 என்னும் தொலைபேசி இலக்கம் மூலமாக தொடர்பு கொள்ளவும். இடைநிலையாளர்கள் தரகர்கள் வேண்டாம்.

**அப்துல் அசீஸ் முகமது றஷீத் ஹாஜியார்,**
56/1B, குவாறி றோட், தெகிவளை.
(36358)(42-34-18-16)

**வேலை வாய்ப்பு**

யாழ். நகரில் இணையசேவை வழங்குவதில் முன்னணியில் திகழும் எமது நிறுவனத்தில் பின்வரும் பணிநிலை வெற்றிடங்களுக்கான நேர்முகத்தேர்வு நடைபெற இருக்கிறது.

* எழுதுவினைஞர் (Clerk) - பெண்
தகைமை: தமிழில் கணனித் தட்டச்சு, கணனியில் முன்னனுபவம் Desktop Publishing (மேலதிக தகைமை)
* உதவியாள் - ஆண்
தகைமை: Internet, E mail, Computer Hardware முன் அனுபவம்

▲ உறவினரல்லாத இருவரின் சிபார்சுடன் கூடிய உங்கள் சுயவிவரங்களுடன் 15.09.2004 புதன்கிழமை காலை 10 மணி தொடக்கம் மாலை 4 மணிவரை நேரில் வரவும்.

FOCUS NET CAFE
120, அரசடி வீதி, யாழ்ப்பாணம். (36369)


## ச.ச.நிலையம் புனரமைப்பு

கைதடி நுணாவில் ச.ச. நிலையம் சாவகச்சேரிப் பிரதேச சபை நிதியான ஒரு லட்சத்து 20 ஆயிரம் ரூபா செலவில் மீளப் புனரமைக்கப்பட்டுள்ளதாக ச.ச.நிலையச் செயலாளர் நா.ஜெயரஞ்சன் தெரிவித்தார்.

இச்ச.ச. நிலையம் யாழ். - சாவகச்சேரி பிரதான வீதியருகில் மிக முக்கியமான இடத்தில் அமைந்துள்ளது. கடந்தகால இராணுவ நடவடிக்கைகளால் மிகமோசமாகப் பாதிப்படைந்து காணப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (4-31)


**நீங்களும் இணையத்தில் இணையலாம்**

உங்களுக்கு/உங்கள் நிறுவனத்திற்கு என இணையத்தளம் (Website) வைத்திருக்கிறீர்களா?
கவலையை விடுங்கள்!
24 மணி நேரத்தில் உங்களுக்கான தளத்தை நிறுவ நாம் தயார்

* Domain Registration (.com/.net/.org/.info)
ரூபா 1000 மட்டும் (ஒருவருடம்)
* Hosting (Windows/Linux)
ரூபா 2000 மட்டும் (ஒருவருடம்)
* 25 MB Space * 5 Pop3 E mails
* Database * Subdomain
* Technical Support (24/7)

இன்னும் பல அனுகூலங்களுடன் உங்களுக்கு சேவை வழங்க யாழ்நகரில்

**Focus Net Cafe**
120, Arasady Road, Jaffna, Hotline: **0777 563213**

**SPEED IT NET**
www.Speeditnet.com
email: biz @ speeditnet.com
(36368)(42-34-18-16)

**இணையத் தளம் ஊடாக 24 மணி நேரமும் உலகெங்கும் ஒலிக்கிறது**

WORLD TAMILAR
உலகத் தமிழர் வானொலி

இணைய முகவரி: WWW.Wtrfm.com
அதன் ஒரு வருட பூர்த்தியைச் சிறப்பிக்க நல்லூர் திருவிழாக்கால நேரடி ஒலிபரப்பு
26 உற்சவ நாள்களிலும்
(ஒகஸ்ட் 21 முதல் செப்ரெம்பர் 16 வரை)
உலகின் எந்த மூலையிலிருந்தும் இணையத்தளம் மூலம் செவிமடுத்து மகிழலாம்).

**உலகத் தமிழர் வானொலியுடன்**
நேரடியாக இணைய
MSN messenger chat மூலம்: live @ wtrtm.com
தொலைபேசி மூலம்: 2673969
(சி-36863)

**உலகத் தமிழர் உறவுப் பாலமாக உலகத் தமிழர் வானொலி**

ஊடக அனுசரணை: 'உதயன்'


## 43/5726 (இசுகூ) பாரவூர்தி பகிரங்க ஏலவிற்பனை 25-09-2004

பூநகரி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் 43/5726 ஆம் இலக்க பாரவூர்தி பகிரங்க ஏலவிற்பனை செய்யப்படவுள்ளது. பாரவூர்தியை 14-09-2004 தொடக்கம் 24-09-2004 வரை கரைச்சி வடக்கு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம், பரந்தன் பாரவூர்தி தரிப்பிடத்தில் அலுவலக நேரத்தில் பார்வையிடலாம். 25-09-2004 முற்பகல் 10.00 மணிக்கு அதே இடத்தில் வைத்துப் பகிரங்க ஏல விற்பனை செய்யப்படும்.

01. மீளளிப்பு முற்பணமாக ரூபா 1000/- செலுத்தியே கேள்வியில் பங்குபற்றலாம்.
02. தெரிவுசெய்யப்படுபவர் மூன்று நாள்களுக்குள் முழுப்பணத்தையும் செலுத்தி பாரவூர்தியினைப் பெற்றுக்கொள்ளவேண்டும்.

பூநகரி பல நோ.கூ.சங்கம்,
நாகதேவன்துறை வீதி,
வாடியடி, பூநகரி.

திரு. கா.கார்த்திகேசு,
தலைவர்,
பூநகரி பல நோ.கூ.சங்கம்.
(36381)(34-16-15-26)

ௐ
ஸ்ரீ ராம ஜெயம்

## கும்பாபிஷேக மலர் நூல் வெளியீட்டு நிகழ்வு

இடம்: வண்ணை ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாள் தேவஸ்தானம்
காலம்: தாரண வருடம் புரட்டாதி மாதம் 2ஆம் நாள் 18.09.2004 சனிக்கிழமை (முதலாம் சனிவாரம்)
நேரம்: காலை 9.00 மணி
தலைமை: திரு.V.N.C.நாராயணசாமி
வரவேற்புரை: திரு.மு.சிவலோகநாதன்
ஆசியுரை: பிரம்மஸ்ரீ வ.இராஜேஸ்வரக்குருக்கள்
அருளுரை: ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள் (நல்லை ஆதீனம்)

வாழ்த்துரைகள்:
பேராசிரியர் அ.சண்முகதாஸ் M.A. Ph.D. (தலைவர், தமிழ்த்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)
மதுரகவி காரை. எம்.பி. அருளானந்தன் B.A. (Hons)

கும்பாபிஷேக மலர் விமர்சனம்:
பிரம்மஸ்ரீ சா.குமரேச சர்மா B.A. (Hons)

முதற் பிரதி பெறுநர்: திரு.நா.அப்புலிங்கம், லிங்கம் கூல்பார்

சிறப்புப் பிரதி பெறுநர்கள்:

1. திரு.S.V.சிறீதரன் - கொனிக்கா கலர் லாப், ஸ்ரீ அமலா ஜுவல்லர்ஸ், சிறிராம் ஜுவல்லர்ஸ்
2. திரு.ஆ.குணரத்தினம் - குகன் ஸ்ரோர்ஸ்
3. திரு.கங்கைவேணியன் - வேணி களஞ்சியம்
4. திரு.P.நாகரத்தினம் - E.S. பேரம்பலம் அன் கோ
5. திரு.ந.சத்தியரூபன் - சிறி நதியா நகை மாளிகை
6. திரு.ப.சிவபாஸ்கரன் - சாரங்கா நகை மாடம்
7. திரு.க.சிவபாலன் - கே.கே.கந்தையாபிள்ளை
8. திரு.சு.பாக்கியராசா - குபேரன் களஞ்சியம்
9. திரு.ச.சிவகுமரன் - சிவன் மோட்டர்ஸ் ஸ்ரோர்ஸ்

நன்றியுரை: திரு.செ.இரத்தினகோபால்

**அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.**

யாழ்ப்பாணம்,
13.09.2004 (சி-37646) (24-34-16-15)

தலைவர்
நூல் வெளியீட்டுக் குழு.


PRIMA BEST IN FEED
1982
PRIMA QUALITY CHICK

**மங்களகரமான திறப்புவிழா**

எமது வடமராட்சி வாடிக்கையாளர்களின் வேண்டுகோளுக்கு இணங்க உங்கள் நன்மைகருதி பிரதான வீதி, நெல்லியடியில் எமது கிளை 15-09-2004 புதன்கிழமை ஆரம்பிக்கப்படவுள்ளது. உங்களிற்குத் தேவையான பிரிமா கோழித்தீன், கால்நடை மருந்துகள், கோழித்தீன் பாத்திரங்கள், பிரிமா கோழிக்குஞ்சுகள் ஆகியவற்றை எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.

குறிப்பு: 15.09.2004 – 22.09.2004 வரை

விலைக்கழிவுடன் PRIMA கோழித்தீன்கள் விற்கப்படும். அன்புடன் அனைவரையும் அழைக்கின்றோம்.

PRIMA
Authorized dealer:
Ceylon Grain Elevator Ltd.

**Nallur Farm Centre**
பிரதான வீதி, (நெல்லியடிக்கிளை)
நெல்லியடி.
(36381)(42-34-15-16)

# பனை உள்ளவன் வீட்டில் பஞ்சம் இல்லை






ஆதிகாலத்தில் இருந்தே பனைவளம் தமிழ் மக்களின் வாழ்வோடு பின்னிப்பிணைந்து அவர்களின் குறியீடுகளுள் ஒன்றாக அமைந்துள்ளதை பழங்கால இலக்கியங்களும் வரலாறுகளும் எடுத்துக்கூறுகின்றன.

பனை உள்ள நாட்டில் பஞ்சம் இல்லை. பனையின்றி வாழ்வில்லை என்றெல்லாம் முதுமொழிகள் கூட உண்டு. மேற்கு ஆபிரிக்கா, தெற்காசியா, தென்கிழக்காசியா போன்ற இடங்களில் 14 கோடி பனை மரங்கள் உள்ளதாகப் புள்ளி விவரங்கள் கூறுகின்றன.

**பனைவகைகள்**

பனை பொராஸஸ் பிளாபெல்லிபெர் (BORWSSUS FLAVLLIFER) என்ற தாவரவியல் பெயரைக் கொண்டது. சிங்கள மக்கள் பனையைத் 'தல்' என அழைப்பர்.

தாவரவியலாளர்கள் பனைசார்ந்த இலைகளை பனை, தென்னை, ஈந்து, உதிலி என நான்கு வகைப்படுத்திக் கூறுவர். இவற்றுள் பனை, தென்னை ஆகியன இலங்கையின் வடக்கு - கிழக்கு மாகாணங்களில் பரந்து காணப்படுகின்றன.

பயன்படுத்த முடியாததாகக் கருதப்படும் எந்த மண்ணிலும் பனை தன்னை வளர்த்துக் கொள்ளும் கடும் வரட்சியைத்தாங்கும் வல்லமை இதற்குரிய சிறப்பாகும். நூற்றாண்டுப் பயிர், கற்பகதரு என்றெல்லாம் அழைக்கப்படும். பனை கணிசமான அளவு மக்களின் உணவுத் தேவைகளையும் வதிவிடத்தேவைகளையும் அழகியல் மற்றும் மருத்துவத் தேவைகளையும் பூர்த்தி செய்யக்கூடியது.

பனையில் இருந்து வெட்டி எடுக்கப்படும் மரம் 200 வருடங்களுக்கு மேலும் பழுதடையாமல் பயன்தரக் கூடியது. ஒரு பனை மரம் சராசரியாக 12 - 15 மீற்றர் உயரம் வரை வளர்ந்து 100-150 வருடங்கள் வரை நிலைத்து நிற்கக்கூடியது.

**ஈழத்தில் பனை மரம்**

இலங்கையில் உள்ள பனைமரங்களுள் 99 சதவீதமானவை வடக்கு - கிழக்கு பகுதிகளான ஈழத்தில்தான் காணப்படுகின்றன. ஏனையவை புத்தளம், அம்பாந்தோட்டை போன்ற இடங்களில் உள்ளன.

ஈழத்திலும்கூட வடபகுதியிலேயே அதிகப்படியான பனைகள் உள்ளன. இங்கு பனைவளங்கள் முழுமையாகப் பயன்படுத்தப்படுவதில்லை. பனையில் இருந்து பல பொருள்களை உற்பத்திசெய்யலாம்.

திருக்குடத்தை அருணாசலபுலவர் 'தலா விலாசம்' என்ற தமது நூலில் பனம் பொருள்களைக்கொண்டு 80 வீதமான உற்பத்திகளை செய்யலாம் எனக் குறிப்பிடுகிறார். முழுவதையும் உற்பத்தி செய்யாவிடினும் ஒரு சில நூறு வகைப் பொருள்களையேனும் நாம் உற்பத்தி செய்து பயன்படுத்தினால் எமது பொருளாதாரம் வளர்ச்சிகாணமுடியும்.

இயற்கைத்தாவரமான பனையை நாம் திட்டமிட்டு வளர்த்து எதிர்கால சந்ததியின் நலவாழ்வுக்கு வளம் சேர்க்கவேண்டும். எமது பிரதேசத்தில் காணப்படும் 75 லட்சம் பனைகளில் அழிக்கப்பட்டவை போக மீதியுள்ள 50 லட்சம் மரங்களையும் முழுமையாகப் பயன்படுத்துவோமானால் எவரிடத்திலும் நாம்கையேந்தி நிற்க வேண்டியநிலை ஏற்படாது.

**பனைகள் அழிப்பு**

அண்மைக்காலங்களில் இடம்பெற்ற யுத்தம் காரணமாக வடக்கு - கிழக்கு பகுதிகளில் 25 லட்சம் பனைகள் அழிக்கப்பட்டு காப்பரணகளாகப் பயன்படுத்தப்பட்டதோடு, விமானத் தாக்குதல்கள், எறிகணைத் தாக்குதல்களாலும் அழிக்கப்பட்டுள்ளன. வடபகுதியில் 19 லட்சம் பனைகளும் கிழக்குப்பகுதியில் 6 லட்சம் பனைகளும் அழிக்கப்பட்டுவிட்டன. யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார், முல்லைத்தீவு மாவட்டங்களில் இவ்வாறு அழிக்கப்பட்ட பெருந்தொகை மரங்களுக்கு ஈடாக மீள்நடுகை மேற்கொள்ளப்பட வேண்டிய அவசியத் தேவை உண்டு.

**பனை உற்பத்திகள்**

பனம் பொருள்களின் பயனைப் பின்வரும் வகைக்குள் உள்ளடக்க முடியும். அவையாவன சுரப்பு உற்பத்திகள், ஓலை, தும்பு, நார் உற்பத்திகள். பழ உற்பத்திகள், மர உற்பத்திகள.

சுரப்பு உற்பத்தியில் இருந்து பதநீர், பனம் பாணி, பனைவெல்லம், பனம்சீனி போன்ற உணவுப் பொருள்களையும், கள், சாராயம் போன்ற மதுசார உற்பத்திகளையும் பெறலாம்.

ஓலை, தும்பு, நார் போன்றவற்றைக் கொண்டு பாய், கடகம், கூடை, துடைப்பம், விசிறி, அலங்கராப் பூக்கள் என்பவற்றைப் பெறலாம். எரிபொருள்களாகவும் பயன்படுத்தலாம்.

பழ உற்பத்திகளாக பனாட்டு, பனங்களி, பனம் பண்டங்கள், ஒடியல், புளுக்கொடியல் போன்றவற்றைப்பெறவும்.

பூரான், பற்பசை மற்றும் நோய் எதிர்ப்புத் தடைப்பொருள்கள் என்பவற்றைத் தாயாரிகக வும் முடியும்.

மர உற்பத்தியில் வீட்டு நிர்மாணப் பொருள்கள் மற்றும் அலங்காரப் பொருள்கள் என்பவற்றை உற்பத்திசெய்யமுடியும்.

எமது மக்கள் பல்வேறு வகையான வெளிநாட்டு இறக்குமதிப் பொருள்களால் கவரப்பட்டுள்ளதுடன் சிறப்புமிக்க எமது உள்ளூர் உற்பததிப் பொருள்களை மறந்தே போய்விட்டனர். பனம் பொருள் உற்பத்திகள் பாவனையையும் உணவுப் பொருள்களையும் இத்தகைய தொழில்களில் ஈடுபடுவோரையும் இழிவாகக் கருதத் தொடங்கிவிட்டனர். ஒரு சில கிராமங்களில் உள்ள மக்கள் இன்றும் பனம்பொருள் உற்பத்தியையும் தொழிலையும் கைக்கொண்டுவருகின்றனர்.

**உதவிகள் தேவை**

பனம் பொருள் உற்பத்திக்கும் கைத்தொழிலுக்கும் தேவையான உதவிகள் கிடைக்க வேண்டும் விஞ்ஞான ரீதியிலான புதிய தொழில் நுட்பங்கள கிடைக்க வேணடும் தற்கால தேவைகளுக்கும் மக்களின் விருப்புக்கும் ஏற்ற முறையில் பொருள்கள் உற்பத்தியாகி சந்தைப்படுத்தப்படவேண்டும் உற்பத்திப் பொருள்களைப் பதப்படுததிப் பேணவும் அவற்றுக்கான தர நிர்ணய சான்றிதழ்கள் வழங்கப்படுவதும் இன்றைய தேவைகளாகும்.

**பனை-தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்**

பனை - தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் அமைக்கபட்டு இவ்வகை செயறபாடுகளில் ஈடுபடும் மக்களும் அவர்களின் குடும்பங்களும் சமூகத்தவரும ஓரளவு பாதுகாத்து வரபபடுகின்றது.

கள், சாராயம் போன்ற மது உற்பத்திகளை மேற்கொள்வதுடன் கிளைகளூடாக பல சமூக மேம்பாட்டுத்திட்டங்களையும், கல்வி, போஷாக்கு உணவுத் திட்டங்களையும் யுவதிகளுக்கான தொழிற்பயிற்சியையும் வழங்கிவருகின்றது.

இச்சங்கத்தின் நடவடிக்கைகள் பற்றியும் எதிர்கால நிலை பற்றியும் சங்கத்தின் கிராமிய வங்கிக் காசாளர் தா.தவச்செல்வன் பின்வருமாறு கருத்துத் தெரிவிக்கின்றார்.

**சங்கத்தின் தோற்றமும் இன்றைய நிலையும்**

1972ஆம் ஆண்டு சீவல் தொழிலாளர்களின சமூக மேம்பாடு, பொருளாதார வளர்ச்சி கருதிகள் உற்பத்தி விற்பனவுச் சங்கமாக இது ஆரம்பிக்கப்பட்டது. பின்னர் தெங்கு, பனம் பொருள் உற்பத்திச் சங்கமாகவும், பனை - தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கமாகவும் பெயர் மாற்றம் பெற்றது.

கள், சாராயம், பனஞ்சீனி, பனைவெல்லம், கல்லாக்காரம் போன்ற பொருள் உற்பத்திகளை மேற்கொண்டு அவற்றை விற்பனைசெய்தும் வந்தது.

இன்றைய உலகமயமாக்கல் கொள்கையால் சங்கம் பல பிரச்சினைகளை எதிர்நோக்கியுள்ளது. உலகமயமாக்கல் கொள்கை அடிப்படையில் எந்த ஒரு நாடும் தமது உற்பத்திகளை பிற நாடுகளில் தாராளமாகச் சந்தைப்படுத்தலாம்.

உலக மயமாக்கலில் நவீன தொழிற்சாதனங்கள் பயன்படுத்தப்படுகின்றன. நிபுணத்துவ ஆலோசனைகள் வழங்கப்பட்டு பாரிய அளவில உற்பத்திகள் இடம்பெறுகின்றன. விளம்பர யுத்திகளால் மக்கள் கவரப்படுகின்றனர்.

பனை, தென்னை வள சங்கத்தினரால் உற்பத்திசெய்யப்பட்டு அமோகமாக விற்பனை செய்யப்பட்டு வந்தபொருள்களுக்கு நிகரான பொருள்கள் தற்போது உலகமயமாக்கல் காரணமாக எமது மக்களுக்கு கிடைப்பதனால் எமது சங்கத்தின் பொருள்களின் விற்பனையை அவர்கள் மீது செலுத்த முடியாமல் உள்ளது. இதனால் எமது உற்பத்திகள் தேக்கமடைந்து சங்கத்துக்குப் பாரிய பின்னடைவு ஏற்பட்டுள்ளது.

நிறுவனப பணியாளருக்கு வழங்க வேண்டிய சம்பளங்களையும் சலுகைகளையும் வழங்க முடியாதுள்ளது. பணியாளர்கள் [illegible]த்தை விட்டு விலகிச்செல்ல வேண்டியநி[illegible]தோன்றியுள்ளது. உற்பத்தி நடவடிக்கைகளை சங்கம் முற்றாக நிறுத்த வேண்டிய நிலையும் காணப்படுகிறது.

**பிரச்சினைக்கான தீர்வுகள்**

மேற்படி பிரச்சினைகளுக்குப் பின்வரும் முறைகளின் மூலம் ஓரளவு தீர்வுகாணமுடியும்.

★ சங்கத்தைச் சேர்ந்த பணியாளர்களுக்கு கணக்குப்பதிவு, ஆங்கிலம், கணனி போன்ற துறைகளில் போதிய பயிற்சி வழங்கப்படவேண்டும்.

★ உலகமயமாக்கல் கொள்கைகளை சங்கம் தமதாக்கிக்கொள்ளவேண்டும்.

★ நவீன உற்பத்திச் சாதனங்களைப் பெற்று உற்பத்திகளை மேற்கொண்டு தரமான பொருள்களை மலிவான விலையில் வழங்கவேண்டும்.

★ வாடிக்கையாளர்கள் விரும்பும் நேரத்தில் விரும்பிய அளவில் அவற்றை வழங்கவேண்டும்.

★ சங்கத்தின் உற்பத்திகளைச் சந்தைப்படுத்த நடவடிக்கை எடுக்கவேண்டும்.

★ விற்பனை உத்திகள் கையாளப்படவேண்டும்.

★ மக்களின் அடிப்படை, அன்றாடத் தேவைகளை நிவர்த்தி செய்யும் வகையில் சங்கம் தனது செயற்பாட்டை மாற்றியமைத்துக் கொள்ள வேண்டும்.

★ சங்கத்தைச் சார்ந்த அனைவரும் தமது இலக்கை அடைவதற்கு சங்கத்துக்கு விசுவாசமாக நடந்துகொள்ள வேண்டும்.

**பரிபூர்ணா**

இது போன்ற நடவடிக்கைகளை முன்னெடுப்பதன் மூலமே உலக மயமாக்கலால் எமக்கு ஏற்படும் பிரச்சினைகளுக்கு முகம்கொடுத்து வளர்ச்சிபெறமுடியும். ◆

## 17 வருட இடைவெளிக்குப் பின்னர் கிளிநொச்சியில் வாக்காளர் பதிவு

இலங்கையின் தேர்தல் மாவட்டமான யாழ்ப்பாணத் தேர்தல் தொகுதியில் ஒன்றான கிளிநொச்சி மாவட்டத்தில் 17 ஆண்டுகளுக்குப் பிறகு வாக்காளர் பதிவுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. கிளிநொச்சி மாவட்டத்தின் சகல கிராம அலுவலர்களுக்கும் வாக்காளர் பதிவுகள் தொடாபான விளக்கங்கள் அளிக்கப்பட்டு படிவங்களும் வழங்கப்பட்டுள்ளன.

பெரும்பாலான மக்கள் நீண்ட இடைவெளிக்குப் பின்னர் இம்முறை வாக்காளர் பதிவுகள் மேற்கொள்வதைக் காணமுடிகிறது.

1987ஆம் ஆண்டுக்குப் பின் இப்பிரதேசத்தில் வாக்காளர் பதிவுகள் இடம்பெறவில்லை.

இலங்கை தேர்தல் திணைக்களம் இம்முறையே இலங்கை முழுவதும் வாக்காளர் பதிவுகளை மேற்கொண்டுவருகின்றது. இந்த வருடம் ஜூன் மாதம் முதலாம் திகதியன்று 18 வயதைப் பூர்த்திசெய்த அனைவரும் வாக்காளர் பதிவுகளை மேற்கொள்ளத் தகுதியுடையவர்களாவர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (4-405-204)

### மலசலகூடங்களை அமைப்பதற்கு உதவி

திருவையாறு,செப்.14

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள காந்தி கிராமம், யூனியன்குளம், கோணாவில் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த மக்களின் சுகாதார நல மேம்பாட்டைக்கருதி தனிநபர் மலசல கூடம் அமைப்பதற்கான திட்டம் நடைமுறைப் படுத்தப்படவுள்ளது. இதன் முதற்கட்ட நடவடிக்கையாக 50 மலசல கூடங்கள் அமைப்பதற்கான நிதி ஒக்ஸ்பாம் நிறுவனத்தால் கிராமிய பொருளாதார அபிவிருத்தி நிறுவனத்திற்கு வழங்கப்பட்டுள்ளதுடன் பயனாளிகள் தெரிவும் இடம்பெற்றுள்ளது. இவ்வேலைகள் யாவும் அடுத்தவருடம் மார்ச மாதத்தில் நிறைவுறும் என்றும் அடுத்த கட்ட மலசலகூடம் அமைக்கும் வேலைகள் ஏப்ரல மாதம் ஆரம்பிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது. (4-393)

### முழங்காவில் பெருமாளுக்கு மஹா கும்பாபிஷேகம்

முழங்காவில், பூநகரி ஸ்ரீதேவி, பூதேவி சமேத வெங்கடேஸ்வரதராஜப் பெருமாள் ஆலய புனராவர்த்தன மஹா கும்பாபிஷேகம் கடந்த 6ஆம திகதி திங்கட்கிழமை நடைபெற்றது. தொடர்ந்து 24 நாள்கள் மண்டலாபிஷேகம் நடைபெற்றுவருகிறது. அதனைத் தொடர்ந்து 10 நாள்கள் அலங்கார உற்சவம் நடைபெற்றும். (4-323)

### கரைச்சிப் பிரதேச சபைக்கு புதிய செயலாளர் நியமனம்

கிளிநொச்சி, கரைச்சிப் பிரதேச சபையின் புதிய செயலாளராக வே.குலந்திரன் நியமிக்கப்பட்டுள்ளார். ஏற்கனவே இங்கு செயலாளராகக் கடமையாற்றிய திருமதி தி.அன்னலிங்கம் பூநகரிப் பிரதேச சபைக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். புதிய செயலாளர் கிளிநொச்சி வலயக் கல்வி அலுவலகத்திலும், துணுக்காய் வலயக் கல்வி அலுவலகத்திலும் கணக்காளராகப் பணியாற்றியவராவார். (4-405)

## மீனவருக்கான ஓய்வு மண்டபம் செல்வபுரத்தில் திறந்து வைப்பு

புதுக்குடியிருப்பு,செப்.14

முல்லைத்தீவு செல்வபுரம் கிராமத்தில் கடந்த 8ஆம் திகதி மீனவர்களுக்கான ஓய்வு மண்டபம் ஒன்று திறந்து வைக்கப்பட்டது.

செல்வபுரம் கிராம கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத் தலைவர் அருள்நேசன் தலைமையில் ஆரம்பமான திறப்புவிழா நிகழ்வில் மங்கள விளக்கினை கிராம சேவையாளர் சி.மோகனும் முல்லை நகர புனரமைப்புக் குழுத் தலைவர் ரங்கனும் ஏற்றிவைத்தனர்.

தேசியக் கொடியினை முல்லை மாவட்டக் கடற்புலிகள் பொறுப்பாளர் ரங்கன் ஏற்றினார்.

கட்டடத்தினை முல்லைத்தீவு மகாவித்தியாலய அதிபர் ம.அன்ரனி ஜெகநாதன் நாடாவை வெட்டித் திறந்துவைத்தார்.

இந்நிகழ்வில் பெருமளவான மக்கள் கலந்து கொண்டனர். (4-353)




### கட்டாக்காலிகளால் பயிர்கள் சேதம்

பரந்தன்,செப்.14

பிரமந்தனாறு பிரதேசத்தில் கட்டாக்காலி மாடுகளால் தோட்டப் பயிர்கள் அழிக்கப்பட்டு வருகின்றன.

மாடுகளைக் கட்டி வளர்க்காது மேய்ச்சலுக்கு விட்டுள்ளதால் அவை இரவு பகல் வேளைகளில் தோட்டங்களில் புகுந்து பயிர்களை நாசம் செய்கின்றன. இது விடயம் சம்பந்தமாக பிரமந்தனாறு கிராமத்திலுள்ள கமக்கார அமைப்புக்கு பலமுறை தெரிவித்தும் அவர்கள் இதுவரை எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை என பொதுமக்கள் தரப்பில் விசனம் தெரிவிக்கப்படுகின்றது. (4-352)

### பூநகரியில் சிறுவர் பூங்காவிற்கு அடிக்கல்

பூநகரி,செப்.14

பூநகரி, நாலாம் கட்டையில் சிறுவர் பூங்காவிற்கான அடிக்கல் நாட்டுவிழா நாலாம் கட்டை சனசமூக நிலையத் தலைவர் நடேசு நாகேஸ்வரன் தலைமையில் கடந்த 9ஆம் திகதி பிற்பகல் 2 மணிக்கு நடைபெற்றது.

இதில் மங்கள விளக்கினைப் பூநகரி உதவி அரசாங்க அதிபர் மாணிக்கவாசகர் - சிறிஸ்கந்தகுமார், பூநகரி கடற்புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் அமுதன் ஆகியோர் ஏற்றிவைத்தனர். தமிழீழ தேசியக் கொடியினை கடற்றொழிலாளர் சங்கங்களின் சமாசப் பொறுப்பாளர் அச்சுதன் ஏற்றிவைத்தார்.

மூன்றரை லட்சம் ரூபாய் செலவில் அமைகக்கப்படவுள்ள சிறுவர் பூங்காவிற்கான அடிக்கல்லினைப் பூநகரி உதவி அரசாங்க அதிபர் மாணிக்கவாசகர் சிறிஸ்கந்தகுமார் நட்டுவைத்தார். இந்த நிகழ்வில் பெருமளவானோர் கலந்து கொண்டனர். (4-403)

நாள் முழுவதும் புத்துணர்ச்சியுடன் நடமாட

**அருந்துங்கள்...!**

# அண்ணா கோப்பி

**நல்லூர் ஆலய - சிவன் கோயிலுக்கு**

அருகிலுள்ள "அண்ணா"

வியாபார நிலையத்தில்

அண்ணா உற்பத்திப் பொருள்களான

❋ தோசை மா ❋ அப்பம் மா ❋ ஜீவாகாரம் ❋ அரிசிமா ❋ சரக்குத் தூள் ❋ சொட்டுநீலம்

அடங்கிய பொதியை 100/= ரூபா கொடுத்து வாங்கி நாம் வழங்குகின்ற இனாம் பொருள்களைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

(சி-37580)(34-16-18-26)


## மூன்றாவது வருட நினைவுகளுடன்....



அமரர்

**சட்டநாதன் பூநாதன்**

(பல்கலைக்கழக பாதுகாப்பு உத்தியோகத்தர்)

மலர்வு 01-10-1949 உதிர்வு 14-09-2001

ஆண்டுகள் மூன்று ஆயினவே ஆறவில்லை
எம்துயரம்! எங்கு பார்த்தாலும்
உங்கள் திருமுகம் தெரிகின்றதே
ஆறுதலுக்கு ஆயிரம் உறவுண்டு
ஆனால் அப்பா என்று அழைக்க
யாருமில்லையே?

95,ஆசீர்வாதப்பர் வீதி,
நல்லூர்,
யாழ்ப்பாணம்.

*பிரிவால் வாடும்:*
மனைவி, பிள்ளைகள்,
(36376) (39-16-18-26) குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

**திருமதி சோமசுந்தரம் மகேஸ்வரி**

காங்கேசன்துறை கொத்தாவத்தையைப் பிறப்பிடமாகவும் உரும்பிராயை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சோமசுந்தரம் மகேஸ்வரி 12-09-2004 ஞாயிறு இரவு காலமானார்.

அன்னார் சோமசுந்தரத்தின் அன்பு மனைவியும் பாலச்சந்திரன் (டுபாய்), இராமச்சந்திரன் (ஏழாலை), திருமதி பாலபாஸ்கரன் பாலயோகினி, இரவிச்சந்திரன் (அமெரிக்கா), ஜெயச்சந்திரன் (கனடா), விமலச்சந்திரன், திருமதி ஐங்கரன் சந்திரிகா ஆகியோரின் பாசமிகு தாயாருமாவார்.

அன்னாரின் பூதவுடல் உரும்பிராய் வேம்பன் மயானத்தில் நேற்று (13-09-2004) திங்கட்கிழமை மாலை 5 மணிக்கு நல்லடக்கம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

கோப்பாய் வீதி,
உரும்பிராய் தெற்கு,
உரும்பிராய்.

தகவல்:
கணவர், மக்கள்,
(36375) (26-16-18) மருமக்கள்.


## TAV தொழில்நுட்பக்கல்வி

சுவிஸில் 1998 இல் இருந்து தமிழ்மொழியில் தொழிற்கல்வியை வழங்கி இதனூடாக தமிழர் பலர் வேலைவாய்ப்பைப் பெற வழிவகுத்த ஒரே நிறுவனம் *TAV* ஆகும். சுவிஸிலுள்ள தொழிற்பயிற்சி வழங்கும் இந்நிலையமானது ABB, ALSTOM போன்ற பெரிய தொழிற்சாலைகளை அங்கத்தவராக இணைத்து மேலும் சுவிஸில் 100 இற்கும் மேற்பட்ட தொழில்நிறுவனங்களை அங்கத்தவராகவும்கொண்ட பயிற்சி நிலையமாகும். எமது நேரடியான தமிழ்மொழி விளக்கத்துடன் நடைபெறும் பயிற்சியானது மிகப் பெறுமதிமிக்க உயர்வைத் தரவல்லது.

**தொழில்நுட்பக் கல்வி கற்கைநெறி**

- CNC Programmer (புரோகிராமர்)/ Manufacturing Engineer
- Technician

**கற்கைநெறிக்கான தகைமை:**
க.பொ.த.(சா.த.) பரீட்சைச் சித்தியுடன்
கணிதபாடத்தில் சிறப்புச்சித்தி

**வயதெல்லை: 18-33**

- காலை 10.00 தொடக்கம் மாலை 6.00 மணிக்கு முன்னர் தொடர்புகொள்ளவும்

**விண்ணப்ப முடிவுதிகதி: 15.09.2004**

விண்ணப்பத்தை சுயவிவரத்துடன் தேசிய அடையாள அட்டைப் பிரதியையும் தெளிவான முகவரியுடன் அனுப்பிவைக்கவும். நேர்முகப்பரீட்சையில் கடந்த 6வருட பயிற்சி விவரம் காண்பிக்கப்பட்டு இக்கல்வி உங்களுக்கு உயர்வைத் தர வல்லதா என சுயமாகத் தீர்மானிக்கவும் வேலைவாய்ப்பு, சுயதொழில் ஆரம்பித்தல் போன்ற விடயங்களுக்கு விளக்கமும் அளிக்கப்படும்.

விண்ணப்ப முகவரி:
**TAV,**
Salzweg 1, 8048
Zurich Switzerland.

தொடர்புகளுக்கு:
**செல்வசிவபரன்**
Tel 0041+1430 3074
079/712 37 46,
தொலைநகல் Fax: 01 430 31 44

தொடர்புகளுக்கு:
**லக்ஷன் போட்டோ அன் வீடியோ**
பலாலி வீதி, பரமேஸ்வராச் சந்தி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.
(35717)


## கருத்தரங்கும் பயிற்சி வகுப்பும்

வலிகாமம் தெற்கு, செப்.14

யாழ்ப்பாணம் விவசாயத் திணைக்களத்தினரால் நடத்தப்படும் நெற்செய்கையில் உவர்மண் மீட்டல் தொடர்பான கருத்தரங்கும் பயிற்சி வகுப்பும் இன்று செவ்வாய்க்கிழமை அராலி மேற்கிலும் மாதகல் பாணாவெட்டி அம்மன் ஆலயத்துக்கு அருகிலும் நடைபெறவுள்ளன.

அந்தந்தப் பகுதி விவசாய சம்மேளனங்கள் பயிற்சி வகுப்புகளுக்கான ஒழுங்குகளைச் செய்துள்ளன. (4-152)

## பன்னாலை பாடசாலைக்குப் புதிய அதிபர் நியமனம்

வலிகாமம் தெற்கு, செப்.14

பன்னாலை சேர்.கனகசபை வித்தியாலயத்தின் புதிய அதிபராக சி.சிவராஜன் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

மேற்படி கல்லூரி அதிபர் ஓய்வுபெற்றதைத் தொடர்ந்து ஆனைக்கோட்டை றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலை ஆசிரியர் சி.சிவராஜன் 20வருட ஆசிரிய சேவையின் பின் அதிபராக நியமனம் செய்யப்பட்டு கடந்த 10ஆம் திகதி தமது கடமையைப் பொறுப்பேற்றுள்ளார். (4-152)

## சேலைத் தலைப்பு சிக்கியதால் விபத்து

தென்மராட்சி,செப்.14

சேலைத் தலைப்பு மோட்டார் சைக்கிள் சில்லுக்குள் சிக்கிக் கொண்டதில் கணவனும் மனைவியும் தூக்கி வீசப்பட்டுக் காயமடைந்தனர். இந்தச் சம்பவம் கடந்த புதன்கிழமை இடம்பெற்றது.

மீசாலையைச் சேர்ந்த எஸ்.தங்கராசா (வயது 61), அவரது மனைவியான தங்கராசா செல்வரத்தினம் (வயது 57) ஆகியோரே காயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (4-117)

## மூலஸ்தானத்திலிருந்த இயந்திரத்தகடு திருட்டு

கொழும்புத்துறை,செப்.14

கசசேரி - நல்லூர் வீதியில் உள்ள கற்பகப் பிள்ளையார் ஆலய மூலஸ்தானத்திலிருந்த ஐம்பொன்னினாலான பெறுமதி வாய்ந்த இயந்திரத் தகடு கடந்த வாரம் திருடப்பட்டுள்ளது.

இரவு வேளையில் ஆலயத்தினுள் நுழைந்த திருடர்கள் மூலஸ்தானத்தில் இருந்த பிள்ளையார் சிலையைப் புரட்டிவிட்டு அதன்கீழிருந்த இயந்திரத்தகடு மற்றும் பொருள்களை எடுத்துச்சென்றுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

(4-30)

## மருதங்கேணி கோட்டத்துக்கு 25 ஆசிரியர்கள் நியமனம்

செம்பியன்பற்று,செப்.14

மருதங்கேணி உதவி அரச அதிபர் பிரிவிலுள்ள பாடசாலைகளுக்கு இதுவரை 25 ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

ஆசிரிய பயிற்சிக் கல்லூரியிலிருந்து வெளியேறிய 13ஆசிரியர்களும் யாழ்.கல்வியியற் கல்லூரியிலிருந்து கல்வி பயின்று வெளியேறிய 12 ஆசிரியர்களுமாக 25 ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

வடமராட்சி கிழக்கில் மீளக்குடியமர்ந்த பின் இயங்கத் தொடங்கிய பாடசாலைகளுக்கே இவ்ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். கடந்த முதலாம் திகதி இவர்கள தங்களது பொறுப்புக்களை பொறுப்பேற்றுள்ளனர்.

(எ-36)

## அபிவிருத்திப் பணிகள்

சாவகச்சேரி பிரதேசசபை நிதியிலிருந்து கைதடி நுணாவில் பகுதியில் பல அபிவிருத்தித் திட்டங்கள் செயற்படுத்தப்பட்டுள்ளன. ஒரு லட்சதது 23 ஆயிரம் ரூபா செலவில் கைதடி நுணாவில் ச.ச.நிலையமும் ஒரு லட்சத்து 10 ஆயிரம் ரூபா செலவில் குமரகுருபரன் பாலர் பாடசாலையும் 8 லட்சத்து 45 ஆயிரம் ரூபா செலவில் கைதடி நுணாவில் பாடசாலை வீதியும் செப்பனிடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை - நியாப் திட்டத்தின் கீழ சுமார் 8 லட்சம் ரூபா செலவில் நுணாவில் குளம் செப்பனிடப்பட்டு வருகிறது.(4-31)

## ஓராண்டு நினைவலைகள்

தோற்றம் 11 - 04 - 1926



மறைவு 27 - 08 - 2003

**அமரர் முருகுப்பிள்ளை நாகராசா (சிவசாமி)**

மடியிலிருத்தி கதைகள் பலகூறி பால் சோறு ஊட்டிய அப்பையா அப்பையாவே!
இனிப்புகள் பலதந்த எமக்கினிய அப்பையா அப்பையாவே!
இடைநடுவில் என்னை விட்டு போன தெங்கே அப்பையாவே!
வியக்கும் படி என்னை விட்டு போன தெங்கே?
கண்ணை இமை காப்பது போல் நீங்கள் என்னை சீராட்டி,
தாலாட்டி வளர்த்து கண்ணுக்கு எட்டாமல் போன தெங்கே
அப்பையா அப்பையாவே!
என் அன்பு அப்பையாவே!
மீண்டும் வாராயோ
எனக்கு அன்பு முத்தங்கள் தாராயோ
அப்பையா, அப்பையா எங்களை விட்டு போன தெங்கே?
நான் யாரை எனி அப்பையா என்று கூறுவேன் அப்பையா
நீங்கள் சொன்ன கதைகள் எனக்கு ஞாபகத்துக்கு வருகிறது அப்பையாவே!
நீங்கள் படிக்கும் தேவாரம் எம் ஞாபகத்துக்கு வருகிறது அப்பையாவே!
நீங்கள் படிக்கும் தேவாரம் நாம் படிப்போம் அப்பையா அப்பையாவே!
சோடிழுந்த அன்றினைப் போல துயரமானேன் தோகை மயில் வாயிலகப்பட்ட
சர்ப்பமானேன் காடுகளில் இனம் பிரிந்த களைகளானேன்
கருங்கடலில் காற்றடிக்கும் கப்பலானேன்
ஓடுகின்ற பாய்மரத்தின் குந்திய காகமானேன்
உற்றார் ஒருவரில்லா பித்தனானேன்
பாடுபட நான் அறியேன் பழனிக்கந்தா
பச்சை மயில் ஏறிவந்தே இரசிப்பாயே என்னை

*6ஆம் வட்டாரம், நயினாதீவு.* (24-26-16-18) (36377) பேரப்பிள்ளை.

## 14ஆம் ஆண்டு நினைவலைகள்

தோற்றம் 18 - 06 - 1933



மறைவு 20 - 08 - 1990

தோலகட்டி வயாவிளான்

அமரர்

**வைத்திலிங்கம் நடராசா**

(முன்னாள் பொறுப்பதிகாரி, வலி.கிழக்குப் பிரதேச சபை)

திதி: 14.09.2004

பாசமுள்ள அப்பாவே!

கனவு கண்டது போல் பதினான்கு வருடங்கள் ஓடி மறைந்தாலும் உங்கள் பாசங்கள், நினைவுகள் எங்கள் நெஞ்சங்களை விட்டு என்றும் அகலாது. வருடம் ஒன்றும் தவறாமல் கந்தன் திருநாளில் எல்லோருக்கும் நினைவுபடுத்தும்:

அன்பு மனைவி,
பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

*துஷா இல்லம்,*
*கற்பக்குனை,*
*உடுவில்.* (சி-36373) (24-16-18-26)


## LONDON ENGLISH COLLEGE

No 105(71) Arasady Road, Jaffna
T.P:- 222-5889, +94 777 252180,
+94 776 303539
e-mail:- ecjaffnabranch@yahoo.com

# ADMISSIONS ON........

English Language

**ENRICHMENT PROGRAMMES**

**FOR**

**CHILDREN**

Age Groups;- 6-7 years. 8-9 years, 10-12 years.

(சி37623)(34-16-18-26) - Principal.